VISIT…

"அவர்கள் சுரமண்டலத்தையும், தம்புருவையும், மேளத்தையும், நாகசுரத்தையும், மதுபானத்தையும் வைத்து விருந்துகொண்டாடுகிறார்கள்; ஆனாலும் கர்த்தரின் கிரியையை நோக்குகிறதுமில்லை; அவர் கரத்தின் செய்கையைச் சிந்திக் கிறதுமில்லை. . . . . அதினிமித்தம் பாதாளம் தன்னை விரிவாக்கி, தன் வாயை ஆவென்று மட்டில்லாமல் திறந்தது; அவர்கள் மகிமையும், அவர்கள் திரள்கூட்டமும், அவர்கள் ஆடம்பரமும், அவர்களில் களிகூருகிறவர்களும் அதற்குள் இறங்கிப் போவார்கள்" (ஏசாயா 6 : 12, 14).

"நீதிமான்கள் தங்கள் பிதாவின் ராஜ்யத்திலே சூரியனைப் போலப் பிரகாசிப்பார்கள்" (மத்.14:43). "இதோ மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது, அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார்; அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள், தேவன் தாமே அவர்களோடே கூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார். அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலு மில்லை, வருத்தமுமில்லை; முந்தினவைகள் ஒழிந்துபோயின" (வெளி. 21 : 3, 4).

பொருளடக்கம்

		பக்கம்
1.	ஏழு வாலிபரின் தரிசனம்	1
2.	மன்னிக்கத் தாமதியாதே!	69
3.	பிறருக்கு இடறலாயிராதே!	81
4.	தற்புகழை நாடாதே!	82
5.	பகையின் விளைவு!	83
6.	உன் மனதைத் தூய்மையாகக் காத்துக்கொள்!	84
7.	சுகபோகத்தின் அபாயம்!	85
8.	காலங்கடந்து போயிற்றே!	86
9.	மீட்கத்தக்க காலம் இதுவே!	87
10.	நற்கந்தமாய்த் திகழ்வீர்!	88
11.	மகிமையான முடிவு	90
12.	தருணத்தைத் தவறவிடாதே!	92
13.	அனுமதிச் சீட்டு எங்கே?	93
14.	தேவவைராக்கியம் உண்டோ?	94
15.	நீ என்ன செய்துகொண்டிருக்கிறாய்?	96
16.	நீ எங்கே போகிறாய்?	97

ஏழு வாலிபரின் தரிசனம்

தென் அமெரிக்காவில் உள்ள கொலம்பியாவைச் சேர்ந்த 7 வாலிபர்கள் ஒரே நேரத்தில் ஒன்றாக ஆவிக்குள்ளாக்கப்பட்டு, கர்த்தராகிய இயேசுவால் பரலோகத்திற்கும், பாதாளத்திற்கும் கொண்டு செல்லப்பட்டனர். அங்கே தாங்கள் கண்ட பரலோகத்தின் மகிமைகளையும், பாதாளத்தின் அவலநிலையையும் அவர்கள் கூறுகிறார்கள், கேளுங்கள்!

பாதாளம் பற்றிய வெளிப்படுத்தல்கள்

சாட்சி - 1

"ஐசுவரியமுள்ள ஒரு மனுஷன் இருந்தான்; அவன் இரத்தாம்பரமும் விலையேறப்பெற்ற வஸ்திரமும் தரித்து, அநுதினமும் சம்பிரமமாய் வாழ்ந்துகொண்டிருந்தான். லாசரு என்னும் பேர்கொண்ட ஒரு தரித்திரனும் இருந்தான்; அவன் பருக்கள் நிறைந்தவனாய், அந்த ஐசுவரியவானுடைய வாசலருகே கிடந்து, அவனுடைய மேஜையிலிருந்து விழுந்துணிக்கைகளாலே தன் பசியை ஆற்ற ஆசையாயிருந்தான்; நாய்கள் வந்து அவன் பருக்களை நக்கிற்று. பின்பு அந்தத் தரித்திரன் மரித்து, தேவதூதரால் ஆபிரகாமுடைய மடியிலே கொண்டுபோய் விடப்பட்டான்; ஐசுவரியவானும் மரித்து அடக்கம்பண்ணப்பட்டான். பாதாளத்திலே அவன் வேதனைப்படுகிறபோது, தன் கண்களை ஏறெடுத்து, தூரத்திலே ஆபிரகாமையும் அவன் மடியிலே லாசருவையும் கண்டான். அப்பொழுது அவன்: தகப்பனாகிய ஆபிரகாமே, நீர் எனக்கு இரங்கி, லாசரு தன் விரலின் நுனியைத் தண்ணீரில் தோய்த்து, என் நாவைக் குளிரப்பண்ணும்படி அவனை அனுப்பவேண்டும்; இந்த அக்கினிஜ்வாலையில் வேதனைப் படுகிறேனே என்று கூப்பிட்டான். அதற்கு ஆபிரகாம்: மகனே, நீ பூமியிலே உயிரோடிருக்குங் காலத்தில் உன் நன்மைகளை அனுபவித்தாய், லாசருவும் அப்படியே தீமைகளை அநுபவித்தான், அதை நினைத்துக்கொள்; இப்பொழுது அவன் தேற்றப்படுகிறான், நீயோ வேதனைப்படுகிறாய். அதுவுமல்லாமல், இவ்விடத்திலிருந்து உங்களிடத்திற்குக் கடந்துபோகவும், அவ்விடத்திலிருந்து எங்களிடத்திற்குக் கடந்துவரவும் மனதுள்ளவர்களுக்குக் கூடாதபடிக்கு, எங்களுக்கும் உங்களுக்கும் நடுவே பெரும்பிளப்பு உண்டாக்கப்பட்டிருக்கிறதுஎன்றான்" *(லூக்கா 16 : 19 - 26).*

மேற்காணும் வேதபகுதியில் கர்த்தராகிய இயேசு இரு இடங்களைப் பற்றிக் கூறுகிறார். அவை **பரதீசும் பாதாளமும்** ஆகும். இவை மரித்தவர்களின் ஆத்துமாக்கள் உயிர்த்தெழும் வரை தங்கியிருக்கும் இடங்களாகும். உயிர்த்தெழுதலுக்குப் பின்பு அந்த ஆத்துமாக்கள் தங்கள் உயிர்த்தெழுந்த சரீரத்தில் முறையே பரலோகத்திற்கும், நரகத்திற்கும் செல்லும். **'பரலோகமும் நரகமும்'** என்கிற விஷயத்தைப் பற்றி தேவனுடைய வார்த்தையாகிய பரிசுத்த வேதாகமம் மிகவும் தெளிவுள்ளதாயிருக்கிறது. ஒன்று, மீட்பு அடைந்தவர்களின் நித்திய வாசஸ்தலம்; மற்றது, ஆக்கினைத் தீர்ப்படைந்தவர்களின் நித்திய வாசஸ்தலம். இவை இரண்டிற்கும் இடைப்பட்ட ஒரு இடம் இல்லை. உத்தரிக்கும் ஸ்தலம் (Purgatory) என்ற ஒன்று இல்லை. மனிதர் உலகத்தை விட்டுக் கடந்துபோன பின்பு முழு மறதி நிலையில் இருப்பதாகக் கூறப்படும் நரகத்தின் சுற்றுப்புறப்பகுதி (Limbo) என்ற ஒரு ஸ்தலம் இல்லை. இதைப் பற்றி வேதாகமம் தெளிவாகக் கூறுகிறது.

நம்முடைய ஜீவியத்தின் நிர்ப்பந்தநிலையை மாற்றியமைக்க உறுதுணையாயிருக்கும் ஒரு பரம தரிசனத்தைத் தேவன் எங்களுக்கு அளித்தார். அது, நாங்கள் அப்போதுதான் தேவனைப் பற்றியும் அவருடைய வார்த்தையைப் பற்றியும் அறியவந்த ஆரம்ப காலம். இந்த வெளிப்படுத்தலை உலகிற்கு அறிவிக்கும் சிலாக்கியத்தையும் மாபெரும் உத்தரவாதத்தையும் தேவன் ஏழு வாலிபர்களாகிய எங்களுக்கு அளித்திருக்கிறார்.

ஏப்ரல் 11, 1995 அன்று காலை 10 மணியளவில் இவை யாவும் ஆரம்பமாயின. அன்று பிற்பகல் ஒரு சுற்றுலா செல்லும்படியான ஆயத்தத்துடன், அக்காலை வேளையில் நாங்கள் ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தோம். திடீரென 10 மணியளவில் மிகவும் பிரகாசமான, வெண்மையான ஒரு ஒளி ஒரு ஜன்னலினூடாக எங்கள் அறைக்குள் பிரகாசித்தது. அந்த ஒளி தோன்றியபோது, நாங்கள் யாவரும் அந்நிய பாஷைகளில் பேச ஆரம்பித்தோம்; பரிசுத்த ஆவியினால் நாங்கள் நிரப்பப்பட்டோம்.

அந்நேரத்தில் நாங்கள் கண்ட காட்சி எங்கள் கண்களைக் கவர்ந்துகொண்டது; நாங்கள் யாவரும் பிரமிப்படைந்தோம். அந்த மகிமையான ஒளி முழு அறையையும் பிரகாசிப்பித்துக் கொண்டிருந்தது. அவ்வொளியானது சூரிய வெளிச்சத்தைப் பார்க்கிலும் மிகவும் பலம் வாய்ந்ததாய் இருந்தது. அந்த ஒளியின் மத்தியில் வெண்ணுடை தரித்த ஒரு கூட்டம் தேவதூதர்களை நாங்கள் கண்டோம். அத்தேவதூதர்கள் மிகுந்த சௌந்தரியமுள்ளவர்களாயும், உயரமுள்ளவர்களாயும், பார்ப்பதற்கு மிகவும் அழகானவர்களாயும் இருந்தனர்.

அந்தத் தூதர்களின் நடுவில் பரவசமளிக்கக்கூடிய ஒரு காட்சியை நாங்கள் கண்டோம். மனித சாயலில் ஒருவர் அவர்கள் நடுவே இருந்தார். தூய வெண்மை நிறமுள்ள அங்கியும் சால்வையும் அணிந்திருந்த விசேஷமான ஒரு நபர் அவர். அவரது முகரூபம் மிகவும் பிரகாசமானதாயிருந்தபடியால், அவரது முகத்தை எங்களால் ஏறிட்டுப் பார்க்கக் கூடாதிருந்தது. அவர் மார்பருகே பொற்கச்சை அணிந்திருந்தார். அதில், **'ராஜாதிராஜா, கர்த்தாதி கர்த்தா'** என்ற பொன் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டிருந்தன. அவர் பசும்பொன்னாலான பாதரட்சைகளை அணிந்திருந்தார். அவருடைய அழகுக்கு நிகரில்லை. அவருடைய சமுகத்தைக் கண்டபோது நாங்கள் யாவரும் முழங்காற்படியிட்டு அவரைப் பணிந்துகொண்டோம்.

அப்போது அவருடைய சத்தத்தை நாங்கள் கேட்கலானோம். அவருடைய சத்தம் மிகவும் தனித்தன்மை வாய்ந்த ஒன்றாய் இருந்தது. அது ஆச்சரியமானதொரு இனிய குரலாய் இருந்தது. அவர் பேசிய ஒவ்வொரு வார்த்தையும் இருபுறமும் கருக்குள்ள ஒரு பட்டயம் போல எங்கள் உள்ளத்திற்குள் துளைத்துச் சென்றது. சரியாக எபிரெய 4: 12-இல் எழுதப்பட்டிருக்கிற வண்ணமாகவே அது இருந்தது. மிகவு எளிமையான, ஆனால் வல்லமை மிக்க வார்த்தைகளில் அவ பேசினார். அவர் எங்களோடு பேசிய இவ்வார்த்தைகளை நாங்கள எங்கள் காதுகளால் கேட்டோம்: **'என் சிறுபிள்ளைகளே, பயப்படாதீர்கள்; நான் நசரேயனாகிய இயேசு! நான் உங்களுக்கு ஒரு இரகசியத்தைக் காண்பிக்கும்படியாகவே உங்களைச் சந்திக்க வந்திருக்கிறேன். அதை நீங்கள் நகரங்களுக்கும், நாடுகளுக்கும், பட்டணங்களுக்கும், சபைகளுக்கும், மற்றும் எல்லா இடங்களுக்கும் தெரிவிக்க வேண்டும். நான் எங்கே போகச் சொல்கிறேனோ, அங்கே செல்லுங்கள்; நான் எங்கே போக வேண்டாமென்று சொல்கிறேனோ, அங்கே போகாதிருங்கள்.'**

"அதற்குப் பின்பு நான் மாம்சமான யாவர்மேலும் என் ஆவியை ஊற்றுவேன்; அப்பொழுது உங்கள் குமாரரும் உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள்; உங்கள் மூப்பர் சொப்பனங்களையும், உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள்" (யோவேல் 2:28) என தேவனுடைய வார்த்தையாகிய பரிசுத்த வேதாகமம் கூறுகிறது. இந்தக் காலகட்டத்தை ஒவ்வொருவருக்காகவும் தேவன் ஆயத்தமாக்கிக் கொண்டிருக்கிறார்.

பிற்பாடு ஏதோ நூதனமான ஒரு காரியம் சம்பவித்தது. எங்கள் அறையின் மத்தியில் ஒரு கற்பாறை தோன்றிற்று. எங்களோடிருந்த கர்த்தர் அக்கற்பாறையின் மேல் எங்களை ஏறப்பண்ணினார். அந்தக் கற்பாறை, தரையிலிருந்து சுமார் எட்டு அங்குலம் உயரத்தில் இருந்தது.

தரையில் ஒரு பெரிய துவாரம் உண்டாயிற்று. அது ஒரு பெரும், கருமை நிறமான, பயங்கரமான, உள்ளீடற்ற ஒரு ஆழமான கிடங்கு அல்லது குகை போலிருந்தது. வெகுவிரைவில் நாங்கள் அக்கற்பாறையின் மேல் இருந்த வண்ணமாகவே அக்குழியினூடாகக் கீழே கொண்டுசெல்லப்பட்டோம். அது மிகவும் அந்தகாரமாயிருந்தது. அவ்வழி எங்களைப் பூமிக்குள் அதன் மையப்பகுதிக்குக் கொண்டு சென்றது.

அந்தக் காரிருளுக்குள் இருந்தபோது நாங்கள் மிகவும் அதிகமாகப் பயந்துவிட்டோம். நாங்கள் மிகவும் அதிகமாகப் பயமடைந்திருந்ததால் கர்த்தரிடத்தில், 'ஆண்டவரே, நாங்கள் அந்த இடத்திற்குச் செல்ல விரும்பவில்லை; எங்களை அந்த இடத்திற்குக் கொண்டுபோகாதிரும்! இங்கிருந்து எங்களை வெளியே கொண்டுவந்துவிடும்' என மன்றாடினோம். கர்த்தரோ மிகுந்த மனதுருக்கமுள்ள இனிய குரலில், **'நீங்கள் கண்டுணர்ந்து மற்றவர்களுக்கும் சொல்லும்படியாக இந்த அனுபவம் உங்களுக்குத் தேவையாயிருக்கிறது'** என்று எங்களுக்குப் பதிலளித்தார்.

நாங்கள் கொம்பு வடிவிலான ஒரு குகைக்குள் இருந்தோம். அங்கு நாங்கள் உற்று கவனித்தபோது, அங்குமிங்கும் நடமாடிக்கொண்டிருந்த உருவங்களும், பிசாசுகளும், நிழல்களும் எங்கள் கண்களுக்குப் புலப்பட்டன. நாங்கள் கீழ்நோக்கி இன்னும் இன்னும் ஆழமாகப் போய்க் கொண்டேயிருந்தோம். சில வினாடிகளுக்குள்ளாக, நாங்கள் ஒரு வெறுமையையும் பெரும் பயத்தையும் உணர்ந்தோம்.

பின்பு நாங்கள் சில குகைகளை - மீண்டுவர முடியாத சிக்கலான வழிகளைப் போன்ற பயங்கரமான வாசல்களைச் சென்றடைந்தோம். அவற்றிற்குள் பிரவேசிக்க எங்களுக்கு விருப்பமில்லாதிருந்தது. எங்களைத் திக்குமுக்காடச் செய்த பயங்கரமான துர்நாற்றமும் வெப்பமும் அங்கிருந்ததை நாங்கள் உணர்ந்தோம். நாங்கள் அதினுள் நுழைந்தவுடன்தானே அங்கு பயங்கரமானவைகளைக் கண்டோம். அவை அச்சுறுத்தும் உருவங்கள்! அந்த இடம் முழுவதுமாக அக்கினி ஜுவாலைகளால் சூழப்பட்டிருந்தது. அந்த அக்கினி ஜுவாலைகளின் நடுவே ஆயிரக்கணக்கான ஜனங்களின் 'ஆவிசரீரங்கள்' இருந்தன. அவர்கள் மிகுந்த வேதனையினால் துடித்துக்கொண்டிருந்தனர். அக்காட்சி பார்ப்பதற்கு மிகவும் பயங்கரமாயிருந்தது. எங்களுக்குக் காண்பிக்கப்பட்டவைகளை நாங்கள் பார்க்க விரும்பவில்லை. பல வேதனைகளும் துன்பங்களுமுள்ள அந்த இடம் பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. நாங்கள் பார்க்கும்படி கர்த்தர் அனுமதித்த முதல் பிரிவுகளில் ஒன்று, இலட்சக்கணக்கான கொப்பரைகள் நிறைந்த ஓரிடமாகும். [இந்த

இடத்திற்கு நாங்கள் 'கொப்பரைகளின் பள்ளத்தாக்கு' (Valley of the Cauldrons) என்று பெயரிடுகிறோம்]. அந்தக் கொப்பரைகள் தரைமட்டத்திலிருந்து உட்புறமாகவே அமைந்திருந்தன. ஒவ்வொன்றும் உள்ளே எரிமலைக் குழம்புடன் எரிந்துகொண்டிருந்தன. அந்தக் கொப்பரைகள் ஒவ்வொன்றிற்குள்ளும் ஏற்கனவே மரித்துப் பாதாளத்திற்குப் போயிருக்கும் ஒரு நபரின் ஆத்துமா இருந்தது.

அந்த ஆத்துமாக்கள் கர்த்தரைக் கண்ட மாத்திரத்தில், 'கர்த்தாவே, எங்கள்மேல் இரக்கமாயிரும்! கர்த்தாவே, இந்த இடத்திலிருந்து வெளியே வர எனக்கு ஒரு தருணம் தாரும்! கர்த்தாவே, இங்கிருந்து என்னை வெளியே கொண்டுவாரும், நான் இந்த இடம் உண்மையானது என்று உலகிற்குச் சொல்லுவேன்!' என்று கூச்சலிட்டு அலற ஆரம்பித்தன. ஆனால் கர்த்தரோ அவர்களைப் பார்க்கக்கூட இல்லை. அந்த இடத்தில் இலட்சக்கணக்கான ஆண்களும், பெண்களும், வாலிபரும் இருந்தனர். ஓரினச் சேர்க்கையில் ஈடுபட்டவர்களும் (Homosexuals), குடியரும் அங்கு வாதிக்கப்படுவதையும் நாங்கள் கண்டோம். இவர்கள் எல்லாரும் அவ்வளவு கடும் வேதனையினால் அலறுவதை நாங்கள் கண்டோம்.

அவர்களுடைய 'ஆவிசரீரங்கள்' எவ்விதமாக அழிவுறுகின்றன என்பதைக் காண்பது எங்களுக்கு அதிர்ச்சியூட்டுவதாயிருந்தது. அவர்களுடைய வெறுமையான கண்குழிகளுக்குள்ளிருந்தும், வாய்களிலிருந்தும், காதுகளிலிருந்தும் புழுக்கள் வெளியே வருவதும், உள்ளே செல்வதுமாய் இருந்தன. அவர்களுடைய உடலெங்கும் அப்புழுக்கள் தோலைத் துளைத்துச் சென்றுகொண்டிருந்தன. ஏசாயா 66:24, மாற்கு 9:44 ஆகிய வேதபகுதிகளில் எழுதப்பட்டுள்ள தேவனுடைய வார்த்தையை இது நிறைவேற்றுகிறது: "அவர்கள் வெளியே போய் எனக்கு விரோதமாய்ப் பாதகஞ்செய்த மனுஷருடைய பிரேதங்களைப் பார்ப்பார்கள்; அவர்களுடைய பூச்சி சாகாமலும், அவர்களுடைய அக்கினி அவியாமலும் இருக்கும்; அவர்கள் மாம்சமான யாவருக்கும் அரோசிகமாயிருப்பார்கள்"; "அங்கே அவர்கள் புழு சாவாமலும் அக்கினி அவியாமலுமிருக்கும்". நாங்கள் பார்த்துக் கொண்டிருந்தவைகளினால் நாங்கள் பீதியடைந்தோம். அங்கு எரிந்து கொண்டிருந்த அக்கினியின் ஜுவாலைகள் 9 அடி முதல் 12 அடி வரை உயரமுள்ளவையாய் இருந்தன. அந்த ஒவ்வொரு ஜுவாலைக்குள்ளும் ஏற்கனவே மரித்துப் பாதாளத்திற்குப் போயிருக்கும் ஒரு நபரின் ஆத்துமா இருந்தது.

கொப்பரைகளில் ஒன்றினுள் இருந்த ஒரு மனிதனை நாங்கள் பார்க்கும்படி கர்த்தர் எங்களை அனுமதித்தார். அவன் தலைகீழாகத் தொங்கிக்கொண்டிருந்தான்; அவனுடைய முகத்தின் தசையானது நுண்டு துண்டாகக் கீழே விழுந்துகொண்டிருந்தது. அவன் கர்த்தரை

ஒரு உள்ளார்ந்த நோக்கத்துடன் உற்றுநோக்கிக்கொண்டே இருந்தான். பின்பு அவன் இயேசுவின் நாமத்தைச் சொல்லிக் கூப்பிட ஆரம்பித்தான். அவன், 'கர்த்தாவே, இரக்கமாயிரும்! கர்த்தாவே, எனக்கு ஒரு சந்தர்ப்பம் தாரும்! கர்த்தாவே, என்னை இந்த இடத்திலிருந்து வெளியே கொண்டுபோய்விடும்!' என்று கதறினான். ஆனால் கர்த்தராகிய இயேசுவோ அவனை நோக்கிப்பார்க்க மனதற்றவராய், தமது முகத்தை அவனுக்கு விலக்கி, திரும்பிச் சென்றுவிட்டார். அவர் அப்படிச் செய்தபோது அம்மனிதன் அவரைச் சபிக்கவும், தூஷிக்கவும் தொடங்கினான். அவன் இப்பூமியில் ஜீவித்த காலத்தில் சாத்தான் கூட்ட இசைக்குழுவின் அங்கத்தினனாயிருந்து, கர்த்தரைப் பரிகசித்து, அவரை ஏளனமாகப் பேசிய ஒரு மனிதனாவான். கிறிஸ்தவமதம் மறைந்துபோகப்போகிறது என்றும், இயேசு கிறிஸ்து எல்லாராலும் மறக்கப்பட்டுப்போய்விடுவார் என்றும் அவன் கூறியிருக்கிறான். ஆனால் இன்று இம்மனிதன் பாதாளத்தில் இருக்கிறான்; இயேசு கிறிஸ்துவோ ஜீவிக்கிறார்! கிறிஸ்தவ மார்க்கமும் ஒழிந்து போகவில்லை!

அவ்விடத்தின் ஓரமாக நாங்கள் நடக்க ஆரம்பித்தபோது, அங்கிருந்த ஆத்துமாக்கள் தங்கள் கரங்களை எங்கள் பக்கமாக நீட்டி, தயவுகூர்ந்து தங்களை அவ்விடத்தினின்று தப்புவிக்கும்படி கெஞ்சின. தங்களை அங்கிருந்து வெளியே கொண்டுவரும்படி அவைகள் கர்த்தராகிய இயேசுவிடம் மன்றாடின. ஆனால் அவரோ அவைகளைத் திரும்பிக்கூட பார்க்கவில்லை! *(நீதி 1:24-31).*

இதன் பின்னர் நாங்கள் பாதாளத்தின் பல்வேறு பிரிவுகளுக்குச் சென்றோம். பாதாளத்தின் மிகவும் பயங்கரமான ஒரு பிரிவுக்கு நாங்கள் வந்தோம். அங்கு மிக மோசமான வேதனைகள் இருந்தன. நரகத்தின் மையப்பகுதி அது! அங்கு வேதனை மிகவும் பூரணமான அளவில் இருந்தது. ஒரு மனிதனால் விவரிக்க முடியாத அளவுக்கு அவ்வளவு கடும் வேதனைகள்! அங்கிருந்த ஒரே கூட்டத்தார் யார் தெரியுமா?, கர்த்தராகிய இயேசுவையும் தேவனுடைய வார்த்தையையும் அறிந்தவர்களே! **பாஸ்டர்மாரும், சுவிசேஷகர்களும், மிஷனரிமாரும், ஒரு முறை கர்த்தராகிய இயேசுவை ஏற்றுக்கொண்டவர்களும் சத்தியத்தை அறிந்தவர்களுமாயிருந்துகொண்டு, இரட்டை வாழ்க்கை வாழ்ந்த எல்லாவிதமான ஜனங்களும், பின்மாற்றக்காரருமே அங்கிருந்தனர்.** அவர்களுடைய வேதனை பாதாளத்திலிருந்த மற்ற எவரையும் பார்க்கிலும் ஆயிரம் மடங்கு மோசமானதாயிருந்தது. அவர்கள் கர்த்தரிடம் இரக்கத்திற்காகக் கெஞ்சிக் கதறிக் கொண்டிருந்தனர். ஆனால் "சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ்செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனியிராமல், நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும்

கோபாக்கினையுமே இருக்கும்" (எபி. 10:26, 27) என்று கர்த்தருடைய வசனம் கூறுகிறதே!

அந்த ஆத்துமாக்கள் ஏன் அங்கே இருந்தார்களென்றால், அவர்கள் ஆலயத்தில் இருந்தபோது பிரசங்கம் செய்தனர், உபவாசித்தனர், பாடல்கள் பாடினர், தங்கள் கரங்களை உயர்த்தி கர்த்தரைத் துதித்தனர்; ஆனால் தங்கள் வீடுகளிலும், வீதிகளிலும் அவர்கள் விபசாரம் பண்ணினர், வேசித்தனம் செய்தனர், பொய் பேசினர், திருடினர்! நாம் தேவனிடத்தில் பொய் சொல்ல முடியாது. எவனிடத்தில் அதிகம் கொடுக்கப்படுகிறதோ, அவனிடத்தில் அதிகம் கேட்கப்படும் என்று வேதாகமம் கூறுகிறது (லூக்கா 12 : 48).

பின்பு நாங்கள் அங்கு இரு பெண்களைப் பார்க்கும்படி தேவன் அனுமதித்தார். அவர்கள் ஒரு காலத்தில் பூமியில் ஜீவித்தபோது **கிறிஸ்தவ சகோதரிகளாயிருந்தனர்; ஆனால் கர்த்தருக்கு முன்பாக அவர்கள் நீதியுள்ள ஒரு ஜீவியம் செய்யவில்லை.** ஒருத்தி மற்ற பெண்ணை நோக்கி, 'சபிக்கப்பட்ட நிர்ப்பந்தமான ஸ்திரீயே! நீ செய்த தவற்றினால்தான் நான் இந்த இடத்தில் இருக்கிறேன்! நீ எனக்கு ஒரு பரிசுத்தமான சுவிசேஷத்தை அறிவிக்கவில்லை! நீ எனக்குச் சத்தியத்தைச் சொல்லாதபடியினாலேயே நான் இப்போது இங்கே நரக பாதாளத்தில் இருக்கிறேன்!' என்று அலறினாள். அக்கினி ஜுவாலைகளின் மத்தியில் இருந்துகொண்டு அவர்கள் இருவரும் இவ்வாறு ஒருவரோடொருவர் சண்டையிட்டுக் கொண்டேயிருந்தனர். பாதாளத்தில் அன்போ, இரக்கமோ, மன்னிப்போ இல்லையாதலால் அவர்கள் ஒருவரையொருவர் பகைத்துக்கொண்டே அங்கு இருந்தனர்.

தேவனுடைய வார்த்தையை அறிந்திருந்தும், அவருடைய பரிசுத்த சமுகத்துக்கு முன்பாகத் தங்கள் ஜீவியத்தில் சுத்தமில்லாதவர்களாய் இருந்த **ஆயிரக்கணக்கான** ஆத்துமாக்கள் அங்கு இருந்தனர். கர்த்தர், **"நீங்கள் தேவனோடு விளையாட முடியாது; நரக அக்கினியின் ஜுவாலைகளோடும் நீங்கள் விளையாட முடியாது"** என்றார். மேலும் அவர் எங்களை நோக்கி, **'என் பிள்ளைகளே, இப்பூமியிலுள்ள வேதனைகள் யாவும் ஒரிடத்தில் ஒருமிக்கக் கூட்டப்பட்டு, அவை யாவும் நரகத்தின் மிகச் சிறியதொரு பகுதியில் ஒரு நபர் அனுபவிக்கும் வேதனைகளோடு ஒப்பிடப்படுமாகில், இவ்வுலகின் பாடுகளெல்லாம் ஒன்றுமில்லை, ஒன்றுமில்லை என்றே கூறத்தக்கதாயிருக்கும்'** என்று கூறினார். நரகத்திலிருந்துகொண்டு அதன் வேதனைகளில் மிகச் சிறியதொரு பகுதியை மட்டுமே அனுபவிப்பவர்களுக்கே அது அவ்வளவு பயங்கரமானதாயிருக்குமாயின், ஒரு முறை கர்த்தருடைய வார்த்தையை அறிந்து, பின்பு அதினின்று புறம்பே சென்றுவிட்டவர்களாக நரகத்தின் மையப்பகுதியில்

இருப்பவர்களின் வேதனை எவ்வளவு மோசமானதாயிருக்கும்! பின்பு கர்த்தர் எங்களை நோக்கி, **'பூமியிலுள்ள அக்கினியோடு வேண்டுமானால் நீங்கள் விளையாடலாம்; ஆனால் நரக அக்கினியோடு நீங்கள் ஒருக்காலும் விளையாட முடியாது'** என்றார்.

பாதாளத்திலிருந்த ஆத்துமாக்கள் தாங்க முடியாத தாகத்தினால் தண்ணீருக்காகத் தவித்து வேதனைப்பட்டனர்; ஆனால் எந்த விதத்திலும் அவர்களுடைய தாகம் தீர்க்கப்பட முடியாது. லாசருவும் ஐசுவரியவானும் பற்றி வேதாகமம் கூறுகிறது போல (லூக்கா 16 : 19). பாதாளத்திலிருந்த ஐசுவரியவான் ஒரே ஒரு துளி தண்ணீர் தனக்கு வேண்டுமென்று கோரினான். அது கிடைத்திருந்தால் அதுவே அவனுக்குப் போதுமானதாய் இருந்திருக்கும். "அதின் ஆறுகள் பிசினாகவும், அதின் மண் கந்தகமாகவும் மாறி, அதின் நிலம் எரிகிற கீலாய்ப்போம். இரவும் பகலும் அது அவியாது; அதின் புகை என்றென்றைக்கும் எழும்பும்; தலைமுறை தலைமுறையாக அது பாழாயிருக்கும்; சதாகாலம் சதாகாலமாக அதை ஒருவரும் கடந்துபோவதில்லை" (ஏசா 34 : 9, 10) என்று கர்த்தருடைய வசனம் கூறுகிறது.

அந்த இடத்தில், ஒவ்வொரு ஆத்துமாவும் அக்கினியின் நடுவில்தான் இருந்தது. அக்கினியின் மத்தியில் பளிங்கு போல் தெளிவான தண்ணீருள்ள நதிகள் பாய்ந்து கொண்டிருப்பது போன்ற ஒரு 'கானல் நீர்' தோற்றம் அங்கிருந்தவர்களின் கண்களுக்குத் தென்பட்டது. ஆனால் அவர்கள் அவைகளை அடையும்படி ஆவலுடன் நெருங்கிச் சென்றபோதோ, அந்த நதிகள் அக்கினியாக மாறிவிட்டன. மேலும் அவர்கள் தண்ணீரைத் தருகிற கனிகளைக் கொண்ட மரங்களையும் அக்கினியின் நடுவே கண்டனர். ஆனால் அவர்கள் அந்தக் கனிகளைப் பறிக்க முற்பட்டபோது, அவை அவர்களுடைய கைகளை வெந்துபோகச் செய்துவிட்டன; அப்போது பிசாசுகள் அவர்களைப் பரியாசம் செய்தன.

நாங்கள் இன்னும் பல்வேறு இடங்களுக்கு நடந்து சென்றுகொண்டிருந்தோம். அவ்விடங்களில் கர்த்தர் பல்வேறு ஜனங்களை எங்களுக்குக் காண்பித்துக்கொண்டே வந்தார். அந்த இடங்களிலிருந்த ஜனங்கள் அனைவருக்கும் சுமார் ஆறு வெவ்வேறு விதமான வேதனைகள் இருப்பதை நாங்கள் காணக்கூடியதாயிருந்தது. பிசாசுகள் எல்லாவிதமான தண்டனைகளாலும் வாதிக்கும் ஆத்துமாக்கள் அங்கிருந்தன. மற்றொரு பயங்கரமான தண்டனை யாதெனில், அவர்களுடைய சொந்த மனச்சாட்சியினால் அவர்கள் வாதிக்கப்பட்டதே — 'அவர்கள் உனக்குப் பிரசங்கித்தபோது தேவனுடைய வசனத்தை நீ கேட்டபோது, நரகத்தைப் பற்றி அவர்கள்



கானல் நீரும், கனிமரத் தோற்றமும்

உன்னிடம் சொன்னபோது..... நீ அவற்றைப் பற்றி நகைத்தாயே! அதை நினைத்துப்பார்! நினைத்துப்பார்! நினைத்துப்பார்!' என்று கூறி அது அவர்களைச் சதாகாலமும் வாதித்துக்கொண்டேயிருந்தது. அவர்களுடைய உடல் முழுவதுமாகப் புழுக்கள் அங்குமிங்கும் துளைத்துச் சென்று கொண்டிருந்தது போலவும், நமக்குத் தெரிந்திருக்கிற அக்கினியின் உஷ்ணத்தைப் பார்க்கிலும் ஆயிரமாயிரக்கணக்கான மடங்குகள் அதிகமான பட்சிக்கும் அக்கினி தகித்துக்கொண்டிருந்தது போலவும், அவர்களுடைய சொந்த மனச்சாட்சி அவர்களை வாதித்துக்கொண்டிருந்தது. பிசாசானவன் தன்னைத் தேடுகிறவர்களுக்கும், தன்னைப் பின்பற்றுகிறவர்களுக்கும் தரும்படி வைத்திருக்கும் பிரதிபலன் இதுதான்! "பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலைபாதகரும், விபசாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள்" (வெளி 21 : 8) என்று கர்த்தருடைய வசனம் கூறுகிறது.

பிற்பாடு அங்கு கர்த்தர் எங்களுக்கு ஒரு மனிதனைக் காண்பித்தார். **அவன் ஆறு பேரைக் கொலை செய்தவனாயிருந்தான்.** அந்த ஆறு பேரும் இப்போது பாதாளத்தில் அவனைச் சூழ்ந்துகொண்டு, 'நாங்கள் யாவரும் இந்த இடத்தில் இருப்பதற்குக் காரணம் நீயே! அது உன்னுடைய குற்றம்தான்' என்று அவனை நோக்கிக் கூக்குரலிட்டுக்கொண்டிருந்தனர். அவர்களுடைய வார்த்தைகளைக் கேட்க விரும்பாத அந்தக் கொலைபாதகன் தன் காதுகளை அடைத்துக்கொள்ளப் பிரயாசப்பட்டான்; ஆனால் அவனால் அவர்களது சத்தத்தைத் தவிர்க்க முடியவில்லை; ஏனெனில் நரக பாதாளத்தில் ஒருவனது ஆவிசரீரத்தின் புலன்கள் யாவும், பூமியிலுள்ள அவனது மாம்சசரீரத்தின் புலன்களைப் பார்க்கிலும் அதிக உணர்வுள்ளவையாயிருக்கும்!

பின்பு, அது வரை நாங்கள் கண்ட எல்லா இடங்களையும் பார்க்கிலும் மிகவும் மோசமான ஓர் இடத்திற்குக் கர்த்தர் எங்களைக் கொண்டுசென்றார். அங்கே அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலை நாங்கள் கண்டோம். அந்தக் கடலின் ஒரு பகுதியில் அதை விட சற்று சிறிதான ஒரு கடல் இருந்தது. அதில் கோடிக்கோடிக்கணக்கான ஆத்துமாக்கள் இருந்துகொண்டு, 'எங்கள் மேல் இரக்கமாயிரும்' என கர்த்தரை நோக்கிக் கெஞ்சிக் கதறினர். அவர்கள் அவரை நோக்கி, 'கர்த்தாவே, தயவுசெய்து இந்த இடத்திலிருந்து ஒரு சிறிதளவு நேரமாவது, ஒரு நொடிப்பொழுதாவது எங்களை வெளியே கொண்டுபோய்விடும்! வெளியே செல்லும்படி எனக்கு ஒரு தருணம் தாரும்!' என மன்றாடினர். இருப்பினும், அவர்களுக்காகக் கர்த்தர்

ஒன்றும் செய்யக் கூடாதவராயிருந்தார். ஏனெனில் அவர்களுடைய நியாயத்தீர்ப்பு ஏற்கனவே நியமிக்கப்பட்டாயிற்று.

அக்கினிக்கடலில் இருந்த கோடிக்கணக்கானவர்களின் மத்தியிலிருந்த ஒரு மனிதன் மேல் கவனம் செலுத்த கர்த்தர் எங்களை அனுமதித்தார். அவனுடைய சரீரம் பாதியளவுக்கு அக்கினிக் கடலுக்குள் மூழ்கியிருந்தது. அவனுடைய நினைவுகளை அறிந்து, விளங்கிக்கொள்ள கர்த்தர் எங்களுக்கு உதவி செய்தார். அம்மனிதனுடைய பெயர் மாற்கு என்பதாகும். அவன் தன்னுடைய நினைவுகளில் தனக்குத் தானே சொல்லிக்கொண்டவைகளைப் பற்றி நாங்கள் ஆச்சரியமடைந்தோம். நாங்கள் கேட்கக் கூடியதாயிருந்த அவனுடைய சிந்தனைகளிலிருந்து நித்தியமானதொரு பாடத்தை நாங்கள் கற்றுக்கொண்டோம். அவனுடைய சிந்தனைகள் இவைகளே: **'உங்களுடைய இடத்தில் இப்போது நான் இருக்கக்கூடுமானால், அப்படி இருப்பதற்கு எந்தக் கிரயமும் செலுத்த நான் ஆயத்தமாயிருக்கிறேன்! ஒரே ஒரு நிமிடம் மாத்திரம் நான் பூமிக்குத் திரும்பிச் செல்லக்கூடுமாயின், அதற்காக எந்தக் கிரயமும் செலுத்த நான் ஆயத்தமாயிருக்கிறேன்! உலகில் நான் யாவரிலும் மிகவும் நிர்ப்பந்தமான ஒரு மனிதனாகவோ, மிகவும் கொடிய வியாதியுள்ள ஒருவனாகவோ, எல்லாராலும் வெறுக்கப்பட்ட ஒரு மனிதனாகவோ, அல்லது யாவரிலும் தரித்திரனான ஒரு மனிதனாகவோ இருக்க நேர்ந்தாலும் அது எனக்கு ஒரு பொருட்டல்ல; பூமிக்குத் திரும்பிச் செல்லக் கூடுமாயின், அதற்காக நான் எதையும் கொடுக்க ஆயத்தமாயிருக்கிறேன்..... பூமியில் ஒரே ஒரு நிமிடம் இருப்பதற்கு மட்டும்!'** கர்த்தராகிய இயேசு என் கரத்தைப் பிடித்துக் கொண்டிருந்தார். மாற்கு என்பவனின் இந்தச் சிந்தனைக்கு மறுமொழியாகக் கர்த்தராகிய இயேசு, **'மாற்குவே, ஒரே ஒரு நிமிடமாகிலும் நீ பூமிக்குத் திரும்பிச் செல்ல விரும்புவதின் காரணம் என்ன?'** என்று கேட்டார். அப்போது அவன் வேதனை மிகுந்த குரலில் அவரை நோக்கி, **'கர்த்தாவே! நான் எந்தக் கிரயம் வேண்டுமானாலும் செலுத்தி, ஒரே ஒரு நிமிடம் பூமிக்குத் திரும்பிச் செல்ல விரும்புவது வேறு எதற்காகவும் அல்ல, நான் இரட்சிக்கப்படுவதற்காகவே!'** என்று அலறினான்.

மாற்கு சொன்னதைக் கர்த்தர் கேட்டபோது, அவருடைய காயங்களிலிருந்து இரத்தம் பாய்ந்து வருவதையும், அவருடைய கன்னங்களைக் கண்ணீர் நிரப்புவதையும் நான் கண்டேன். அத்துடன் அவர், **'மாற்குவே, இப்போது உனக்குக் காலம் கடந்துவிட்டது! புழுக்களே உன் படுக்கையாக நியமிக்கப்பட்டுவிட்டது; பூச்சிகள் உனக்குப் போர்வையாய் இருந்து உன்னை மூடிக்கொள்ளும்'** (ஏசாயா 14 : 11) என்றார். அவர் அவனிடம் இதைச் சொன்னவுடன் என்றென்றுமாக

அக்கினிக் கடலுக்குள் அமிழ்ந்திருக்கும்படி அவன் அதினுள் மூழ்கிவிட்டான். துக்ககரமான விஷயம் யாதெனில், பாதாளத்தில் இருக்கும் அந்த ஆத்துமாக்கள் யாவற்றிற்கும் இனி யாதொரு நம்பிக்கையும் இல்லை என்பதே! பூமியிலிருக்கிற நமக்கு மட்டுமே இன்று மனந்திரும்பும்படியாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவோடு பரலோகத்திற்குச் செல்லும்படியாகவும் தருணம் அளிக்கப்பட்டிருக்கிறது.

இப்போது என் சகோதரி இந்தச் சாட்சியின் தொடர்ச்சியை உங்களோடு பகிர்ந்துகொள்ளும்படி அவளுடன் உங்களை விட்டு விடைபெறுகிறேன். நன்றி.

சாட்சி – 2

அருமையானவர்களே, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. "வானங்களைத் தாழ்த்தி இறங்கினார்; அவர் பாதங்களின் கீழ் காரிருள் இருந்தது" (சங். 18 : 9). கர்த்தர் என்னை நோக்கித் தமது கரத்தை நீட்டியபோது நான் அவருடைய கரத்தைப் பற்றிக்கொண்டேன். நாங்கள் அந்தக் குகை வழியாக இன்னும் கீழ்நோக்கி இறங்க ஆரம்பித்தோம். கர்த்தரின் கரத்தைப் பிடித்திராத என்னுடைய மற்ற கையைக் கூட என்னால் காணக்கூடாமற் போகுமளவிற்கு அந்தக் குகையானது வரவர அதிகமதிகமாக இருண்டுகொண்டே போனது.

திடீரென நாங்கள் மிகவும் அந்தகாரமானதும், அவ்வப்போது பளிச்சிட்டு மின்னுகிறதுமான ஏதோ ஒன்றைக் கடந்துபோனோம். அது ஒருவித ஓசையை எழுப்பிக்கொண்டிருந்தது. என் கரம் குகையின் சுவர்களையாகிலும் தடவிக் கண்டுபிடிக்கக் கூடாத அளவுக்கு அங்கிருந்த காரிருள் அடர்த்தியானதாய் இருந்தது. என் ஆத்துமா என் சரீரத்தை விட்டுப் பிரிவது போல நான் உணரத்தக்க அளவிற்கு நாங்கள் இறங்கிச் சென்றுகொண்டிருந்த வேகம் மிகவும் அதிகமானதாயிருந்தது.

வெகுவிரைவிலே மிகுந்த துர்நாற்றம் வீசுவதை நான் உணர்ந்தேன். அது அழுகிப்போன மாம்சத்தின் நாற்றம் போல இருந்தது. வினாடிதோறும் அந்தத் துர்நாற்றம் அதிகரித்துக்கொண்டே இருந்தது. பின்பு நான் கோடிக்கணக்கான ஆத்துமாக்கள் இடும் சத்தத்தைக் கேட்டேன். அவை முடிவில்லாமல் அலறிக்கொண்டும், கூக்குரலிட்டுக்கொண்டும், புலம்பிக்கொண்டும் இருந்தன. அதைக் கண்டு நான் மிகவும் பயந்துபோய், கர்த்தரிடமாகத் திரும்பி, 'கர்த்தாவே, நீர் என்னை எங்கே கொண்டு செல்லுகிறீர்? என்மேல் இரக்கமாயிரும். தயவு கூர்ந்து என்மேல் இரக்கமாயிரும்' என்று கூறினேன். அவரோ, **'மற்ற எல்லாருக்கும் நீ இதைச் சொல்லும்படி, நீ அதைப் பார்க்க வேண்டியது அவசியம்'** என்று மட்டும் கூறிவிட்டார்.

கொம்பு வடிவிலான அந்தக் குகை வழியாக நாங்கள் தொடர்ந்து கீழ்நோக்கி இறங்கிக்கொண்டே போனோம். முடிவாக நாங்கள் முற்றிலும் இருளடைந்திருந்த ஓரிடத்தை அடைந்தோம். அப்போது என் கண்களிலிருந்து அடர்ந்ததொரு திரைச்சீலை நீக்கப்பட்டதைப் போல நான் உணர்ந்தேன். பின்பு அங்கு நான் கோடிக்கணக்கான அக்கினி ஜுவாலைகளைக் கண்டேன். இதிலும் மோசமான காரியம் என்னவென்றால், இந்த வேதனையூட்டும் அலறல்களை நான் கேட்டும், ஒருவரையும் என்னால் அங்கு காண

முடியவில்லை. நான் மெய்யாகவே மிகவும் பயந்துபோனேன். நான் கர்த்தரை நோக்கி, 'கர்த்தாவே, தயவுகூர்ந்து என்மேல் இரக்கமாயிரும்! தயவுகூர்ந்து என்மேல் இரக்கமாயிரும்! என்னை இந்த இடத்திற்குக் கொண்டு செல்லாதேயும்! என்னை மன்னியும்!' என கதறினேன். அவ்வேளையில் நான் பாதாளத்தைப் பார்வையிடும்படி சென்றிருக்கும் ஒரு நபர்தான் என்பதை நான் உணரவில்லை; மாறாக, அது, என் தவறுகள் நினைவுகூரப்பட்டு நியாயந்தீர்க்கப்படும் நாள் என்றே நான் எண்ணிவிட்டேன். கர்த்தராகிய இயேசுவின் முன்பாக நின்றுகொண்டு, நான் மிகவும் அதிகமாக நடுங்கிக்கொண்டிருந்தேன். ஏனெனில் மெய்யாகவே அது என் ஜீவியத்தின் முடிவு என்றே நான் எண்ணிவிட்டேன்.

எங்களுக்கு முன்பாக இருந்த ஒரு பெரிய ஜுவாலையை நோக்கி நாங்கள் நெருங்கிச் சென்றோம். அது மிகவும் பெரிதாயிருந்தது; அது உக்கிரமாக எரிந்துகொண்டிருந்தது. ஏராளமான ஜுவாலைகள் எரிவதைப் பார்த்துக்கொண்டும், கோடிக்கணக்கான ஆத்துமாக்கள் ஒரே சத்தத்தில் அலறுவதைக் கேட்டுக்கொண்டும் நாங்கள் மெதுவாகக் கீழ்நோக்கிச் சென்று கொண்டிருந்தோம்.

பின்பு நான் அங்கே அக்கினி ஜுவாலைகளுக்குள் மரத்தினாலான ஒரு மேசையைப் பார்த்தேன். அது எரிந்து போகாதிருந்தது. அதன் மேல் **மதுபானப்புட்டிகள்** போல தோற்றமளித்த புட்டிகள் இருந்தன. அவை புத்துணர்ச்சி அளிப்பவை போல தோற்றமளித்தன; ஆனால் அவை முழுவதும் அக்கினியால் நிரப்பப்பட்டிருந்தன. நான் இதைப் பார்த்துக்கொண்டிருக்கையில், ஒரு மனிதன் திடீரென எங்கள் முன் தோன்றினான். அவனுடைய மாம்சம் ஏறக்குறைய முற்றிலுமாக அழிக்கப்பட்டிருந்தது; அவனுடைய வஸ்திரத்தினுள் மீந்திருந்ததெல்லாம் சேறு நிறைந்ததாயும், எரிந்துகொண்டும் இருந்தது. அக்கினியில் அவன் தன் கண்களையும், வாயையும், முழு தலைமயிரையும் இழந்துபோயிருந்தான். அவனுக்குக் கண்கள் இல்லாவிடினும், அவனால் என்னைப் பார்க்க முடிந்தது. மெய்யாகவே, ஒரு மனிதனின் இயற்கையான சரீரம் அல்ல, அவனது ஆத்துமா தான் சிந்திக்கிறது, யோசிக்கிறது, பார்க்கிறது என்பதை நான் இங்கு சொல்லிக்கொள்கிறேன்.

அம்மனிதன் தன்னுடைய எலும்பும் தோலுமான கையைக் கர்த்தருக்கு நேராக நீட்டி, 'கர்த்தாவே, என் மேல் இரக்கமாயிரும்! என் மேல் இரக்கமாயிரும்! நான் வெந்துகொண்டிருக்கிறேன்! தயவுகூர்ந்து என் மேல் இரக்கமாயிருந்து, இந்த இடத்திலிருந்து என்னை வெளியே கொண்டுவந்துவிடும்!' என்று பரிதாபமாகக் கதற ஆரம்பித்தான்.

அக்கினிப் புட்டிகள்

கர்த்தர் மனதுருக்கத்தோடு அவனைப் பார்த்தார்; அவரது கரத்திலிருந்த என் கையில் ஏதோ சூடாக விழுவதை நான் உணர்ந்தேன். அது என்னவென்று நான் பார்த்தபோது, அது இரத்தம் ..... இயேசுவின் இரத்தம்! அக்கினி ஜுவாலைகளால் சூழப்பட்டு வேதனைப்பட்டுக்கொண்டிருந்த இம்மனிதனை அவர் பார்த்துக் கொண்டிருந்தபோது, அவருடைய கரத்திலிருந்து இரத்தம் பாய்ந்து வந்தது.

பின்பு அம்மனிதன் தன் பார்வையை அந்த மேசையின் பக்கமாகத் திருப்பி, அப்புட்டிகளை நோக்கி நடக்கலானான். அவன் ஆசையோடு ஒரு புட்டியைத் தன் பக்கமாக இழுத்தான். ஆனால் அதினின்று அவன் குடிக்கப்போனபோது, புட்டிக்குள்ளிருந்து அக்கினியும், புகையும் குதித்தெழுந்து வந்தது. அவன் தன் தலையைப் பின் நோக்கி வலித்துக்கொண்டு, நான் இதற்கு முன் கேட்டிராத அளவிற்குக் கூச்சலிட்டான். அவன் அவ்வளவு மிகுந்த வேதனையோடும், துக்கத்தோடும் அலறிவிட்டு, பின்பு அப்புட்டியில் இருந்ததைக் குடிக்க ஆரம்பித்தான். ஆனால் அப்புட்டி முழுவதும் அமிலத்தினால் நிறைந்திருந்தது; அவனுடைய தொண்டை அதினால் முழுவதுமாகப் பாதிக்கப்பட்டுப் போயிற்று. அந்த அமிலம் அவனுடைய வயிற்றினுள் செல்வதும், அதனைச் சேதப்படுத்துவதும் கூட வெளிப்படையாகக் காணக் கூடியதாயிருந்தது.

இம்மனிதனின் நெற்றியில் 666 என்ற இலக்கம் பொறிக்கப்பட்டிருந்தது. அவனுடைய மார்பில் அறியப்படாத ஏதோ ஒரு உலோகத்தாலான ஒரு தகடு இருந்தது. அது உக்கிரமாய் எரியும் அக்கினியினாலோ, அதன் புழுக்களினாலோ கூட சேதமடையவில்லை. அதில் சில எழுத்துக்கள் எழுதப்பட்டிருந்தன. ஆனால் எங்களால் அதை விளங்கிக்கொள்ள முடியவில்லை. தேவன் தமது பெரிதான இரக்கத்தினால் அதில் எழுதப்பட்டிருந்ததின் பொருளை எங்களுக்கு வெளிப்படுத்தினார். **'நான் குடிகாரனாய் இருப்பதால்தான் இங்கு இருக்கிறேன்'** என்பதே அவ்வாசகமாகும். அவன் இரக்கத்திற்காகக் கர்த்தரிடத்தில் கெஞ்சினான். ஆனால் திருடரும், பொருளாசைக்காரரும், **வெறியரும்**, உதாசினரும், கொள்ளைக்காரரும் தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை (I கொரி 6 : 10) என்று தேவனுடைய வார்த்தை மிகத் தெளிவாகச் சொல்லுகிறதே!

இம்மனிதனுடைய பூலோக வாழ்க்கையின் கடைசி நேரத்தை ஒரு திரைப்படம் போல கர்த்தர் எனக்குக் காண்பித்தார். அவனுடைய மரணத்துக்கு முன்பாக இருந்த அவனது கடைசி மணித்துளிகள், ஒரு பெரிய தொலைக்காட்சிப் பெட்டியின் திரையில் காட்சிகள் தோன்றுவது போல என் முன் தோன்றின. அம்மனிதனின் பெயர் லூயிஸ் (Louis). அவன் ஒரு மதுபானக் கடையில் குடித்துக்

கொண்டிருந்தான். நான் பாதாளத்தில் கண்ட அதே மேசையையும், அதே புட்டிகளையும் அந்த மதுபானக் கடையில் கண்டேன். அம்மேசையைச் சுற்றிலும் அவனுடைய நண்பர்கள் இருந்தனர். (இப்போது நான் ஒன்றை உங்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். மெய்யான நண்பர் ஒருவர் மட்டுமே இருக்கிறார்; அவருடைய பெயர் **இயேசு கிறிஸ்து**, அவரே உண்மையுள்ள நண்பர்). லூயிஸ் மதுபானம் அருந்திக் கொண்டிருந்தான்; அவனுடைய நண்பர்களும் ஏற்கனவே குடிபோதையில் இருந்தனர். அவனுடைய மிகச் சிறந்த நண்பன் ஒரு புட்டியை எடுத்து, அதை உடைத்து, அதைக்கொண்டு லூயிஸைக் குத்தினான். லூயிஸ் தரையில் விழுந்து கிடப்பதைக் கண்டபோது அவன் ஓடிவிட்டான். லூயிஸோ தரையிலேயே இரத்த வெள்ளத்தில் கிடந்து மரித்தான். மிகவும் துக்ககரமான காரியம் யாதெனில், அவன் தன் வாழ்க்கையில் கர்த்தர் இல்லாதவனாகவே மரித்துப்போனான்!

இவை எல்லாவற்றுக்கும் மத்தியில், பாதாளத்திலிருந்த அந்த ஆத்துமாக்களெல்லாம் அலறிக்கொண்டிருக்கையில், நான் கர்த்தரை நோக்கி, 'கர்த்தாவே, இந்த மனிதன் உம்மைப் பற்றி அறிந்திருந்தானா? உம்முடைய இரட்சிப்பைப் பற்றி அவன் அறிந்திருந்தானா? தயவு செய்து அதை எனக்குச் சொல்லும்' என்று கேட்டேன். கர்த்தர் துக்கத்துடன் அதற்கு மறுமொழியாக, **'ஆமாம், அவன் என்னைப் பற்றி அறிந்திருந்தான்; அவன் ஒருகாலத்தில் என்னைத் தன் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டிருந்தான், ஆனால் அவன் என்னைச் சேவிக்கவில்லை'** என்று கூறினார். அப்போது நான் இன்னும் அதிகமாகப் பயமடைந்தேன். லூயிஸ் முன்னிலும் அதிகமாக உரத்த சத்தத்துடன், 'கர்த்தாவே, இந்தக் காயங்கள்! கர்த்தாவே இந்த வேதனைகள்! தயவுகூர்ந்து என் மேல் இரக்கமாயிரும்!' என்று அலறினான். மீண்டுமாக அவன் தன் கைகளைக் கர்த்தரிடமாக நீட்டினான். ஆனால் இயேசுவோ அவனுடைய கரத்தை அல்ல, என்னுடைய கரத்தையே பிடித்துக்கொண்டார்; நாங்கள் அந்த ஜுவாலையை விட்டுக் கடந்து சென்றோம். லூயிஸைப் பட்சித்துக் கொண்டிருந்த ஜுவாலைகள் முன்னிலும் அதிகமாக உக்கிரத்துடன் எரிய ஆரம்பித்தன. அவன் இன்னும் அதிகமாக, 'என் மேல் இரக்கமாயிரும்! என் மேல் இரக்கமாயிரும்!' என்று உரத்த சத்தத்துடன் கதறிக்கொண்டே ஜுவாலைகளுக்குள் மூழ்கி மறைந்துவிட்டான்.

நாங்கள் தொடர்ந்து நடந்து கொண்டேயிருந்தோம். அந்த இடம் அவ்வளவு பெரிதாகவும், அச்சுறுத்துவதாகவும் இருந்தது. நாங்கள் இன்னொரு ஜுவாலையை நெருங்கினோம். நான் கர்த்தரை நோக்கி, 'கர்த்தாவே, வேண்டாம்! இப்படிப்பட்டவைகளை இனி ஒருபோதும் பார்க்க நான் விரும்பவில்லை. தயவுசெய்து என்னை மன்னியும்! என்னை மன்னித்தருளும்படி மன்றாடுகிறேன்' என்று கதறினேன்.

இப்படிச் சொல்லி, நான் என் கண்களை மூடிக்கொண்டேன். ஆனால் அது ஒரு விஷயமாயிருக்கவில்லை. நான் என் கண்களை மூடியிருந்தாலும் திறந்திருந்தாலும் எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டு தான் இருந்தேன். இந்த ஜுவாலை மெதுவாகத் தாழ்ந்துபோகத் துவங்கிற்று; அதினுள் ஒரு ஸ்திரீயை நான் கண்டேன். அவள் முழுவதும் சேற்றினால் சூழப்பட்டிருந்தாள்; அந்தச் சேறு புழுக்களால் நிறைந்திருந்தது. அவளுக்குச் சிறிதளவு தலைமயிர் மட்டும் மீந்திருந்தது; புழுக்கள் மொய்த்துக்கொண்டிருந்த சேற்றுடன் அவள் ஒரு பாளமாக இறுகச் சேர்ந்திருந்தாள். புழுக்கள் எப்பக்கமும் அவளை மேய்ந்துகொண்டிருந்தன. அவள், 'கர்த்தாவே, என் மேல் இரக்கமாயிரும்! என் மேல் இரக்கமாயிருந்து என்னை மன்னித்தருளும்! என்னை நோக்கிப்பாரும்! இந்தக் காயங்களைப் பாரும்! என் மேல் இரக்கமாயிரும்! இப்புழுக்களை என்னைவிட்டு அகற்றிவிடும்! இது என்னை அதிகமான வேதனைக்குள்ளாக்குகிறதே! இந்த வேதனையினின்று என்னை வெளியே கொண்டுவந்துவிடும்!' என்று அலறினாள். கர்த்தரோ யாதொன்றும் செய்யக்கூடாதவராய் மிகுந்த துக்கத்தோடு அவளைப் பார்த்துக்கொண்டிருந்தார். நான் அவரது கரத்தைப் பற்றிப் பிடித்தபோது, நரக அக்கினியில் நித்தியமாக வெந்து அழிந்துகொண்டிருந்த அந்த ஆத்துமாக்கள் அனைவரினிமித்தமும் அவருடைய இருதயத்தில் உண்டாயிருந்த வேதனையையும் துக்கத்தையையும் என்னால் உணர முடிந்தது.

இந்த ஸ்திரீக்குக் கண்களும் இல்லை, உதடுகளும் இல்லை. ஆயினும் அவளால் பார்க்கவும், பேசவும், உணரவும் முடிந்தது. அவள் அனுபவித்த வேதனைகள் எல்லாம் இன்னும் அதிகரித்துக்கொண்டே சென்றன. அவள் தன் கைகளில் ஒரு புட்டியை வைத்திருந்தாள். அது அமிலத்தினால் நிறைந்திருந்தது; ஆனால் அவளோ அது **வாசனைத் திரவியம்** என நம்பிக்கொண்டிருந்தாள். அது அமிலம் என்பதை நான் கண்டேன்; அவள் தன் உடலில் அதைத் தெளித்துக்கொண்ட ஒவ்வொரு முறையும அது அவளது உடலை வெந்துபோகச் செய்தது. இருப்பினும் அவளோ இந்த அமிலத்தைத் தன் உடலின் மேல் மீண்டும் மீண்டும் பூசிக்கொண்டே இருந்தாள். அது விலையுயர்ந்த ஒரு வாசனைத் திரவியம் என்று அவள் சொல்லிக்கொண்டே இருந்தாள். அவள், தான் ஒரு அழகான **வைரமாலை** (necklace) அணிந்திருப்பதாகவும் நம்பிக்கொண்டிருந்தாள். ஆனால் நான் கண்டதெல்லாம், அவளுடைய கழுத்தைச் சுற்றி, பாம்புகள் தான் தொங்கிக்கொண்டிருந்தன. அவள், தான் **மிகவும் விலையுயர்ந்த வளையல்களை** அணிந்திருப்பதாக நம்பிக்கொண்டிருந்தாள். ஆனால் நான் பார்த்த வரை அவை யாவும் உண்மையில் புழுக்களே. சுமார் ஒரு அடி நீளமான புழுக்கள் தீவிரமாக அவளது எலும்புகளைத் துளைத்துச் சென்றுகொண்டிருந்தன. அவள் தன் சரீரத்தை

முழுவதுமாக ஆபரணங்களால் அலங்கரித்திருப்பதாகக் கூறிக் கொண்டிருந்தாள்; ஆனால் உண்மையில் தேள்களும், புழுக்களுமே அவளுடைய உடலெங்கும் நிறைந்திருப்பதை நான் கண்டேன். பாதாளத்தில் யாவரும் தங்கள் மார்பில் அணிந்திருக்கிற உலோகத் தகட்டை இவளும் அணிந்திருந்தாள். அதில், **'நான் திருடியதினிமித்தம் இங்கே இருக்கிறேன்'** என்று எழுதப்பட்டிருந்தது.

இந்த ஸ்திரீக்குத் தன் பாவத்தைப் பற்றிய உணர்வு இருக்கவில்லை. கர்த்தர் அவளிடம், **'மேக்டலீனா** (Magdalena), நீ ஏன் இந்த இடத்தில் இருக்கிறாய்?' என்று கேட்டார். அவள், 'மற்றவர்களிடமிருந்து திருடுவது எனக்கு ஒரு விஷயமாகவே இருக்கவில்லை; நான் கவலைப்பட்டுத் தேடிய ஒரே காரியம் என்னுடைய ஆபரணங்களும், அதிக விலைமதிப்புள்ள வாசனைப் பொருட்களுமே. யாரிடமிருந்து அவற்றைத் திருடுகிறேன் என்பது பற்றி நான் கவலைப்படவே இல்லை; நான் புறம்பாக நல்லவளாகக் காட்சியளிக்கிறேனே, அது போதும் என்று எண்ணினேன்' என்றுரைத்தாள்.

அவளுடைய சரீரம் முழுவதையும் புழுக்கள் துளைத்துச் சென்றுகொண்டிருந்ததைப் பார்த்தபோது நான் கிறிஸ்துவின் கரத்தை இறுகப் பற்றிக்கொண்டேன். மேக்டலீனா ஏதோ ஒன்றைத் தேடிக்கொண்டு திரும்பினாள். நான் மீண்டும் ஒரு முறை கர்த்தரிடம், 'கர்த்தாவே, இந்த நபர் உம்மைப் பற்றி அறிந்திருந்தாளா?' என வினவினேன். அப்போது அவர், **'ஆம், இந்த நபர் என்னை அறிந்திருந்தாள்'** என்றார்.

மேக்டலீனா சுற்றிலும் பார்த்துக்கொண்டே கர்த்தரை நோக்கி, 'கர்த்தாவே, உம்மைப் பற்றி என்னிடம் பேசிய அந்தப் பெண் எங்கே? நான் 15 வருடங்களாகப் பாதாளத்தில் இருக்கிறேன்' என்றுரைத்தாள். (நரகத்திலிருக்கிற எல்லாரும் எல்லாவற்றையும் ஞாபகத்தில் வைக்கக்கூடியவர்களாயிருப்பார்கள்) மேக்டலீனா, 'அந்தப் பெண் எங்கே? அவளை என்னால் பார்க்க முடியவில்லையே!' என்று மீண்டும் கேட்டுக்கொண்டேயிருந்தாள். அவளுடைய மாம்சம் ஒரே நிலையில் தரித்திருந்ததால் அவளால் தன் சரீரத்தைத் திருப்ப முடியவில்லை என்பதை நான் அறிந்துகொண்டேன். அவள் தேவனைப் பற்றி நன்னோடு பேசிய பெண்ணைக் கண்டுபிடிக்கும்படியாக மற்ற ஜுவாலைகளுக்குள் பார்க்கும்படி தன் சரீரத்தைத் திருப்ப முயற்சித்துக்கொண்டிருந்தாள். கர்த்தர் அவளுக்கு மறுமொழியாக, 'இல்லை, இல்லை மேக்டலீனா, அவள் இங்கே இல்லை; என்னைப் பற்றி உன்னிடம் பேசிய அந்தப் பெண் என்னோடு கூட பரலோகராஜ்யத்தில் இருக்கிறாள்' என்றுரைத்தார்.

இதைக் கேட்ட மாத்திரத்தில் அவள் தன்னைத் தானே ஜுவாலைகளுக்குள் வீசி எறிந்தாள்; அந்த ஜுவாலைகள் அவளை இன்னும் அதிகமாகப் பட்சித்தன. அவள் அணிந்திருந்த உலோகத் தகடு அவள் ஒரு திருடி என அவளை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தன. ஏசாயா 3 : 24-இல் உள்ள வார்த்தைகளை வாசித்துப் பார்க்கவும்; "அப்பொழுது, சுகந்தத்துக்குப் பதிலாகத் துர்க்கந்தமும், கச்சைக்குப் பதிலாகக் கயிறும், மயிர்ச்சுருளுக்குப் பதிலாக மொட்டையும், ஆடம்பரமான வஸ்திரங்களுக்குப் பதிலாக இரட்டுக்கச்சும், அழகுக்குப் பதிலாகக் கருகிப்போகுதலும் இருக்கும்".

நாங்கள் கர்த்தரோடு சேர்ந்து தொடர்ந்து நடந்துகொண்டிருந்தபோது, ஒரு மிகப்பெரிய பரப்பளவு முழுவதும் புழுக்களால் நிறைந்திருக்கக் கண்டேன். அதைச் சுற்றிலும் பழுக்கக் காய்ச்சின உலோகத்தினாலான ஒரு சறுக்குக் கதவு இருந்தது. இந்தப் பகுதியின் மேல், எங்கிருந்து நோக்கினும் காணத்தக்கதான, பிரகாசமாய் எரிந்துகொண்டிருக்கும் ஒரு எழுத்துப் பலகை இருந்தது. அந்த எழுத்துப்பலகையில், **'சகல பொய்யரே, புறங்கூறுவோரே! வருக, வருக!'** என்று எழுதப்பட்டிருந்தது. அந்தச் சறுக்குக் கதவின் முடிவில் கொதித்துக் கொண்டிருந்த ஒரு சிறு கடல் இருந்தது. அது எரிந்து கொண்டிருக்கும் கந்தகம் போல இருந்தது. அப்போது நான், முற்றிலும் நிர்வாணியாயிருந்த ஒரு நபர் அந்தச் சறுக்குக் கதவின் வழியாகக் கீழே இறங்கி வருவதைக் கண்டேன். இக்கதவின் வழியாக வருகிறவர்கள் அதில் சறுக்கி வரும்போது, அவர்களுடைய தோல் கிழிந்து அக்கதவுடன் ஒட்டிக்கொள்ளும். அவர்கள் அந்த எரிகிற கடலுக்குள் விழும்போது, அவர்களுடைய நாவு வெடித்துச் சிதறி, அது இருந்த இடத்தில் புழுக்கள் தோன்றும் வரை அந்நாவு நீண்டுகொண்டே போகும். அதுவே அவர்களுடைய வேதனைகளுக்கு ஆரம்பம். "நிச்சயமாகவே நீர் அவர்களைச் சறுக்கலான இடங்களில் நிறுத்தி, பாழான இடங்களில் விழப்பண்ணுகிறீர். அவர்கள் ஒரு நிமிஷத்தில் எவ்வளவு பாழாய்ப் போகிறார்கள்! பயங்கரங்களால் அழிந்து நிர்மூலமாகிறார்கள்" (சங் 73 : 18, 19) என தேவனுடைய வசனம் கூறுகிறதே!

இதைக் கண்ட பின்னர், நாங்கள் நரக பாதாளத்தினின்று திரும்ப எடுத்துக்கொள்ளப்பட்டோம். நான் உங்களுக்குச் சொல்ல விரும்புகிறதென்னவென்றால், நாம் அறிந்திருக்கிற இந்த சரீரப் பிரகாரமான உலகம் இருப்பது எவ்வளவு உண்மையானதோ, அதைப் பார்க்கிலும் பரலோகமும் நரகமும் இருக்கின்றன என்பது மிகவும் உண்மையானது. நீ எந்தத் திசையில் செல்ல விரும்புகிறாய், உன் நித்தியத்தை இயேசுவோடு செலவழிக்க விரும்புகிறாயா, அல்லது எரிநரகத்தில் செலவழிக்க விரும்புகிறாயா என்பதை நீ தீர்மானிக்க

வேண்டிய இடம் இதுவே! கர்த்தர் மீண்டும் மீண்டும் எங்களிடம், **'பரிசுத்தமில்லாமல் ஒருவனும் என்னைத் தரிசிக்க முடியாது; பரிசுத்தமில்லாமல் ஒருவனும் என்னைத் தரிசிப்பதில்லை'** (எபி. 12 : 14) என்று சொல்லிக்கொண்டேயிருந்தார். ஆகவேதான் நானும் அதே காரியத்தை இப்போது உங்களுக்கும் சொல்லுகிறேன்: "பரிசுத்தமில்லாமல் நீங்கள் கர்த்தரைத் தரிசிக்க முடியாது."

சாட்சி - 3

"ஆத்துமாவைக் கொல்ல வல்லவர்களாயிராமல், சரீரத்தை மாத்திரம் கொல்லுகிறவர்களுக்கு நீங்கள் பயப்பட வேண்டாம்; ஆத்துமாவையும் சரீரத்தையும் நரகத்திலே அழிக்க வல்லவருக்கே பயப்படுங்கள்" (மத் 10 : 28).

ஒரு நபர் மரித்து பாதாளத்தை அடையும்போது அவன் ஒரு மரண சரீரத்தைப் பெற்றுக்கொள்ளுகிறான். கர்த்தராகிய இயேசு என் கரத்தைப் பிடித்துக்கொண்டார். நாங்கள் மிகவும் ஆழமான ஒரு இருண்ட குகை வழியாகக் கீழ்நோக்கிச் சென்று, பூமியின் மையப்பகுதியை அடைந்தோம். நாங்கள் ஓரிடத்தைச் சென்றடைந்தோம்; அங்கே அநேக கதவுகள் இருந்தன. அவற்றுள் ஒரு கதவு திறவுண்டது. நாங்கள் கர்த்தரோடுகூட அதன் வழியே உட்பிரவேசித்தோம். நான் கர்த்தரின் கரத்தை விட்டுப்போகாதபடி கவனமாயிருந்தேன். ஏனெனில், நான் அப்படிச் செல்வேனானால், நான் என்றென்றுமாக நரகத்திலேயே இருக்க வேண்டியதாகும் என்பதை அறிந்திருந்தேன்.

கதவின் வழியே உட்பிரவேசித்தவுடன் நான் முதலாவதாகக் கண்டது மிகப் பெரியதொரு மதில் ஆகும். அதில் ஆயிரக்கணக்கான ஜனங்கள் தலையில் கொக்கி மாட்டப்பட்டும், கைகளில் விலங்கிடப்பட்டும், மதிலுடன் சேர்த்துக் கட்டப்பட்டும் தொங்கிக்கொண்டிருந்தனர். மேலும் பல்லாயிரக்கணக்கானவர்கள் அவ்விடமெங்கும் அக்கினி ஜுவாலைகளுக்குள் நின்று கொண்டிருந்ததையும் நாங்கள் கண்டோம்.

நாங்கள் அவற்றுள் ஒரு ஜுவாலைக்கு முன்பாகப் போய் நின்றோம். அது மெதுவாகத் தாழ்ந்துபோக ஆரம்பித்தது. அப்போது என்னால் அதினுள் ஒரு உருவம் இருப்பதைக் காண முடிந்தது. அது பேசியபோது அது ஒரு மனிதன் என்பதை என்னால் விளங்கிக்கொள்ள முடிந்தது. முற்றிலும் அசுத்தம் நிறைந்ததும், கந்தல் கந்தலாகக் கிழிந்ததுமான **ஒரு பாதிரியின் உடையை** அவன் அணிந்திருந்தான். அம்மனிதனின் உடலெங்கும் புழுக்கள் உள்ளும் புறம்புமாக நெளிந்து வளைந்து சென்றுகொண்டிருந்தன. அவன் அக்கினியினால் சுட்டெரிக்கப்பட்டு, கருகிப்போனவன் போல காட்சியளித்தான். அவனுடைய கண்கள் பிடுங்கப்பட்டிருந்தன; அவனுடைய மாம்சம் உருகித் தரையில் விழுந்துகொண்டிருந்தது. முழு மாம்சமும் கீழே விழுந்த பிற்பாடு, மீண்டும் அவனில் மாம்சம் வளரும்; பின்பு அது கீழே விழும். இவ்வாறு தொடர்ந்து நடந்துகொண்டே இருந்தது.

அவன் இயேசுவைக் கண்டபோது, 'கர்த்தாவே, என் மேல் இரக்கமாயிரும்! தயவாக என்னை இங்கிருந்து ஒரு நொடிப்பொழுதிற்கு, ஒரு நிமிடத்திற்கு வெளியே கொண்டுபோய்விடும்' என்று கெஞ்சினான். **'நான் திருடிய குற்றத்திற்காக இந்த இடத்தில் இருக்கிறேன்'** என்று அவனுடைய மார்பில் தொங்கிய உலோகத் தகட்டில் எழுதப்பட்டிருந்தது.

இயேசு அவனுக்குச் சமீபமாக வந்தபோது, அவர் அவனிடத்தில், 'உன் பேர் என்ன?' என்று கேட்டார். அவன், **'ஆண்ட்ரூ** (Andrew), என் பெயர் ஆண்ட்ரூ கர்த்தாவே' என பதிலளித்தான். 'எவ்வளவு காலமாக நீ இங்கிருக்கிறாய்' என அவர் அவனிடம் கேட்டார். 'வெகு நீண்ட காலமாக நான் இங்கே இருக்கிறேன்' என ஆண்ட்ரூ பதிலளித்தான். அவன் தன் கதையைச் சொல்ல ஆரம்பித்தான். அவனுடைய கத்தோலிக்க சபையில் தசமபாகங்களை வசூலிப்பதும், ஏழைகளுக்குப் பண உதவி செய்வதுமாகிய உத்தரவாதம் அவனுக்குக் கொடுக்கப்பட்டிருந்ததாக அவன் கூறினான். அவனோ ஏழைகளுக்குக் கொடுப்பதற்குப் பதிலாக, அதிலிருந்து பணத்தைத் திருடுவது வழக்கமாயிருந்தது. மனதுருக்கம் நிறைந்த கண்களுடன் கர்த்தர் அவனை நோக்கி, 'ஆண்ட்ரூ, நீ எப்போதாவது சுவிசேஷத்தைக் கேட்டிருக்கிறாயா?' என வினவினார். 'ஆம் கர்த்தாவே, ஆலயத்துக்குச் செல்லுகிற ஒரு கிறிஸ்தவ ஸ்திரீ இருந்தாள். அவள் ஒரு முறை எனக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தாள். ஆனால் நானோ அதை ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை. அதை விசுவாசிக்கவும் நான் விரும்பவில்லை; ஆனால் இப்போது அதை நான் விசுவாசிக்கிறேன்! அதெல்லாம் உண்மை என்று இப்போது நான் விசுவாசிக்கிறேன்! கர்த்தாவே, தயவுசெய்து இந்த இடத்திலிருந்து என்னை நீர் ஒரு கூணப்பொழுதுக்காகிலும் வெளியே கொண்டுசெல்லும்!' என அவன் கெஞ்சினான்.

அவன் இப்படிப் பேசிக்கொண்டிருந்தபோது புழுக்கள் அவனுடைய கண்குழிகளினூடாகத் தவழ்ந்துசென்று, அவனுடைய காதுகளின் வழியாக வெளியேறி, மீண்டும் அவனுடைய வாயின் வழியாக உள்ளே சென்றன. அவன் அவற்றைத் தன் கைகளால் இழுத்தெடுக்கப் பிரயாசப்பட்டான்; ஆயினும் அது கூடாமற்போயிற்று. அவன் பயங்கரமாகக் கூச்சல்போட்டு, இரக்கத்திற்காக தேவனை நோக்கிக் கெஞ்சிக்கொண்டே இருந்தான். அந்த இடத்திலிருந்து தன்னை வெளியே கொண்டு செல்லும்படி இயேசுவிடம் அவன் கேட்டுக்கொண்டே இருந்தான். இதிலும் மோசமானது என்னவென்றால், அவனைத் தங்கள் ஈட்டிகளினால் இடைவிடாமல் குத்தித் துன்புறுத்திக்கொண்டிருந்த பிசாசுகளும் அங்கே இருந்தன. அந்தப் பிசாசுகள் பார்ப்பதற்கு, இங்கே பூமியில் 'The Jordanos' என்று

அழைக்கப்படுகிற பொம்மைகளுள் ஒன்றினைப் போலவே இருந்தன. அந்தப் பொம்மைகளை நான் பாதாளத்தில் கண்டேன். ஆனால் அவை பொம்மைகள் அல்ல. அவை ஜீவனுள்ளவையாயும் பேய்த்தனமுள்ளவையாயும் இருந்தன. அவை சுமார் 3 அடி உயரமுள்ளவையாயும், மிகக் கூர்மையான பற்கள் உள்ளவையாயும் இருந்தன. அவற்றின் வாயினின்று இரத்தம் வந்துகொண்டிருந்தது; அவற்றின் கண்கள் முற்றிலும் சிவப்பாயிருந்தன.

அவை ஆண்ட்ரூவையும், பாதாளத்தின் இந்தப் பகுதியில் இருந்த மற்றவர்களையும் தங்கள் முழுப் பலத்தோடும் ஈட்டியினால் குத்திக்கொண்டேயிருந்தன. நான் இதைக் கண்டபோது, கர்த்தரிடத்தில், 'பூமியிலுள்ள ஒரு பொம்மை சரியாக இந்தப் பிசாசு போலவே இருக்கிறது. அது எப்படி சாத்தியமாயிற்று?' என்று கேட்டேன். கர்த்தர் என்னிடம், **'அவை துக்கத்தின் ஆவிகள்'** என்று பதிலளித்தார்.

நாங்கள் தொடர்ந்து போய்க்கொண்டிருந்தபோது, வேதனைக்குள்ளாக்கப்பட்டிருந்த ஆயிரக்கணக்கானவர்களை அங்கே கண்டோம். பாதாளத்திலுள்ள ஆத்துமாக்கள் கர்த்தரைக் கண்டபோது, அவை தங்கள் எலும்பும் தோலுமான கைகளை நீட்டி அவரைத் தொடப் பிரயாசப்பட்டன. ஒரு ஸ்திரீ இயேசுவைக் கண்டபோது உரத்த சத்தமிட்டதை நான் கவனித்தேன். அவள், 'கர்த்தாவே, தயவுகூர்ந்து என் மேல் இரக்கமாயிரும்! இந்த இடத்திலிருந்து என்னை எடுத்துவிடும்' என அலறினாள். அவள் அதிகமாக வேதனைப்பட்டுக் கொண்டிருந்தாள்; தன் கைகளை அவள் கர்த்தருக்கு நேராக நீட்டினாள். ஒரே ஒரு நொடிப்பொழுதுக்காகிலும் தன்னை அவ்விடத்திலிருந்து வெளியே கொண்டுபோகும்படி அவள் தொடர்ந்து கெஞ்சிக்கொண்டே இருந்தாள். அவள் முற்றிலும் நிர்வாணியாய் இருந்தாள். சேறு அவளை மூடியிருந்தது. அவளுடைய தலைமுடி முழுவதும் அழுக்கடைந்திருந்தது; புழுக்கள் அவளுடைய உடலில் மேலும் கீழுமாகச் சறுக்கி விளையாடிக்கொண்டிருந்தன. அவள் தன் கைகளால் அவற்றை எடுத்துப்போடப் பிரயாசப்பட்டாள். ஆனால் அவள் அவற்றுள் சிலவற்றைச் சுரண்டி எடுத்துப்போடும் ஒவ்வொரு முறையும், அவள் உடலிலிருந்த புழுக்கள் இன்னும் அதிகமாகப் பெருகின. அப்புழுக்கள் சுமார் 6 முதல் 8 அங்குலம் வரை நீளமுள்ளவையாய் இருந்தன. "அங்கே அவர்கள் புழு சாவாமலும், அக்கினி அவியாமலுமிருக்கும்" (மாற்கு 9 : 44).

புழுக்கள் அந்த ஸ்திரீயின் மாம்சத்தைத் தீராப் பெரும் பசியுடன் தின்றுகொண்டிருக்க, அவள் இடும் கூக்குரலைக் கேட்பதும், அவளுடைய தோற்றத்தைக் காண்பதும் மிகவும் பயங்கரமானதாயிருந்தது. அக்கினி ஜுவாலைகளினால் அழிக்கப்பட

முடியாத ஒரு உலோகத் தகடு அவளுடைய மார்பில் பதிக்கப்பட்டிருந்தது. அதில், **'நான் வேசித்தனத்தினிமித்தம் இங்கே இருக்கிறேன்'** என்று எழுதப்பட்டிருந்தது. அவளுடைய பாவம் எப்படியோ, அப்படியே அவள் பாதாளத்திலும் வேசித்தனம் செய்யும்படி - மிகவும் அருவருக்கப்படத்தக்கதும் தடித்ததுமான ஒரு சர்ப்பத்துடன் வேசித்தனம் செய்யும்படி - கட்டாயப் படுத்தப்பட்டிருந்தாள். அச்சர்ப்பத்தின் உடலெங்கும் சுமார் 6 முதல் 8 அங்குலம் வரை நீளமுள்ள பெரிய முட்கள் இருந்தன. பாதாளத்தில் அவள் தன் பாவத்தை மீண்டும் மீண்டும் செய்துகொண்டே இருக்க வேண்டியதாயிருந்தது. இவ்விதமாக எப்போதும் அவள் துன்பப்பட்டுக் கொண்டேயிருக்க வேண்டியதாயிருந்ததால், இரவும் பகலும் அவளுக்கு இளைப்பாறுதல் என்பதே இல்லை.

தன்னை அவ்விடத்திலிருந்து வெளியே கொண்டுவரும்படி அவள் இன்னும் அதிக ஊக்கத்துடன் கர்த்தரிடத்தில் கெஞ்சி, 'கர்த்தாவே, நான் வேசித்தனம் செய்ததினிமித்தம் இங்கே இருக்கிறேன்; AIDS வியாதியினால் நான் மரணமடைந்தது முதல் இங்கே ஏழு வருடங்களாக இருக்கிறேன். எனக்கு ஆறு காதலர்கள் இருந்தனர்; நான் வேசித்தனத்தினிமித்தம் இங்கிருக்கிறேன்' என்றுரைத்தாள். அவள் தன் கைகளைக் கர்த்தரிடத்திற்கு ஏறெடுக்க முயன்றாள். ஆனால் கர்த்தரோ அவளை நோக்கி, **'பிளங்கா (Blanca), இப்போது இது உனக்குக் காலங்கடந்த ஒன்றாகிவிட்டது; புழுக்களே உன் படுக்கையாயிருக்கும்; பூச்சிகள் உன் போர்வையாயிருக்கும்'** என்று கூறிவிட்டார் (ஏசாயா 14 : 11). அவ்வார்த்தைகளைக் கர்த்தர் சொன்னபோது, அக்கினியானது ஒரு போர்வை போல அவள் மேல் மூடிக்கொண்டது. அதற்குப் பின் அவளை என்னால் காணவே முடியவில்லை.

இன்னும் ஆயிரமாயிரமான ஜனங்களை அங்கே பார்த்துக்கொண்டே நாங்கள் தொடர்ந்து நடக்கலானோம். அங்கு இளைஞரும், வாலிபரும், முதியோரும் வேதனையால் தவித்துக் கொண்டிருந்தனர். அக்கினியால் நிறைந்த பெரியதொரு நீச்சல்குளம் போல தோற்றமளித்த ஓரிடத்திற்கு நாங்கள் வந்து சேர்ந்தோம். அதற்குள் ஆயிரக்கணக்கான ஆண்களும் பெண்களும் இருந்தனர். அவர்கள் ஒவ்வொருவரின் மார்பிலும் ஒரு உலோகத்தகடு பொருத்தப்பட்டிருந்தது. அதில், **'நான் தசமபாகமும் காணிக்கையும் கொடுக்காததால் இங்கு இருக்கிறேன்'** என்று எழுதப்பட்டிருந்தது. நான் அதை வாசித்தபோது, கர்த்தரை நோக்கி, 'கர்த்தாவே, இந்தக் காரணத்திற்காக ஜனங்கள் இங்கே இருப்பது எப்படி சாத்தியமாகும்?' என்று கேட்டேன். கர்த்தர் பிரதியுத்தரமாக, 'ஆம்! என்னுடைய

வசனம், தசமபாகமும் காணிக்கையும் கொடுப்பதை ஒரு கட்டளை என்று கூறும்போது, இவர்கள் அவை முக்கியமானவை அல்ல என்று எண்ணுகிறபடியினாலேயே! என்னுடைய ஜனங்கள் தங்கள் தசமபாகங்களைக் கொடுக்காமலிருக்கும்போது சுவிசேஷம் பிரசங்கிக்கப்படக்கூடாமற்போவதினால் அது என்னுடைய வேலையைத் தடை செய்கிறது' என்றுரைத்தார். மல்கியா 3: 8, 9 இவ்வாறு கூறுகிறது: "மனுஷன் தேவனை வஞ்சிக்கலாமா? நீங்களோ என்னை வஞ்சிக்கிறீர்கள்; எதிலே உம்மை வஞ்சித்தோம் என்கிறீர்கள். தசமபாகத்திலும் காணிக்கைகளிலுந்தானே. நீங்கள் சபிக்கப் பட்டவர்கள்; ஜனத்தாராகிய நீங்கள் எல்லாரும் என்னை வஞ்சித்தீர்கள்"

பாதாளத்தின் மற்ற இடங்களில் இருந்தவர்களைப் பார்க்கிலும் இந்தப் பகுதியில் இருக்கிறவர்கள் சுமார் ஆயிரம் மடங்கு அதிகமாகவே வேதனைக்குள்ளாக்கப்பட்டனர். அவர்கள் கர்த்தருடைய வார்த்தையை அறிந்திருந்தும் அதற்குக் கீழ்ப்படியாமற்போனதே அதன் காரணமாகும்.

நாங்கள் தொடர்ந்து நடக்கலானோம். அப்போது கர்த்தர் அங்கு எனக்கு ஒரு மனிதனைக் காண்பித்தார். அவனுடைய இடுப்பு முதல் தலை வரை நான் கண்டேன். அப்போது, அவன் எவ்விதமாக மரித்தான் என்பதைக் கர்த்தர் எனக்குத் தரிசனத்தில் காண்பித்தார். அவனுடைய பெயர் ரோகெலியோ (Rogelio). அவன் தன்னுடைய காரில் இருந்தபோது, ஒரு நபர் அவனுக்குச் சுவிசேஷம் அறிவிக்க விரும்பி அவனருகில் சென்று, அவனுக்கு ஒரு வேதாகமத்தைக் கொடுத்தான். ஆனால் அவன் அந்நபரின் எச்சரிப்பை அலட்சியம் செய்துவிட்டு, சில நிமிடங்களுக்குள் தன்னுடைய வாகனம் விபத்திற்குள்ளாகி நொறுங்கப்போகிறது என்பதை அறியாதவனாய்த் தன் பிரயாணத்தைத் தொடர்ந்தான். அவனது வாகனம் ஒரு செங்குத்தான பாறையில் மோதிற்று; உடன்தானே அவன் மரித்துப் போனான்.

அப்பாறையில் அவனது வாகனம் மோதிய அந்நேரத்தில், அவனுக்குக் கொடுக்கப்பட்டிருந்த வேதாகமம், வெளிப்படுத்தின விசேஷம் 21 : 8 உள்ள பக்கத்தில் திறவுண்டது. "பயப்படுகிறவர்களும், அவிசுவாசிகளும், அருவருப்பானவர்களும், கொலைபாதகரும், விபசாரக்காரரும், சூனியக்காரரும், விக்கிரகாராதனைக்காரரும், பொய்யர் அனைவரும் இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைவார்கள்" என்று எழுதப்பட்டுள்ள இவ்வசனத்தைப் பார்த்துக்கொண்டே அவன் மரணமடைந்து பாதாளத்தை அடைந்தான்.

அவன் பாதாளத்திற்கு வந்து ஒரு மாதகாலம்தான் ஆகியிருந்தது. அவனுடைய முகத்தில் கொஞ்சம் சதை இருந்தது. எப்படியும் மற்ற எல்லாரையும் போலவே அவனும் அங்கு வேதனைப்பட்டுக் கொண்டிருந்தான். ஆரம்பத்தில், தான் ஏன் நரகத்தில் இருக்கிறான் என்பதை அவன் அறியாதிருந்தான். அந்தக் கிறிஸ்தவ நபர் அவனுடைய காரின் அருகே வந்தபோது, அதுவே கர்த்தராகிய இயேசுவை ஏற்றுக்கொள்வதற்கு அவனுக்குக் கிடைத்த ஒரே தருணமாகவும், கடைசி தருணமாகவும் இருந்தது என நான் நினைக்கிறேன். மற்ற பலருக்கும் இதே விதத்தில் அவரை ஏற்றுக்கொள்ள தருணம் அளிக்கப்பட்டிருக்கக் கூடும். இன்று உங்கள் இருதயத்தைக் கர்த்தராகிய இயேசுவுக்குத் திறக்கும்படி நான் அழைக்கிறேன். அவரே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறார் (யோவான் 14 : 6). அவரால் மாத்திரமே நாம் இரட்சிக்கப்பட்டு, பரலோக ராஜ்யத்துக்குள் போக முடியும் (அப். 4 : 12). மேலும் நாம் பரிசுத்தத்தோடும் கனத்தோடும் அவருடைய வழிகளைப் பின்பற்றும்படி கர்த்தர் நம்மிடத்தில் கேட்கிறார். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

சாட்சி - 4

சகோதரரே, தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. கர்த்தர் என் கரத்தைப் பிடித்துக்கொண்டபோது, நாங்கள் ஒரு பாறையின் மேல் நிற்பதை நான் கண்டேன்; எங்களுக்குப் பின்னாக ஒரு தேவதூதன் நிற்கக் கண்டேன். நம்ப முடியாத வேகத்தில் நாங்கள் ஒரு குகை வழியாகக் கீழே இறங்கினோம். சடுதியாக நான் திரும்பிப் பார்த்தபோது அந்தத் தேவதூதன் போய்விட்டான்; நான் மிகவும் பயமடைந்தேன். நான் கர்த்தரிடத்தில், 'கர்த்தாவே, அந்தத் தேவதூதன் எங்கே? அவன் ஏன் இங்கு இல்லாமற் போய்விட்டான்?' என்று வினவினேன். கர்த்தர், 'நாம் போக இருக்கிற இடத்திற்கு அவன் வர முடியாது' என்றார்.

நாங்கள் கீழ்நோக்கிப் போய்க் கொண்டிருந்தபோது, அப்பாறையானது ஒரு மின்தூக்கி (elevator) போல திடீரென ஓரிடத்தில் நின்றது. அங்கு நான் அநேக குகைகளைக் கண்டேன். சாட்சி - 3-இல் குறிப்பிடப்பட்டுள்ள அதே குகை வழியாக நாங்கள் சென்றோம். மதிலில் ஜனங்கள் தலையில் கொக்கிகள் மாட்டப்பட்டும், கைகளில் விலங்கிடப்பட்டும் தொங்கிக்கொண்டிருந்த குகை அது. அப்படிப்பட்ட ஜனங்களைக் கொண்ட அந்த மதிலானது முடிவே இல்லாதது போல நீண்டுகொண்டே போனது. பல இலட்சக்கணக்கானவர்கள் அம்மதிலின் மேல் தொங்கிக்கொண்டு இருந்தனர். அவர்களுடைய உடலெங்கும் புழுக்கள் நிறைந்திருந்தன. நான் என் முன்னாகப் பார்த்தபோது, இம்மதிலைப் போலவே மற்றொரு மதில் அங்கிருக்கக் கண்டேன். நான் கர்த்தரை நோக்கி, 'கர்த்தாவே, இந்த இடத்தில் இவ்வளவு அதிகமான ஜனங்கள் இருக்கிறார்களே' என்றேன். உடன்தானே ஒரு வேதவசனம் என் மனதில் வந்தது. நான் நினைத்திராத வசனம் அது. கர்த்தர் என்னை நோக்கி, "பாதாளமும் அழிவும் திருப்தியாகிறதில்லை" (நீதி 27 : 20) என்றார்.

அவ்விடத்தை விட்டு நாங்கள் வெகுவிரைவில் ஓரிடத்திற்கு வந்தோம். அது, 'கொப்பரைகளின் பள்ளத்தாக்கு' என்று நாங்கள் அழைக்கிற இடமே. அந்தக் கொப்பரைகள் கொதித்துக் கொண்டிருக்கும் சேற்றினால் நிறைந்திருந்தன. அவற்றுள் ஒன்றினை நாங்கள் நெருங்கினோம். அங்கு நான் கண்ட முதல் நபர் ஒரு ஸ்திரீ ஆவாள். அவளுடைய சரீரம் அந்தக் கொதிக்கும் சேற்றில் மிதப்பதும், பின்பு மூழ்குவதுமாக இருந்தது. ஆனால் கர்த்தர் அவளை நோக்கிப்பார்த்தபோது, அவள் அசைவதை நிறுத்திவிட்டு, இடுப்பளவிற்கு அந்தச் சேற்றுக்குள் மூழ்கிய நிலையில் அசையாமல்

நின்றாள். கர்த்தர் அவளை நோக்கி, 'ஸ்திரீயே, உன் பெயர் என்ன?' என்றார். அவள், 'என் பெயர் **ருபீல்லா** (Rubiella)' என்றாள்.

அவளுடைய தலைமயிர் கொதிக்கும் சேற்றினால் நிறைந்திருந்தது. அவளுடைய எலும்புகளிலிருந்து மாம்சம் தொங்கிக்கொண்டிருந்தது. அக்கினியினால் அவை கரி போல கறுப்பாகியிருந்தன. புழுக்கள் அவளுடைய கண் குழியின் வழியாக உள்ளே போவதும், அவளுடைய வாயின் வழியாக வெளியே வருவதும், மீண்டும் மூக்கின் வழியாக உள்ளே செல்வதும், காதுகளின் வழியாக வெளியே வருவதுமாயிருந்தன. புழுக்கள் உட்பிரவேசிக்க வழி இல்லாத, உடலின் மற்ற பகுதிகளில் அவை துளையிட்டுக்கொண்டு உள்ளே சென்றன. இது அவளுக்கு விவரிக்க முடியாத வேதனையை அளித்தது.

அவள், 'கர்த்தாவே! தயவுசெய்து என்னை இந்த இடத்திலிருந்து வெளியே கொண்டுபோய்விடும். என் மேல் இரக்கமாயிரும்! இவ்விதமாக இனி கொஞ்ச நேரங்கூட என்னால் தொடர முடியாது! இதை நிறுத்தும் ஆண்டவரே! இனி என்னால் தாங்கவே முடியாது! நயவாக என் மேல் இரக்கமாயிரும்!' என அலறினாள். அவள் அங்கிருப்பதின் காரணத்தை ஆண்டவர் கேட்டார். மாயையினிமித்தமாகவே, தான் அங்கிருப்பதாக அவள் விடை பகர்ந்தாள். **'மாயை'** என்பதே அவளுடைய மார்பில் பதிக்கப்பட்டிருந்த உலோகத்தகட்டிலும் எழுதப்பட்டிருந்தது. அவளுடைய கையில் சாதாரணமான ஒரு புட்டி இருந்தது. ஆனால் அவளுக்கோ அது மிகவும் விலையுயர்ந்த வாசனைத் திரவியம் போல தோன்றிற்று. அவள் அமிலம் நிறைந்த அப்புட்டியை எடுத்து தன் உடல் முழுவதிலும் தெளித்துக்கொள்ள வேண்டியதாயிருந்தது. அவள் அப்படிச் செய்தபோது அவளுடைய உடலில் அமிலம் தெளிக்கப்பட்ட இடமெல்லாம் உருகி, அவளுக்கு மிகுந்த வேதனையைக் கொடுத்தது.

'கர்த்தாவே, தயவாக என்மேல் இரக்கமாயிரும்! நான் இனி கொஞ்ச நேரமும் இங்கு இருக்க முடியாது! ஒரே ஒரு வினாடியாவது என்னை விடுதலையாக்கும்!' என அவள் கதறினாள். ஒரு வாசனைத் திரவியத்தை உபயோகிப்பது ஒரு பாவம் என்று நான் சொல்லவில்லை; ஆனால் **'அவள் தன்னுடைய வாசனைத் திரவியங்களினிமித்தமே அங்கு இருக்கிறாள்'** என்று கர்த்தர் எங்களிடம் கூறினார். "என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்" (உபா 5 : 7) என கர்த்தருடைய வசனம் கூறுகிறது. அவளுடைய அழகு, வாசனை, மாயை போன்றவற்றிற்கு அவளுடைய வாழ்க்கையில் முதலிடம் அளிக்கப்பட்டிருந்ததினாலேயே அவள் பாதாளத்தில் இருந்தாள்.

கர்த்தராகிய இயேசுவே ராஜாதி ராஜாவும், கர்த்தாதி கர்த்தருமாயிருக்கிறார்! அவரே உன் வாழ்க்கையில் முதன்மையான இடத்தை வகிக்க வேண்டும். அவளுடைய வாழ்க்கையில் அப்படி இல்லாதிருந்ததினாலேயே அவள் அங்கு இருந்தாள். துக்கத்தோடு கர்த்தர் அவளைப் பார்த்து, **'ரூபீல்லா, இப்போது இது உனக்குக் காலங்கடந்த ஒன்றாகிவிட்டது, புழுக்களே உன் படுக்கையாயிருக்கும், பூச்சிகளே உன் போர்வையாயிருக்கும்'** என்றார். அவர் இப்படிச் சொன்ன மாத்திரத்தில் அக்கினி ஒரு போர்வை போல அவள் மேல் வந்து அவளை முழுவதுமாக மூடிவிட்டது. அந்தக் கொப்பரைக்குள் அவளது சரீரம் தகிக்கப்பட்டுக் கொண்டிருந்தபோது அவள் பயங்கரமான வேதனையை அடைந்தாள்.

பின்பு நாங்கள் அந்த இடத்தினின்று வெகுதூரம் சென்று, இராட்சதக் கதவுகள் உள்ள ஓரிடத்தை அடைந்தோம். நாங்கள் அவைகளண்டையில் சென்றவுடன் அவை எங்களுக்குத் திறவுண்டன. மறுபுறத்தில் ஒரு ஆழ்ந்த இராட்சதக் கிடங்கு ஒன்றினை நாங்கள் கண்டோம். நான் மேல் நோக்கிப் பார்த்தபோது, ஒரு புகை மண்டலம் போல பல வண்ண நிறமுள்ள ஒளிகள் நகர்ந்து போய்க் கொண்டிருந்தன. திடீரென நாங்கள் அங்கு இசையைக் கேட்டோம். வானொலியில் ஜனங்கள் பொதுவாகக் கேட்கும் சல்சா (salsa), பாலெனட்டோ (ballenato), ராக் (rock) போன்ற பலவித **பிரபலமான இசைகள்** அங்கு தொனித்தன. கர்த்தர் தமது கையை அசைத்தார். அப்போது கோடிக்கணக்கானவர்கள் தங்கள் கைகளில் விலங்கிடப்பட்டு மேலே தொங்கிக்கொண்டிருந்ததை நாங்கள் கண்டோம். அவர்கள் அக்கினியின் மேல் கடுமையாகக் குதித்துக் கொண்டிருந்தனர்.

கர்த்தர் எங்களை நோக்கி, **'பாருங்கள்! நடனம் பண்ணுகிறவர்களுக்கான சம்பளம் இதுதான்'** என்றார். இசையின் தாளத்திற்கேற்ப அவர்கள் மேலும் கீழுமாகக் கடுமையாகக் குதிக்க வேண்டியதாயிருந்தது. சல்சா இசை வாசிக்கப்படுமாயின், அந்தத் தாளத்திற்கேற்ப அவர்கள் குதிக்க வேண்டும்; வேறு ஏதேனும் ஒரு இசை வாசிக்கப்படுமாயின், அதன் தாளத்திற்கேற்ப அவர்கள் குதிக்க வேண்டும். அவர்கள் தாங்கள் குதிப்பதை ஒருபோதும் நிறுத்த முடியாதிருந்தது. இதைப் பார்க்கிலும் மோசமான விஷயம் யாதெனில், அவர்களுடைய பாதரட்சைகள் அடிப்பகுதியில் ஆறு அங்குல நீளமுள்ள ஆணிகளைக் கொண்டிருந்தன. அவர்கள் குதிக்கும்போதெல்லாம் அவை அவர்களுடைய பாதங்களைத் துளைக்கும். அவர்களுக்கு ஒரு கூணப்பொழுதாகிலும் இளைப்பாறுதல் இருக்கவில்லை. அவர்களில் யாராவது ஒரு நபர் குதிப்பதைச் சற்று நிறுத்த முயற்சித்தால், உடனடியாகவே பிசாசுகள் அங்கு ஓடோடி வந்து, அந்நபரை ஈட்டிகளால் குத்தி, அந்நபரைச் சபித்து,

வாசனைத் திரவியப் புட்டிக்குள் ரூபீல்லா

அவனை/அவளை நோக்கி, 'அவனைத் (சாத்தானை) துதி! இப்போது இது உன்னுடைய ராஜ்யம்; சாத்தானைத் துதி! அவனையே துதி! நீ நிறுத்த முடியாது. அவனைத் துதித்துக் கொண்டேயிரு! நீ அவனைத் துதிக்கத்தான் வேண்டும்! நீ குதிக்கத்தான் வேண்டும்! நீ நடனம் ஆடத்தான் வேண்டும்! ஒரு வினாடி கூட நீ நிறுத்த முடியாது!' என்று கூறும்.

அங்கிருந்தவர்களில் அநேகர் கர்த்தரை அறிந்திருந்த கிறிஸ்தவர்களாயிருந்தனர். ஆனால் அவர்கள் தாங்கள் மரிக்கும் நேரத்தில் இரவு விடுதிகளில் (night clubs) இருந்திருக்கின்றனர். 'நடனம் பண்ணுவது தவறு என்று வேதாகமத்தில் எங்கே கூறப்பட்டுள்ளது?' என நீங்கள் ஒருவேளை கேட்கலாம். "விபசாரரே, விபசாரிகளே, உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகையென்று அறியீர்களா? ஆகையால் உலகத்துக்குச் சிநேகிதனாயிருக்க விரும்புகிறவன் தேவனுக்குப் பகைஞனாகிறான்" (யாக் 4 : 4 ; I யோவான் 2 : 15–17). ஒன்றை நினைவிற்கொள்ளுங்கள். உலகம் கடந்து போய்விடும்; இவையெல்லாம் அழிந்துபோய்விடும்; ஆனால் தேவனுடைய சித்தம் செய்கிறவனோ என்றென்றும் நிலைத்திருப்பான்.

நாங்கள் இந்த இடத்தை விட்டுப் போனபோது, பாதாளத்தை 'வேதனைகளின் பல பிரிவுகளாகப்' பிரிக்கிற பாலங்களைப் போன்றவைகளைக் கண்டோம். குறுகலான நடைப்பாலம் ஒன்றின் மேல் ஒரு ஆவி நடந்து போய்க் கொண்டிருந்தது. அது, நாம் பூமியில் காண்கிற ஒரு குறிப்பிட்ட பொம்மையைப் போன்றிருந்தது. [அவைகளை நாம் Treasure Trolls என அழைக்கிறோம். அவை வெவ்வேறான நிறங்கள் உள்ள தலைமயிரும், ஒரு வயோதிபனின் முகமும், ஒரு சிறு குழந்தையின் உடலும் உள்ளவையாயிருக்கும்]. அந்த ஆவிகளின் கண்கள் தீமையால் நிறைந்திருந்தன. அவை நஷ்டமடையச் செய்யும் ஆவிகள் (spirits of loss) என கர்த்தர் எங்களுக்கு விவரித்தார். இந்த ஆவி தன் கைகளில் ஒரு ஈட்டியை வைத்துக்கொண்டு, அந்த நடைபாலத்தின் மேல் ஒரு ராணியைப் போல அல்லது விமான ஓடுபாதையின் ஓரத்தில் உள்ள ஒரு அழகியைப் போல பகட்டாக நடந்து சென்றுகொண்டிருந்தது.

அந்த ஆவி நடந்து போகும்போதே தன் ஈட்டியினால் ஆட்களைக் குத்தி வீழ்த்திக்கொண்டே சென்றது. அது அவர்களை நோக்கி, 'நீ ஒரு கிறிஸ்தவ ஆலயத்தின் வெளியே நின்று கொண்டு, அதற்கு உள்ளே செல்ல விருப்பமற்றிருந்த அந்த நாள் உனக்கு நினைவிருக்கிறதா? அவர்கள் உனக்குப் பிரசங்கித்தும் நீ அதற்குச் செவிகொடுக்க விருப்பமற்றிருந்த அந்த நாள் உனக்கு நினைவிருக்கிறதா? அவர்கள் உனக்கு ஒரு சுவிசேஷக் கைப்பிரதியைக்

கொடுத்தும் நீ அதை வீசி எறிந்தாயே, அந்த நாள் உனக்கு நினைவிருக்கிறதா?' என்று கேட்டு, அவர்களைச் சபித்தது. நஷ்டமடைந்துபோன ஆத்துமாக்களோ தங்கள் காதுகள் இருந்த இடங்களை (இப்போது அவற்றுக்குக் காதுகள் இல்லை) அடைத்துக்கொள்ளப் பிரயாசப்பட்டன. அவை அப்பிசாசை நோக்கி, 'வாயை மூடு! வாயை மூடு! இனி ஒருபோதும் அதைப் பற்றி என்னிடம் சொல்லாதே! அதைப்பற்றி இன்னும் அதிகமாகக் கேட்க நான் விரும்பவில்லை. வாயை மூடு!' என்று கூறின. இருப்பினும், இப்படிச் சொல்லுவதால், தான் அந்த ஆத்துமாக்களில் உண்டாக்கும் வேதனையினிமித்தம், தொடர்ந்து இப்படிச் செய்வதில் அந்தப் பொல்லாத ஆவி இன்பங்கண்டது.

நாங்கள் கர்த்தருடன் தொடர்ந்து நடக்கலானோம். அங்கு எரிந்து கொண்டிருந்த திரள் கூட்டம் பேரை நாங்கள் கவனித்துப் பார்த்தபோது, அவர்கள் மத்தியிலிருந்த ஒருவன் மற்றவர்களைக் காட்டிலும் உரத்த சத்தத்தில் அலறிக்கொண்டிருந்தான். அவன், 'அப்பா! பிதாவே! எனக்கு இரங்கும்!' என்று கதறிக் கொண்டிருந்தான். அவனைப் பார்க்கும்படி கர்த்தர் நிற்பதாகத் தெரியவில்லை. ஆனால் 'அப்பா! பிதாவே!' என்ற வார்த்தையை அவர் கேட்டபோது அவர் அசைக்கப்பட்டவராகத் திரும்பிப் பார்த்தார். இயேசு அவனை நோக்கிப் பார்த்து, 'பிதாவா? நீ என்னைப் பிதாவே என்று அழைக்கிறாயா? இல்லை! நான் உன் பிதா அல்ல, நீ என் குமாரனுமல்ல. நீ என் குமாரனாக இருந்திருந்தால், நீ இப்போது என்னோடு கூட பரலோக ராஜ்யத்தில் இருந்திருப்பாய். நீ உன் பிதாவாகிய பிசாசின் மகன்' என்றார். உடனடியாக ஒரு அக்கினிப் போர்வை அவனை முழுவதுமாக மூடிவிட்டது.

இந்த மனிதனின் ஜீவிய சரித்திரத்தைக் கர்த்தர் எங்களுக்குச் சொன்னார். அவன் கர்த்தரை அறிந்தவனாயிருந்தபடியினாலேயே அவரைப் 'பிதாவே' என்று அழைத்தான். அவன் தேவாலயத்திற்குச் சென்று தேவனுடைய வார்த்தைகளைக் கேட்பது வழக்கம். அவன் தேவனுடைய வாக்குத்தத்தங்கள் பலவற்றைப் பெற்றவனாகவும் இருந்திருக்கிறான். நாங்கள் கர்த்தரிடம், 'அப்படியானால், கர்த்தாவே அவனுக்குச் சம்பவித்தது என்ன? அவன் ஏன் இங்கு இருக்கிறான்?' என வினவினோம். கர்த்தர் எங்களுக்கு மறுமொழியாக, **"அவன் ஒரு இரட்டை வாழ்க்கை (double life) வாழ்ந்து வந்தான். அவன் தன் வீட்டில் ஒரு விதமாகவும், ஆலயத்தில் வேறு விதமாகவும் ஜீவித்தான். 'எனக்கு மிகவும் அருகாமையில் யாரும் குடியிருக்கவில்லை, பாஸ்டரோ அல்லது வேறு எந்த சகோதரனும் என் அருகாமையில் இல்லை. ஆகவே நான் என் விருப்பம் போல எதையும் செய்யலாம்' என்று அவன் தனக்குள்**

சொல்லிக்கொண்டான். ஆனால் உங்களுடைய வழிகள் எல்லாவற்றின்மேலும் கர்த்தருடைய கண்கள் பதிக்கப்பட்டிருக்கின்றன என்பதையும், யாரும் தேவனிடத்தில் பொய் சொல்லவோ, தேவனுக்கு எதையாகிலும் மறைக்கவோ முடியாது என்பதையும் அவன் மறந்துவிட்டான்" என்று கூறினார்.

"மோசம்போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம் பண்ணவொட்டார்; மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்" (கலா. 6 : 7) என கர்த்தருடைய வசனம் கூறுகிறது. இந்த மனிதன் அங்கிருந்த மற்ற எல்லாரையும் பார்க்கிலும் ஆயிரம் மடங்கு மோசமாக வேதனையனுபவித்துக் கொண்டிருந்தான். அவன் இரட்டிப்பான கோபாக்கினையை அனுபவித்துக் கொண்டிருந்தான். ஒன்று, தன்னுடைய பாவங்களுக்காக; மற்றது, தான் தேவனை ஏமாற்றலாம் என்று நினைத்ததற்காக!

இன்று ஜனங்கள் பாவத்தைத் தரவாரியாகப் பகுத்து மதிப்பீடு செய்ய முயற்சிக்கின்றனர். அவர்கள், ஒரினச் சேர்க்கையில் ஈடுபடுவோரும், திருடரும், கொலைபாதகரும், பொய் சொல்லுகிறவர்களையும், புறங்கூறுகிறவர்களையும் பார்க்கிலும் கொடும்பாவிகள் என நினைக்கின்றனர். ஆனால் கர்த்தருடைய பார்வையில் இப்பாவங்கள் அனைத்தும் ஒரே எடையுள்ளவையே; அவற்றின் சம்பளமும் ஒன்றே. "பாவத்தின் சம்பளம் மரணம்", 'பாவம் செய்யும் ஆத்துமா சாகும்' (ரோமர் 6 : 23 ; எசேக். 18 : 20) என்று வேதாகமம் கூறுகிறது. அருமையானவர்களே, கர்த்தராகிய இயேசுவின் அழைப்பை ஏற்றுக்கொள்ளும்படி இப்போது நான் உங்களை அழைக்கிறேன். நீங்கள் மனந்திரும்பினால், அவர் தமது இரக்கத்தின் கரத்தை உங்களிடமாக நீட்டுவார். மனந்திரும்பி, தன் வழிகளைச் சீர்ப்படுத்திக்கொள்கிறவன் இரக்கம் பெறுவான் என கர்த்தருடைய வசனம் கூறுகிறது. விசுவாசிப்பதற்கு இப்போது தாமதம் பண்ணிக் கொண்டேயிருந்துவிட்டு, திரும்பிவர விரும்பினாலும் வர முடியாத கடினமான வழியைப் பிற்பாடு மறுமையில் கண்டு வருந்துவதைப் பார்க்கிலும், இப்போதே விசுவாசிப்பது மிகவும் நல்லது. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

சாட்சி - 5

"பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்" (ரோமர் 6 : 23).

கர்த்தருடன் சேர்ந்து கீழே இறங்கி அந்த இடத்திற்குச் சென்றபோது நான் மரணவேதனையையும் மரணத்தின் அனுபவத்தையும் என்னில் உணர்ந்தேன். நான் கண்ட காட்சி என்னை மிகுந்த பயத்திற்குள்ளாக்கிற்று. அங்கே ஏராளம். ஏராளம்பேர் இருப்பதை நான் அறிந்துகொண்டேன். அவர்கள் எல்லாரும் கூக்குரலிட்டுக் கதறிக்கொண்டிருந்தனர். அது காரிருள் சூழ்ந்த இடமாயிருந்தது. ஆனால் என்னோடு வந்த கர்த்தருடைய பிரசன்னத்தினால் அந்த இருள் மறைந்துபோயிற்று. உதவியையும் இரக்கத்தையும் நாடி கதறிக் கொண்டிருந்த ஆயிரமாயிரமான ஆத்துமாக்களை நாங்கள் கண்டோம். அந்த இடத்திலிருந்து தங்களை வெளியே கொண்டுவரும்படி அவர்கள் கர்த்தரை நோக்கிக் கதறிக் கொண்டிருந்தனர். அவர்களைப் பார்த்தபோதெல்லாம் கர்த்தரும் அதிகமாக மனவேதனையுறுவதை நாங்கள் அறிந்தபடியால், நாங்களும் அதிகமான வேதனையை உணர்ந்தோம்.

'ஒரு நிமிடம் மாத்திரம், ஒரு நொடிப்பொழுது மாத்திரம் எங்களை இந்த இடத்திலிருந்து விடுதலையாக்கும்' என்று அநேகர் கர்த்தரை நோக்கிக் கதறினர். 'நீ எதற்காக இங்கிருந்து வெளியே வர விரும்புகிறாய்' என்று கர்த்தர் அவர்களிடம் கேட்டபோது, 'நான் இரட்சிக்கப்பட விரும்புகிறேன்! நான் மனந்திரும்பி இரட்சிக்கப்பட விரும்புகிறேன்! அதற்காகத் தான் நான் இங்கிருந்து வெளியே வர விரும்புகிறேன்' என்பதே அவர்கள் ஒவ்வொருவரும் அளித்த பதிலாயிருந்தது. ஆனால் மனந்திரும்புவது அவர்களுக்குக் காலங்கடந்த ஒன்றாகிவிட்டது!

இதை வாசிக்கும் நேயரே! நம்முடைய நித்தியமான இலக்கைத் தெரிந்துகொள்வதற்கான ஒரே தருணம் நாம் இப்பூமியில் வாழ்கின்ற இந்நாட்கள் மட்டுமே! ஒன்று, 'நீங்கள் நித்திய இரட்சிப்புக்கான இடத்தைத் தெரிந்துக்கொள்ளலாம் அல்லது நித்திய ஆக்கினைத் தீர்ப்புக்கான இடத்தைத் தெரிந்துகொள்ளலாம்.

நாங்கள் இன்னும் கீழே இறங்கிச் சென்றோம். நாங்கள் நடந்து கொண்டிருந்த தரையானது தீயினால் அழிக்கப்பட்டுப்போயிருந்ததை நான் கண்டேன். சேறும், ஜுவாலைகளும் அதினின்று வெளியே வந்துகொண்டிருந்தன. அவ்விடமெங்கும் சகிக்க முடியாத துர்நாற்றமும் வீசிக்கொண்டிருந்தது. ஜனங்கள் இடும் கூக்குரலின் சத்தமும்,

அங்குள்ள துர்நாற்றமும் எங்களைச் சோர்வடையப்பண்ணி, வாந்தி பண்ணுவதற்கேதுவான குமட்டலை உண்டாக்கின.

நாங்கள் பூமியில் பொருட்படுத்தாமல் அலட்சியம் பண்ணிக் கொண்டிருந்த பல காரியங்களை அங்கு விளங்கிக்கொள்ள ஆரம்பித்தோம். அவற்றுள் மிக முக்கியமானது - **இப்பூமியில் நாம் ஜீவிக்கும் நம்முடைய ஜீவியமே நாம் நம்முடைய நித்தியத்தை எங்கே செலவிடப் போகிறோம் என்பதை நிர்ணயிக்கும்** என்ற மிகத் தெளிவான தாது ஆகும்.

நாங்கள் கர்த்தரோடு கூட கைகோர்த்து நடந்து சென்றபோது, வேதனைகள் பல அளவுநிலைகளில் உள்ள பல்வேறு இடங்கள் நரகத்தில் உள்ளன என்பதை உணர்ந்துகொண்டோம். வேதனைக்குள்ளாக்கப்பட்டிருக்கும் ஆத்துமாக்கள் அடைக்கப்பட்டிருந்த பல அறைகளைக் கொண்ட ஓரிடத்திற்கு நாங்கள் வந்தோம். அநேக விதமான பிசாசுகளால் அந்த ஆத்துமாக்கள் துன்புறுத்தப்பட்டு வந்தன. அப்பிசாசுகள் அந்த ஆத்துமாக்களைச் சபித்து, 'சபிக்கப்பட்ட நிர்ப்பந்தமான ஆத்துமாக்களே, சாத்தானை நமஸ்கரியுங்கள்! நீங்கள் பூமியிலிருந்தபோது எப்படி அவனை ஆராதித்து, அவனைச் சேவித்தீர்களோ, அப்படியே இப்போதும் அவனைச் சேவியுங்கள்' என்று கூறின. அந்த ஆத்துமாக்கள் புழுக்களினால் அதிகமான வேதனைக்குள்ளாயினர். அந்த அக்கினி அவர்களுடைய சரீரம் முழுவதையும் அமிலம் போல எரித்தது.

வெகு தூரத்தில் நாங்கள் ஒரு மனிதனைக் கண்டோம். எரிந்துகொண்டிருக்கும் சேற்றுக்குள் அவன் இடுப்பளவிற்கு மூழ்கியிருந்தான். அவன் தன் கைகளை எப்போதெல்லாம் அதினின்று வெளியே எடுக்கப் பிரயாசப்பட்டானோ, அப்போதெல்லாம் அவனுடைய எலும்புகளிலிருந்து தசையானது அந்தச் சேற்றுக்குள் கழன்று விழுந்தது. அவனுடைய எலும்புக்கூட்டிற்குள் நாங்கள் சாம்பல் நிறமான மூடுபனி போன்ற ஒன்றினைக் கண்டோம். அது என்ன என்று நாங்கள் கர்த்தரிடத்தில் கேட்டோம். பாதாளத்தில் இருந்த ஒவ்வொரு நபருக்குள்ளும் இவ்விதமான மூடுபனி போன்ற ஒரு வஸ்து இருந்தது. அது பாவசரீரத்தின் கண்ணிக்குள் சிக்கியிருக்கும் அவர்களுடைய ஆத்துமா ஆகும். "அவர்களுடைய வாதையின் புகை சதாகாலங்களிலும் எழும்பும்; மிருகத்தையும் அதின் சொரூபத்தையும் வணங்குகிறவர்களுக்கும், அதினுடைய நாமத்தின் முத்திரையைத் தரித்துக்கொள்ளுகிற எவனுக்கும் இரவும் பகலும் இளைப்பாறுதலிராது" (வெளி. 14 : 11).



தசை உருகி விழுதல்

அங்கு ஒரு காவல் அறைக்குள் இரு மனிதர்கள் இருந்தனர். அவர்கள் இருவருடைய கைகளிலும் பட்டாக்கத்திகள் இருந்தன. அவற்றால் அவர்கள் ஒருவரையொருவர் தாக்கிக் கொண்டிருந்தனர். 'சபிக்கப்பட்ட நிர்ப்பந்தமான மனுஷனே, உன்னால் தான் நான் இங்கு இருக்கிறேன்; சத்தியத்தை அறிந்துகொள்ளக் கூடாதபடிக்கு நீ என் மனக்கண்களைக் குருடாக்கினாய்; நீ என்னைக் கர்த்தரை அறிந்துகொள்ளவிடவில்லை! நீ என்னை அவரை ஏற்றுக்கொள்ளவும் விடவில்லை; அவரை ஏற்றுக்கொள்ளுவதற்கு எனக்கு அநேக தருணங்கள் கிடைத்தன; நீயோ நான் அவரை ஏற்றுக்கொள்ள விடவில்லை. ஆகையால்தான் நான் இப்போது இரவும் பகலும் வாதிக்கப்பட்டுக்கொண்டு இங்கு இருக்கிறேன். நீ தான் என்னை இங்கு வரச் செய்தாய்!' என்று அவர்கள் ஒருவரையொருவர் நோக்கி கூறிக்கொண்டனர்.

பூமியில் அவர்கள் செய்த ஜீவியத்தைக் கர்த்தர் ஒரு தரிசனத்தில் எங்களுக்குக் காண்பித்தார். அவர்கள் இருவரும் ஒரு மதுபானக் கடையில் ஒன்றாக அமர்ந்திருந்ததை நாங்கள் அத்தரிசனத்தில் கண்டோம். அவர்களுக்கிடையே ஒரு தர்க்கம் உண்டாகி, அது முடிவாக ஒரு சண்டையில் முடிவுற்றது. அவர்கள் ஏற்கனவே குடிபோதையில் இருந்தனர். ஒருவன் ஒரு உடைந்த புட்டியை எடுத்துக்கொண்டான்; மற்றவன் ஒரு கத்தியை உருவினான். இருவரும் மரணக் காயம் அடையும் வரை ஒருவரோடொருவர் சண்டையிட்டு, முடிவில் இருவரும் மாண்டனர். அந்த இரண்டு மனிதரும் பாதாளத்தில் இந்த நாடகக் காட்சியை என்றென்றுமாகத் திரும்பத்திரும்ப செய்து கொண்டேயிருக்கும்படி நியாயத் தீர்ப்படைந்தனர். அவர்கள் தாங்கள் பூமியிலிருந்தபோது உடன்பிறந்த சகோதரர் போல ஒருவர் மேல் ஒருவர் அன்புள்ள நெருங்கிய நண்பர்களாயிருந்ததைப் பற்றிய ஞாபகமும் அவர்களை அதிகமான வேதனைக்குள்ளாக்கிற்று.

இன்று நான் உங்களுக்குச் சொல்ல விரும்புவது யாதெனில், மெய்யான நண்பர் ஒருவரே. அவருடைய பெயர் நசரேயனாகிய இயேசு! அவர்தான் உண்மையான சிநேகிதர். ஒவ்வொரு நொடிப்பொழுதிலும் உன்னோடு கூட இருக்கிற உண்மையுள்ள நண்பர் அவரே!

நாங்கள் தொடர்ந்து நடந்து போய்க்கொண்டிருந்தபோது, இன்னொரு காவல் அறைக்குள் இருந்த ஒரு ஸ்திரீயைக் கண்டோம். அவள் சேற்றில் புரண்டுகொண்டிருந்தாள். அவளுடைய தலைமயிரெல்லாம் சீர்குலைந்துபோய், சேற்றினால் நிறைந்திருந்தது. அதே காவலறைக்குள் பெரிதும் பருத்ததுமான ஒரு சர்ப்பமும் இருந்தது. சாட்சி-3-இல் குறிப்பிடப்பட்டுள்ள பிளன்கா என்ற ஸ்திரீயின்

நிலையிலேயே இவளும் இருந்தாள். சர்ப்பம் மீண்டும் மீண்டும் அவளுடைய சரீரத்தை அழித்தபோது அவள், 'அதை நிறுத்தும்! நான் இனி அப்பாவத்தைச் செய்ய மாட்டேன்! தயவுசெய்து அதை நிறுத்தும்!' என கர்த்தரிடம் கெஞ்சினாள்.

அவளுடைய கதறுதலைக் கேட்காதிருக்கும்படி நாங்கள் எங்கள் காதுகளை அடைத்துக்கொள்ளப் பிரயாசப்பட்டோம். இருப்பினும் அவளுடைய சத்தத்தை நாங்கள் கேட்கக் கூடியதாயிருந்தது. இன்னும் பலமாக நாங்கள் எங்கள் காதுகளை அடைத்துக்கொண்டோம்; ஆனால் அது எவ்விதத்திலும் உதவவில்லை. நாங்கள் கர்த்தரை நோக்கி, 'கர்த்தாவே, இதற்கு மேல் நாங்கள் இதைப் பார்க்கவும் கேட்கவும் விரும்பவில்லை; தயவுசெய்து இதை எங்கள் முன்னின்று அகற்றும், தயவாய் இரங்கும்' என கெஞ்சினோம். கர்த்தரோ, **'மற்றவர்களுக்கு இதை நீங்கள் சொல்லத்தக்கதாக நீங்கள் இதைப் பார்க்க வேண்டியது அவசியம். ஏனெனில், என் ஜனங்கள் அழிந்துகொண்டிருக்கிறார்கள், என் ஜனங்கள் மெய்யான இரட்சிப்பை, மெய்யான இரட்சிப்பின் வழியை அலட்சியம்பண்ணிக் கொண்டிருக்கிறார்கள்'** என்று கூறினார். "வஞ்சிக்கப்படாதிருங்கள்; வேசிமார்க்கத்தாரும், விக்கிரகாராதனைக் காரரும், விபசாரக்காரரும், சுயபுணர்ச்சிக்காரரும், ஆண்புணர்ச்சிக் காரரும், ... தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை" *(1 கொரி. 6 : 9, 10)*

தூரத்தில் ஒரு மனுஷன் மிகுந்த வேதனையோடும் தவிப்போடும் நின்று கொண்டிருந்ததை நாங்கள் கண்டோம். இரண்டு பிசாசுகள் அவனுக்கு மேலாகப் பறந்து, அவனை வாதித்துக் கொண்டிருந்தன. அவை அவனுடைய சரீரத்திற்குள் தங்கள் ஈட்டிகளைச் செலுத்தி, அவனுடைய விலா எலும்புகளைத் தோண்டி எடுத்தன. அத்துடன் அவனை அவை எப்போதும் பரியாசம் பண்ணிக் கொண்டிருந்தன. இவற்றுக்கும் மேலாக, அவன் தான் பூமியில் விட்டுவந்த தன்னுடைய குடும்பத்தைக் குறித்துள்ள கவலையினாலும் வாதிக்கப்பட்டுக் கொண்டிருந்ததைக் கர்த்தர் எனக்குக் காண்பித்தார். அதே வேதனையுள்ள இடத்திற்குத் தன் குடும்பத்தாரும் வந்து சேருவதை அவன் விரும்பவில்லை. அவர்களுக்குத் தான் ஒருபோதும் இரட்சிப்பின் தூதை அளிக்கவில்லையே என அவன் வருந்தினான். இந்தத் தூதைப் பெற்றுக்கொள்ள தன் குடும்பத்தாருக்கு வாய்ப்பு கிடைத்திருந்தபோதிலும், தான் அதைத் தள்ளிவிட்ட சந்தர்ப்பம் ஒன்று அவனுடைய ஞாபகத்தில் இருந்ததால், அந்த நினைவினால் அவன் வாதிக்கப்பட்டான். இந்தத் தூதைத் தன் குடும்பத்திற்குக் கொடுக்க வேண்டிய மிக முக்கியமான நபராகத் தான் இருந்தும், அதை அலட்சியம் பண்ணுவதையே தெரிந்துகொண்டதால், இப்போது அவன் தன் குமாரரைக் குறித்தும் மனைவியைக் குறித்தும் கவலைப்படுகிறான்.

அத்துடன் பிசாசுகள் அவனுடைய கைகளை வெட்டி, அவனை எரிகிற சேற்றுக்குள் வீழ்த்தியபோது அவனுடைய வேதனை அதிகரித்தது. எரிகிற சேற்றினாலுண்டான வேதனையால் அவன் ஒரு புழு போல சுழன்று துடித்தான். உஷ்ணத்தினால் அவனுடைய மாம்சம் அவனுடைய எலும்புகளிலிருந்து அற்று விழுந்தது. அந்த இடத்திலிருந்து வெளியே வரும்படி அவன் பாம்பு போல இங்குமங்கும் நெளிந்து சென்றான். அவன் தப்பிச்செல்ல பிரயாசப்பட்ட ஒவ்வொரு முறையும் பிசாசுகள் அவனை மீண்டும் கீழே தள்ளவே, அவன் இன்னும் அதிகமாகவே அந்தச் சேற்றுக்குள் அமிழ்ந்தினான்.

நாங்கள் தொடர்ந்து நடக்கலானோம். ஆயிரமாயிரமான ஜனங்கள் அக்கினி ஜுவாலைகளின் நடுவில் இருந்து வேதனைப்பட்டுக் கொண்டிருந்த ஒரு பெரிய இராட்சதக் கடலை நாங்கள் கண்டோம். அவர்கள், உதவியை நாடி தங்கள் கைகளை அசைத்துக்கொண்டிருந்தனர். ஆனால் அந்த இடத்திற்கு மேலாக அநேக பிசாசுகள் பறந்துகொண்டிருந்தன. அந்த அக்கினிக் கடலில் எரிந்துகொண்டிருந்த எல்லாரையும் தாக்கும்படி அப்பிசாசுகள் S வடிவத்திலான தலைபாகத்தைக் கொண்ட ஈட்டிகளை உபயோகித்தன. அவை அவர்களைப் பரியாசம் பண்ணி, 'சபிக்கப்பட்ட நிர்ப்பந்தமான மனுஷரே! இப்போது நீங்கள் சாத்தானை வணங்க வேண்டும்! அவனைத் துதியுங்கள்! நீங்கள் பூமியிலிருந்தபோது அவனை எப்படித் துதித்தீர்களோ அப்படியே இப்போதும் துதியுங்கள்!' என்று கூறி அவர்களைச் சபித்தன. நாங்கள் மிகவும் பயமடைந்திருந்தோம். கர்த்தரின் கரத்தை நாங்கள் பற்றிக் கொண்டிராவிடில், நாங்கள் அந்தப் பயங்கரமான இடத்திலேயே விட்டுவிடப்படுவோம் என உணர்ந்தோம். நாங்கள் கண்டுணர்ந்துகொண்டிருந்த ஒவ்வொரு காரியமும் எங்களைப் பயமடையச் செய்தன.

பின்பு நாங்கள் ஓரிடத்தில் ஒரு கூட்டம் பிசாசுகளைக் கண்டோம். ஒரு காரியம் என் கவனத்தை ஈர்த்தது. அப்பிசாசுகளுள் ஒன்று ஒரு செட்டையை இழந்திருந்தது. நான் கர்த்தரை நோக்கி, 'இந்தப் பிசாசு ஏன் தன் ஒரு செட்டையை இழந்திருக்கிறது?' என்று கேட்டேன். அவர், **'ஒரு நோக்கத்திற்காக இப்பிசாசு சாத்தானால் பாதாளத்திலிருந்து மேலே பூமிக்கு அனுப்பப்பட்டது; ஆனால் அது தனக்கு அளிக்கப்பட்ட வேலையை நிறைவேற்றவில்லை; தேவ ஊழியர் ஒருவரால் அது மீண்டும் பாதாளத்திற்குத் துரத்தப்பட்டு விட்டது. அப்போது சாத்தான் வந்து அதைத் தண்டித்து, அதன் ஒரு செட்டையை முறித்துவிட்டான்'** என்றார். அப்போது நாங்கள் கிறிஸ்தவர்களாகிய நமக்கு எல்லாப் பிசாசுகளையும் அதிகாரங்களையும் துரத்தும்படி கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் சகல அதிகாரமும் வல்லமையும் கொடுக்கப்பட்டுள்ளது என்பதை விளங்கிக்கொண்டோம்.

அக்கினிக் கடல்

இதை வாசிக்கிறவர்களே, இந்தச் சாட்சி உங்களை ஆக்கினைத் தீர்ப்புக்குள்ளாக்கும்படியாக அல்ல, உங்கள் இரட்சிப்புக்காகவே உங்களைச் சந்திக்கிறது. உங்களை நீங்களே பரீட்சித்துப் பார்த்து, கர்த்தருக்கு முன்பாக உங்கள் இருதயத்தின் நிலை எவ்வாறு இருக்கிறது என்பதைக் கண்டுகொள்ளுங்கள். அது நீங்கள் ஆக்கினைத் தீர்ப்புக்குள்ளாகாமல், இரட்சிக்கப்படத்தக்கதாக உங்கள் வழிகளை நீங்கள் மாற்றிக்கொள்ள உதவியாயிருக்கும். இப்போதே உங்கள் இருதயங்களைக் கர்த்தருக்கு நேராக ஏறெடுத்து, உங்கள் பாவங்களை அறிக்கை செய்யுங்கள். அப்படியானால் அழுகையும் பற்கடிப்புமுள்ள அந்த வேதனை நிறைந்த இடத்திற்கு நீங்கள் தப்பிக்கொள்ளலாம். கல்வாரிச் சிலுவையில் கர்த்தராகிய இயேசு அவ்வளவு பெரிய கிரயத்தைச் செலுத்தியதின் காரணத்தைப் பரலோகத்திற்குப் போகும்போதுதான் நீங்கள் உண்மையாகவே விளங்கிக்கொள்வீர்கள்.

தாங்கள் ஏன் அங்கே இருக்கிறார்கள் என்பதை அறியாமலேயே அநேகர் பாதாளத்தில் இருப்பதை நாங்கள் கண்டோம். அவர்கள் 'பாவம்' என்று நினைத்திராத கிரியைகளால் அவர்களுடைய ஜீவியம் நிறைந்திருந்தது. அருமை நண்பனே! உன்னை ஆராய்ந்து பார்! **பொய் சொல்லுதல், திருடுதல், நேரத்தை வீணாகக் கழித்தல்** போன்றவை பரவாயில்லை; அவை தவறல்ல என்று நீ எண்ணிக்கொண்டிராதே! கர்த்தருடைய கண்களுக்கு முன்பாக அவை யாவும் பாவமே! அப்படிச் செய்வதை நிறுத்தி, நீ மனந்திரும்பு! நீ மனப்பூர்வமாகப் பாவம் செய்வதை நிறுத்திவிட்டு, கர்த்தருடைய முகத்தை இன்னும் அதிகமாக நோக்கிப்பார்க்க வேண்டுமென்றே நான் இச்செய்தியை உனக்கு அளிக்கிறேன்.

சாட்சி — 6

"கிருபையும் உம்முடையது, ஆண்டவரே! தேவரீர் அவனவன் செய்கைக்குத் தக்கதாகப் பலனளிக்கிறீர்" (சங். 62 : 12).

அந்த அறையில் கர்த்தர் எங்களைச் சந்தித்த காலை வேளையில், அவர் எங்கள் கைகளைப் பிடித்து அழைத்துச் சென்றார். நாங்கள் கீழே இறங்க ஆரம்பித்தோம். என்னால் விவரிக்கக்கூட இயலாத அளவுக்கு என் இருதயம் முற்றிலும் பயத்தினால் நிறைந்திருந்தது. என் இரட்சகருடைய கரத்தின் பிடியை நான் நழுவ விட்டுவிடக் கூடாது என்பதை மட்டும் நான் அறிந்திருந்தேன். இயேசுவே என் ஜீவனும் ஒளியுமாயிருக்கிறார் என்பதையும், என் நம்பிக்கையெல்லாம் அவரிலேயே இருப்பதையும் நான் உணர்ந்தேன். அப்படி இல்லாவிடில் அந்த இடத்திலேயே நான் விட்டுவிடப்பட்டிருப்பேன். நான் அந்த இடத்திற்குப் போவேன் என்று ஒருபோதும் நினைக்கவில்லை. அப்படி ஒரு இடம் இருக்கிறது என்று நான் விசுவாசித்திருக்கவும் இல்லை. நான் ஒரு கிறிஸ்தவ நபராக இருந்தபோதிலும், உத்தரிக்கும் ஸ்தலம் தான் நரகம் என்றே எப்போதும் எண்ணி வந்தேன். ஆனால் தேவன் எனக்கு நரகம் என்ற ஒன்று உண்மையாகவே இருக்கிறது என்பதைக் காண்பித்தார்.

நாங்கள் பாதாளத்தைச் சென்றடைந்தபோது, அந்த இடம் குலுங்குவதை உணர்ந்தேன்; அங்கிருந்த பிசாசுகள் எல்லாம் மறைவிடம் தேடி ஓடின. காரணம், அவைகளில் ஒன்றினாலும் கர்த்தருடைய சமுகத்தைச் சகித்துக்கொள்ள முடியவில்லை. அங்கு சிறைப்பட்டிருந்த ஆத்துமாக்கள் நசரேயனாகிய இயேசு அங்கு வந்திருப்பதை அறிந்தமையால் இன்னும் உரத்த சத்தத்தில் கூப்பிடுவதை நாங்கள் கேட்டோம். தங்களை அந்த இடத்திலிருந்து வெளியே கொண்டுவரக் கூடிய ஒரே நபர் அவர் மட்டுமே என்பதை அவர்கள் யாவரும் அறிந்திருந்தனர். அது ஒரு தவறான நம்பிக்கையாயிருந்தபோதிலும், அவர்களில் அந்த நம்பிக்கை இருந்தது.

நாங்கள் இயேசுவோடு கைகோர்த்து நடந்து சென்று, வேசித்தனத்தினால் பாதாளத்திலிருப்பவர்களின் பிரிவை அடைந்தோம். அங்கு அக்கினியினால் முழுவதும் மூடப்பட்டிருந்த ஒரு ஸ்திரீயைப் பார்க்கும்படி இயேசு திரும்பினார். இயேசு அவளைப் பார்த்தபோது, அவள் அக்கினியினின்று மெதுவாக வெளியே வர ஆரம்பித்தாள். அவளுடைய சரீரம் முற்றிலும் அசுத்தமாயிருந்தது. அவளில் துர்நாற்றம் வீசிற்று. அவளுடைய தலைமயிர் சீர்குலைந்து காணப்பட்டது. அவள் மீது மஞ்சள் கலந்த பச்சை நிறமான சேறு இருந்தது. அவளுக்குக் கண்கள் இருக்கவில்லை; அவளுடைய உதடுகள் துண்டு துண்டாகக்

கீழே விழுந்து கொண்டிருந்தன. அவளுக்குக் காதுகள் இருக்கவில்லை; அந்த இடங்களில் இரு துவாரங்கள் மட்டுமே இருந்தன. கறுப்பாகக் கருகிப்போயிருந்த எலும்புகளாக இருந்த தன் கைகளைக் கொண்டு அவள் தன் முகத்திலிருந்து விழும் சதைகளை எடுத்து முகத்தில் மீண்டும் ஒட்டவைத்துக் கொண்டிருந்தாள். ஆனால், இது அவளுக்கு இன்னும் மோசமான வேதனையை அளித்தது.

பின்பு அவள் முன்னிலும் அதிகமாகக் குலுங்கி, கூச்சலிட்டாள். அவளுடைய அலறலுக்கு முடிவே இல்லை. அவள் புழுக்களால் நிறைந்திருந்தாள். அவளுடைய கையை ஒரு சர்ப்பம் சுற்றியிருந்தது. அது மிகவும் பருமனாயிருந்தது; அதின் உடலெங்கும் முட்கள் நிறைந்திருந்தன. அவளுடைய சரீரத்தின்மேல் 666 என்ற இலக்கம் பதிக்கப்பட்டிருந்தது. அது வெளிப்படுத்தின விசேஷம் 13: 18-இல் குறிப்பிடப்பட்டுள்ள மிருகத்தின் இலக்கமாகும். அறியப்படாத ஒரு உலோகத்தாலானதும் அக்கினியில் வெந்துபோகாததுமான ஒரு தகடும் அவளுடைய மார்பில் பதிக்கப்பட்டிருந்தது. அறியப்படாத ஒரு மொழியில் அந்தத் தகட்டின் மேல் ஏதோ எழுதப்பட்டிருந்தது. ஆனால் அதின் மேல் எழுதப்பட்டிருந்தது என்ன என்பதை எங்களால் விளங்கிக்கொள்ள முடிந்தது. அது, **'நான் வேசித்தனத்தினிமித்தம் இங்கே இருக்கிறேன்'** என்பதாகும்.

இயேசு அவளைப் பார்த்தபோது, அவளை நோக்கி, 'எலீனா (Elena), நீ ஏன் இந்த இடத்தில் இருக்கிறாய்?' என்று கேட்டார். எலீனா அவருக்குப் பதில் சொல்லிக்கொண்டிருந்தபோது, அவள் அடைந்த உபத்திரவங்களினால் உண்டான வேதனையினால் முறுக்கப்பட்டு, அவளது சரீரம் நெளிந்தது. வேசித்தனத்தின் நிமித்தமாகத் தான் அங்கிருப்பதாக அவள் கூறினாள். தன்னை மன்னிக்கும்படி அவள் கர்த்தரிடத்தில் மீண்டும் மீண்டும் கேட்டாள். தற்போது அவள் பாதாளத்திற்கு வந்து 7 வருடங்கள் கடந்துவிட்டன. என்றாலும் அவளது பூலோக வாழ்க்கையின் ஒவ்வொரு நிமிடமும் அவளுடைய நினைவில் இருக்கின்றன. அவளை இரட்சிக்கக்கூடிய ஒரே ஒருவர் இயேசு மட்டுமே என்று இயேசுவைப் பற்றி யாரோ அவளுக்குப் பிரசங்கிக்க முயற்சித்ததும் அவளது ஞாபகத்தில் இருக்கிறது. ஆனால் இப்போதோ அவளுக்கும், பாதாளத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் மனந்திரும்புவதற்கான காலம் கடந்துவிட்டது!

கர்த்தருடைய வசனம் வேசித்தனம் பற்றி மிகத் தெளிவாகவும் ஏராளமாகவும் பேசுகிறது. வேசித்தனம் என்பது விவாகத்திற்குப் புறம்பாகப் பாலுறவு கொள்ளுதல் ஆகும். "வயிற்றுக்குப் போஜனமும் போஜனத்துக்கு வயிறும் ஏற்கும்; ஆனாலும் தேவன் இதையும் அதையும் அழியப் பண்ணுவார். சரீரமோ வேசித்தனத்திற்கல்ல, கர்த்தருக்கே

உரியது; கர்த்தரும் சரீரத்திற்கு உரியவர். வேசித்தனத்திற்கு விலகியோடுங்கள். மனுஷன் செய்கிற எந்தப் பாவமும் சரீரத்திற்குப் புறம்பாயிருக்கும்; வேசித்தனஞ் செய்கிறவனோ தன் சுயசரீரத்திற்கு விரோதமாய்ப் பாவஞ்செய்கிறான்" (I கொரி. 6 : 13, 18).

இயேசு அவளோடு பேசி முடித்தபோது, அவளை ஒரு பெரிய அக்கினிப் போர்வை மூடிற்று. அதற்குப் பின்பு அவளை நாங்கள் பார்க்கவே முடியவில்லை. ஆனால் அவளுடைய மாம்சம் எரிகிற சத்தத்தையும், அவளுடைய பயங்கரமான அலறல்களையும் நாங்கள் கேட்டோம். அதை வார்த்தைகளால் விவரிக்கக்கூட இயலாது.

நாங்கள் கர்த்தரோடு தொடர்ந்து நடந்துபோய்க் கொண்டிருந்தபோது, அங்கிருந்த எல்லாரையும் அவர் எங்களுக்குக் காண்பித்தார். **அவர்கள் விக்கிரகாராதனைக்காரர், மந்திரவாதமும், பில்லி சூனியமும் செய்கிறவர்களும் அதை உபயோகிக்கிறவர்களும், துர்நடத்தையுள்ளவர்கள், விபசாரக்காரர், பொய் சொல்லுகிறவர்கள், ஓரினச் சேர்க்கையில் ஈடுபடுவோர் போன்றவர்களே.** நாங்கள் மிகவும் பயமடைந்தோம். நாங்கள் செய்ய விரும்பிய ஒரே செயல், அந்த இடத்தை விட்டு ஓடி வந்துவிடுவதே. ஆனால் இயேசுவோ மற்றவர்கள் விசுவாசிக்கும்படியாக நாங்கள் அவர்களுக்குச் சொல்லத்தக்கதாக நாங்கள் அவற்றைப் பார்க்க வேண்டியது அவசியம் என்று சொல்லிக்கொண்டே இருந்தார்.

இயேசுவின் கரத்தை இன்னும் இறுகப் பிடித்துக்கொண்டு நாங்கள் அவரோடு நடக்கலானோம். நாங்கள் பாதாளத்தின் ஒரு பிரிவை அடைந்தோம். அங்கு நான் கண்டது என் மனதில் அதிகமாகப் பதிந்துவிட்டது. 23 வயதுள்ள ஒரு வாலிபனை நாங்கள் அங்கு கண்டோம். அவன் இடுப்பளவிற்கு அக்கினிக்குள் நின்று கொண்டிருந்தான். அவனுடைய வேதனை என்ன என்று சரியாக எங்களால் பார்க்க முடியவில்லை. ஆனால் 666 என்ற இலக்கம் அவன் மேல் பதிக்கப்பட்டிருந்தது. அவன் தன் மார்பில் ஒரு உலோகத் தகட்டை அணிந்திருந்தான். அதில், **'நான் என் இயல்பான சுபாவத்தில், சன்மார்க்கனாக (normal) இருந்ததால் இங்கு இருக்கிறேன்'** என எழுதப்பட்டிருந்தது. அவன் இயேசுவைப் பார்த்தபோது, தன் கைகளை அவரிடத்திற்கு நீட்டி, இரக்கத்திற்காகக் கெஞ்சினான். "மனுஷனுக்குச் செம்மையாய்த் தோன்றுகிற வழி உண்டு; அதின் முடிவோ மரண வழிகள்" (நீதி 14 : 12) என கர்த்தரின் வசனம் கூறுகிறது. 'நான் என் இயல்பான சுபாவத்தில், சன்மார்க்கனாக இருந்ததால் இங்கு இருக்கிறேன்' (I am here for being normal) என்று எழுதப்பட்டிருப்பதைக் கண்டபோது நாங்கள் கர்த்தரிடத்தில், 'கர்த்தாவே, இது எப்படி? இந்தக்

காரணத்திற்காக ஒரு நபர் இந்த இடத்திற்கு வர முடியுமா?' என்று கேட்டோம். அப்போது இயேசு அவனை நோக்கி, '**ஆண்ட்ரூ** (Andrew), **நீ ஏன் இங்கே, இந்த இடத்தில் இருக்கிறாய்?**' என்று கேட்டார். அவன் மறுமொழியாக, 'இயேசுவே, நான் பூமியில் இருந்தபோது கொலை செய்வதும் திருடுவதும் தான் பாவங்கள் என எண்ணினேன். ஆகவேதான் நான் ஒருபோதும் உம்மோடு நெருங்க முயற்சிக்கவில்லை' என்று கூறினான். "துன்மார்க்கரும், தேவனை மறக்கிற எல்லா ஜாதிகளும் நரகத்திலே தள்ளப்படுவார்கள்" *(சங். 9 : 17)*; "சன்மார்க்கனையும் துன்மார்க்கனையும் தேவன் நியாயந்தீர்ப்பார்" *(பிர். 3 : 17)* என திருவசனம் கூறுகிறது.

இன்று அநேகர் செய்வது போல, ஆண்ட்ரூ பாவங்களைத் தரவாரியாகப் பிரித்ததால் பெரும் தவறு செய்துவிட்டான். "பாவத்தின் சம்பளம் மரணம்; தேவனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவினால் உண்டான நித்தியஜீவன்" *(ரோமர் 6 : 23)* என வேதாகமம் தெளிவாகக் கூறுகிறது. மேலும் வேதாகமம் பாவத்தைப் பற்றிப் பேசும்போது, அது பாவங்களை ஒருபோதும் வகைவகையாகப் பகுத்துச் சொல்வதில்லை. ஏனெனில், அவை யாவுமே பாவங்களே. இயேசுவை அறிந்துகொள்ளவும் அவரை ஏற்றுக்கொள்ளவும் ஆண்ட்ரூவுக்குத் தருணம் கிடைத்திருந்தது. ஆனால் தேவன் தந்த வாய்ப்பினை அவன் எடுத்துக்கொள்ளவில்லை. ஒருவேளை கர்த்தரை அறிந்துகொள்ள அவனுக்கு ஆயிரம் தருணங்கள் கிடைத்திருக்கக் கூடும். ஆனால் அவன் அவரை அறிந்துகொள்ள விரும்பவில்லை. அந்தக் காரணத்தினால்தான் அவன் அங்கே இருந்தான். பின்பு ஒரு பெரிய அக்கினிப் போர்வை அவனது சரீரத்தை மூடிற்று; அதற்குப் பின் அவனை நாங்கள் மீண்டும் ஒருபோதும் பார்க்கவில்லை.

நாங்கள் இயேசுவோடு தொடர்ந்து நடந்துகொண்டிருந்தோம். சற்று தொலைவில் பாளம் பாளமாக ஏதோ கீழே விழுவதை நாங்கள் கண்டோம். நாங்கள் கிட்டவந்து பார்த்தபோது, அந்த நேரத்தில் பாதாளத்தில் வந்து விழுந்த ஜனங்கள் தான் அது என்பதைக் கண்டுகொண்டோம். **இயேசு கிறிஸ்துவைத் தங்கள் இருதயத்தில் ஏற்றுக்கொள்ளாமல் பூமியில் மரித்தவர்கள் பாதாளத்தை வந்துசேர்ந்துகொண்டிருந்தார்கள்.**

ஒரு வாலிபனை நாங்கள் கண்டோம். அநேக பிசாசுகள் அவனை நோக்கி ஓடி, அவனுடைய சரீரத்தைத் தாக்க ஆரம்பித்தன. உடனடியாக அவனுடைய சரீரம் புழுக்களால் நிறைந்தது. அவன், 'வேண்டாம், இது என்ன? நிறுத்துங்கள்! இந்த இடத்திலிருக்க எனக்கு

பாதாளத்தில் வந்து விழும் ஆத்துமாக்கள்

விருப்பமில்லை! நிறுத்துங்கள்! இது ஒரு சொப்பனமாகத் தான் இருக்க வேண்டும்! என்னை இந்த இடத்திலிருந்து எடுத்துவிடுங்கள்!' என்று அலறினான். தான் மரித்துவிட்டதையும், தன் இருதயத்தில் இயேசு இல்லாமலே தான் மரித்திருப்பதையும்கூட அவன் அறியாதிருந்தான். பிசாசுகள் அவனைப் பரியாசம் பண்ணி, இடைவிடாது அவனது சரீரத்தை வாதித்துக் கொண்டிருந்தன. அப்போது 666 என்ற இலக்கம் அவனுடைய நெற்றியில் தோன்றிற்று; அவனுடைய மார்பில் ஒரு உலோகத்தகடு காணப்பட்டது. அவன் பாதாளத்திற்குச் சென்றதற்கான காரணத்தை எங்களால் காண முடியாவிட்டாலும், அவன் ஒருபோதும் அங்கிருந்து மீண்டு வருவதில்லை என்பதை நாங்கள் நிச்சயமாக அறிந்திருந்தோம்.

பாதாளத்திலுள்ள இந்த எல்லா ஆத்துமாக்களின் வேதனையும் நியாயத்தீர்ப்பின் நாளன்று இன்னும் அதிகரிக்கும் என கர்த்தர் எங்களிடம் கூறினார். இப்போதே அவர்கள் இவ்வளவு பயங்கரமான விதத்தில் வேதனைப்படுகிறார்களென்றால், நியாயத்தீர்ப்பின் நாளுக்குப் பின்பு அவர்கள் எப்படி வேதனைப்படுவார்கள் என்பதை என்னால் கற்பனை செய்து பார்க்கவே முடியவில்லை.

குழந்தைகளை நாங்கள் பாதாளத்தில் காணவில்லை. பல தேசங்களைச் சார்ந்த ஆயிரமாயிரமான வாலிபரையும், ஆண்களையும், பெண்களையும், வயோதிபரையும் நாங்கள் அங்கு கண்டோம். இருப்பினும் பாதாளத்தில் தேசப்பாகுபாடோ, சமூக ஏற்றத்தாழ்வுகளோ இல்லை. எல்லாரும் ஒன்றுபோல் தண்டிக்கப்படவும், வேதனைப்படவுமே அங்கு வருகிறார்கள். அங்கிருந்த எல்லாரும் வாஞ்சித்த ஒரு காரியம் இருந்தது – அது, அங்கிருந்து குறைந்தபட்சம் ஒரு வினாடியாகிலும் வெளியே போக ஒரு தருணம் வேண்டும் என்பதே. மேலும் வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள ஐசுவரியவானைப் போல (லூக்கா 16 : 19), தங்கள் நாவைக் குளிரப் பண்ண ஒரு சொட்டு தண்ணீராவது வேண்டுமென அவர்கள் விரும்பினர். ஆனால், இவை இனி ஒருபோதும் அவர்களுக்குச் சாத்தியமாகாது. ஏனெனில் **அவர்கள் தங்கள் நித்தியத்தை எங்கே செலவழிக்க விரும்புகிறார்கள் என்பதைத் தாங்களாகவே தெரிந்தெடுத்துக் கொண்டனர். தேவன் இல்லாமலேயே தங்கள் நித்தியத்தைச் செலவழிக்க அவர்கள் தீர்மானித்துவிட்டனர். தேவன் ஒருபோதும் ஒருவரையும் நரகத்திற்கு அனுப்புவதில்லை; அவரவர் தங்கள் சொந்தக் கிரியைகளுக்கேற்ப அவ்விடத்தைச் சென்றடைகின்றனர்.** "மோசம்போகாதிருங்கள், தேவன் தம்மைப் பரியாசம்பண்ண வொட்டார்; மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்" (கலா. 6 : 7).

இன்று நீ உன்னுடைய நித்திய இலக்கை மாற்றிக்கொள்ள உனக்குச் சிறந்ததொரு வாய்ப்பு இருக்கிறது. இயேசு இப்போது உனக்கு உதவிசெய்யக் கூடியவராயிருக்கிறார். நமக்கு ஜீவன்/சுவாசம் இருக்குமட்டும் நமக்கு நம்பிக்கையும் உண்டு (பிர. 9:4) என வேதாகமம் கூறுகிறது. இன்று உன்னில் ஜீவன் இருக்கிறது. எனவே இந்தத் தருணத்தை நீ தவற விட்டுவிடாதே. ஒருவேளை இதுவே உன் கடைசி தருணமாயிருக்கக் கூடும்!

பரலோகம் பற்றிய வெளிப்படுத்தல்கள்

சாட்சி – 1

"கிறிஸ்துவுக்குள்ளான ஒரு மனுஷனை அறிவேன்; அவன் பதினாலு வருஷத்திற்கு முன்னே மூன்றாம் வானம்வரைக்கும் எடுக்கப்பட்டான்; அவன் சரீரத்திலிருந்தானோ, சரீரத்திற்குப் புறம்பே யிருந்தானோ, அதை அறியேன்; தேவன் அறிவார்" (II கொரி. 12 : 2).

முதல் அனுபவத்தை அடைந்தபோது நாங்கள் எங்கள் அறையில் இருந்தோம். அந்த அறை கர்த்தருடைய சமுகத்திலிருந்து வந்த ஓர் ஒளியினால் மீண்டும் நிறைந்தது. அது அந்த அறை முழுவதையும் ஒளிமயமாக்கும் அளவிற்கு அவ்வளவு சக்திவாய்ந்த பேரொளியாய் இருந்தது. அறை கர்த்தருடைய மகிமையினால் நிறைந்திருந்தது. அவருக்கு முன்பாக இருப்பது எங்களுக்கு மிகவும் அருமையானதோர் அனுபவமாயிருந்தது.

இயேசு எங்களை நோக்கி, 'என் பிள்ளைகளே, நான் இப்போது உங்களுக்கு என்னுடைய ராஜ்யத்தைக் காண்பிக்கப்போகிறேன்; வாருங்கள்! நாம் என்னுடைய மகிமைக்குள் பிரவேசிப்போம்' என்றார். நாங்கள் ஏழு பேரும் ஒருவருடைய கரத்தை ஒருவர் பிடித்துக்கொண்டு உயர எடுக்கப்பட்டோம். நான் கீழ்நோக்கிப் பார்த்தபோது, நாங்கள் எங்கள் சொந்த சரீரத்திலிருந்து வெளியேறிச் சென்று கொண்டிருப்பதைக் கவனித்தேன். நாங்கள் எங்களுடைய சரீரங்களை விட்டு வெளியே வந்தபோது, நாங்கள் வெண் வஸ்திரங்களால் உடுத்துவிக்கப்பட்டு, மிக அதிக வேகத்தில் மேலே செல்ல ஆரம்பித்தோம்.

பரலோக ராஜ்யத்தின் நுழைவாயிலான ஓரிணை இரட்டைக் கதவுகள் முன்பாக நாங்கள் போய்ச் சேர்ந்தோம். எங்களுக்குச் சம்பவித்துக்கொண்டிருந்தவைகள் எங்களை வியப்பில் ஆழ்த்தின. கர்த்தருக்கு ஸ்தோத்திரம், தேவகுமாரனாகிய இயேசு அங்கே எங்களோடிருந்தார்; இரண்டு தேவதூதர்களும் அவரோடிருந்தனர். அவர்கள் நன்னான்கு செட்டைகள் உள்ளவர்களாய் இருந்தனர்.

தேவதூதர்கள் எங்களோடு பேச ஆரம்பித்தனர்; ஆனால் அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்று எங்களுக்கு விளங்கவில்லை. அவர்களுடைய மொழி எங்களுடைய மொழியினின்று மிகவும் வித்தியாசமானதாயிருந்தது. அது பூமிக்குரிய எந்த மொழியைப் போலவும்கூட இருக்கவில்லை. இத்தேவதூதர்கள் எங்களை வரவேற்றுக்கொண்டிருந்தனர்; அவர்கள் அந்த மிகப் பரந்த

கதவுகளைத் திறந்தனர். அதினுள் நாங்கள் பல்வேறு காரியங்களுள்ள ஒரு அற்புதமான இடத்தைக் கண்டோம். நாங்கள் அந்த இடத்திற்குள் பிரவேசித்தபோது எங்கள் இருதயங்களை ஒரு பூரண சமாதானம் நிறைத்தது. மனுஷனுடைய எல்லாப் புத்திக்கும் மேலான, புத்திக்கெட்டாத சமாதானத்தைத் தேவன் நமக்குத் தருவதாக வேதாகமம் கூறுகிறது (பிலி. 4 : 7).

அங்கு நான் பார்த்த முதல் காரியம் ஒரு மான் ஆகும். அப்போது நான் என்னோடு அங்கு வந்திருந்த என் சிநேகிதிகளுள் ஒருத்தியை நோக்கி, 'நான் பார்க்கிற அதே காரியத்தைத் தான் நீயும் பார்க்கிறாயா?' என்று கேட்டேன். எங்களுக்கு நரகம் காண்பிக்கப்பட்டபோது அவள் கதறிக்கொண்டும் சத்தமிட்டுக் கொண்டும் இருந்தது போல இப்போது அவள் செய்யவில்லை. அவள் புன்முறுவலுடன், 'ஆமாம், நானும் ஒரு மானைத் தான் பார்க்கிறேன்' என்றாள். அப்போது எல்லாம் உண்மையாகத் தான் சம்பவித்துக் கொண்டிருக்கிறது என்பதையும், நாங்கள் மெய்யாகவே பரலோக ராஜ்யத்தில் இருப்பதையும் நான் விளங்கிக்கொண்டேன். நாங்கள் நரகத்தில் கண்ட அனைத்து பயங்கரங்களும் எங்கள் நினைவிலிருந்து மாய்ந்துபோயின. இங்கே நாங்கள் தேவனுடைய மகிமையை இன்பமாக அனுபவித்துக்கொண்டிருந்தோம். அந்த மான் இருந்த இடத்திற்கு நாங்கள் சென்றோம். ["மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவதுபோல, தேவனே என் ஆத்துமா உம்மை வாஞ்சித்துக் கதறுகிறது. என் ஆத்துமா தேவன்மேல், ஜீவனுள்ள தேவன்மேலேயே தாகமாயிருக்கிறது; நான் எப்பொழுது தேவனுடைய சந்நிதியில் வந்து நிற்பேன்?" (சங். 42 : 1, 2) என சங்கீதக்காரன் கூறுகிறான். மான், தேவன் மேல் தாகமுள்ள ஆத்துமாவைக் குறிக்கிறது.]

அதற்குப் பின்னாக மிகமிகப் பெரியதொரு விருட்சம் இருந்தது. அது பரதீசின் மத்தியில் இருந்தது. "ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்; ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்குத் தேவனுடைய பரதீசின் மத்தியிலிருக்கிற ஜீவவிருட்சத்தின் கனியைப் புசிக்கக்கொடுப்பேன் என்றெழுது" (வெளி. 2 : 7) என வேதாகமம் கூறுகிறது.

இந்த மரம் இயேசுவுக்கு அடையாளமாயிருக்கிறது. ஏனெனில் கிறிஸ்து நித்திய ஜீவனாயிருக்கிறார். அந்த மரத்திற்குப் பின்னாக பளிங்குக்கொப்பான சுத்தமான தண்ணீருள்ள ஒரு நதி இருந்தது. இப்பூமியில் இதற்கு முன் நாங்கள் ஒருபோதும் கண்டிராத அளவுக்கு அது மிகவும் அழகாகவும் தெளிவானதாகவும் இருந்தது. நாங்கள் அந்த இடத்திலேயே தங்கிவிட வேண்டுமென்று விரும்பினோம். பல முறை நாங்கள் கர்த்தரை நோக்கி, 'கர்த்தாவே! தயவுசெய்து இந்த

இடத்திலிருந்து எங்களை வெளியே கொண்டுபோய்விடாதேயும்; நாங்கள் என்றென்றுமாக இங்கேயே இருக்க விரும்புகிறோம்! நாங்கள் பூமிக்குத் திரும்பிச் செல்லவே விரும்பவில்லை' என கேட்டுக்கொண்டோம். கர்த்தர் எங்களுக்கு மறுமொழியாக, **'என்னிடத்தில் அன்புகூருகிறவர்களுக்காக நான் ஆயத்தமாக்கியிருக்கிற எல்லாவற்றையும் பற்றி சாட்சி கொடுக்கும்படி நீங்கள் பூமிக்குத் திரும்பிச் செல்ல வேண்டியது அவசியமாயிருக்கிறது. ஏனெனில் நான் வெகு சீக்கிரமாய் வருகிறேன்; நான் அளிக்கும் பிரதிபலனும் என்னோடு வருகிறது'** என்றுரைத்தார்.

நாங்கள் அந்த நதியைக் கண்டபோது, துரிதமாக அதனிடத்திற்கு விரைந்து சென்று, அதற்குள் இறங்கினோம். "வேதவாக்கியம் சொல்லுகிறபடி என்னிடத்தில் விசுவாசமாய் இருக்கிறவன் எவனோ, அவன் உள்ளத்திலிருந்து ஜீவத் தண்ணீருள்ள நதிகள் ஓடும்" (யோவான் 7 : 38) என்ற வேதவாக்கியத்தை நாங்கள் நினைவுகூர்ந்தோம். இந்த நதியின் தண்ணீர் தன்னில் ஜீவனுள்ளதாயிருந்தது; ஆகவே அதற்குள் நாங்கள் மூழ்கினோம். நதிக்குள் மூழ்கியிருந்தபோதும் வெளியே வந்தபோதும் நாங்கள் ஒன்றுபோல் சாதாரணமாகவே சுவாசிக்க முடிந்தது. அந்த நதி மிகவும் ஆழமாயிருந்தது. அதில் பல நிறங்களுள்ள மீன்கள் நீந்திக்கொண்டிருந்தன. நதிக்கு உள்ளேயும், புறம்பேயும் வெளிச்சம் ஒன்றுபோல் இருந்தது. பரலோகத்திலுள்ள வெளிச்சத்திற்கு ஒரு குறிப்பிட்ட உற்பத்திஸ்தானம் இல்லை; அங்கு சகலமும் தன்னில்தானே மிகுந்த பிரகாசமுள்ளதாயிருந்தது. கர்த்தராகிய இயேசுவே அப்பட்டணத்தின் விளக்கு என்று நாம் வாசிக்கிறோம் (வெளி. 21 : 23). எங்கள் கைகளினால் நாங்கள் அம்மீன்களில் சிலவற்றை எடுத்தோம்; ஆயினும் அவை செத்துப்போகவில்லை. ஆகவே நாங்கள் ஆண்டவரிடம் ஓடிச்சென்று, அது எப்படி என்று கேட்டோம். கர்த்தர் புன்முறுவலுடன் எங்களை நோக்கி, 'பரலோகத்தில் ஒருபோதும் மரணமுமில்லை, அலறுதலுமில்லை, வேதனையும் இல்லை' என்றார் (வெளி. 21 : 4).

நாங்கள் அந்த நதியை விட்டு, நாங்கள் அங்கு கண்ட இடங்களுக்கெல்லாம் ஓடினோம். அங்கிருந்த சகலத்தையும் தொட்டு அனுபவிக்க வேண்டும் என நாங்கள் விரும்பினோம். நாங்கள் வீடு திரும்பும்போது அங்குள்ள எல்லாவற்றையும் எங்களோடு எடுத்துவர வேண்டுமென நாங்கள் விரும்பினோம். அந்த அளவுக்கு நாங்கள் பரலோகத்திலிருந்தவைகளால் பரவசமும், ஆச்சரியமும் அடைந்திருந்தோம். அவை வார்த்தைகளைக் கொண்டு விவரிக்கப்படவே இயலாது. அப்போஸ்தலனாகிய பவுல் பரதீசுக்குள்

எடுத்துக்கொள்ளப்பட்டபோது, அங்கு வார்த்தைகளால் விவரிக்கக் கூடாத பலவற்றைப் பார்த்தார். பரலோக ராஜ்யத்திலிருந்தவை அவ்வளவு மேன்மையானவையாய் இருந்தன (II கொரி 12 : 3). நாங்கள் அங்கு பார்த்த பலவற்றையும் விவரிக்க வழியே இல்லை என்று கூறலாம்.

பின்பு நாங்கள் மிகவும் பரந்து விரிந்திருந்த விசாலமான ஓர் இடத்திற்கு வந்தோம். அந்த இடம் மிகவும் அழகாகவும், ஆச்சரியமானதாகவும் இருந்தது. அது விலையுயர்ந்த பொன், மரகதம், முத்து, இரத்தினம் போன்ற கற்களால் நிறைந்திருந்தது. அந்தப் பரப்பளவு முழுவதும், தரையெல்லாம் பசும்பொன்னாயிருந்தது.

பின்பு நாங்கள் வேறொரு இடத்திற்குச் சென்றோம். அங்கே மூன்று மிகப்பெரிய புத்தகங்கள் இருந்தன. முதல் புத்தகம் பொன்னினால் செய்யப்பட்ட ஒரு வேதாகமம் ஆகும். "கர்த்தாவே, உமது வசனம் என்றென்றைக்கும் பரலோகத்தில் நிலைத்திருக்கிறது" (சங். 119 : 89 – Eng.) என சங்கீதத்தில் நாம் வாசிக்கிறோம். அந்தப் பெரிய பொன்னினாலான வேதாகமத்தை நாங்கள் பார்த்தபோது, அதின் பக்கங்களும், எழுத்துக்களும் அனைத்துமே சுத்தப் பொன்னினாலானவையாயிருந்தன.

நாங்கள் பார்த்த இரண்டாவது புத்தகம் வேதாகமத்தைப் பார்க்கிலும் பெரியதாயிருந்தது. அது திறந்திருந்தது. ஒரு தேவதூதன் உட்கார்ந்து அதில் எழுதிக்கொண்டிருந்தான். அத்தூதன் என்ன எழுதுகிறான் என்று பார்க்கும்படி கர்த்தராகிய இயேசுவோடு சேர்ந்து நாங்களும் அதனிடம் நெருங்கிச் சென்றோம். பூமியில் நடக்கின்ற சம்பவங்கள் அனைத்தையும் அவன் எழுதிக்கொண்டிருந்தான். ஒவ்வொரு சம்பவங்களும், தேதி, நேரம் போன்ற சகல விவரங்களுடனும் அதில் பதிவு செய்யப்படுகின்றன. "மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் தேவனுக்கு முன்பாக நிற்கக்கண்டேன்; அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன; ஜீவபுஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது; அப்பொழுது அந்தப் புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின்படியே மரித்தோர் தங்கள் தங்கள் கிரியைகளுக்குத்தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள்" (வெளி. 20 : 12) என எழுதப்பட்டுள்ள வேதவாக்கியம் நிறைவேறும்படியாகவே இப்படிச் செய்யப்படுகிறது. வேதாகமத்தில் எழுதப்பட்டுள்ளபடியே, பூமியில் ஜனங்கள் செய்யும் சகல காரியங்களையும் – நன்மையானாலும், தீமையானாலும் சகலத்தையும் – தேவதூதன் எழுதிக் கொண்டிருந்தான்.

மூன்றாவது புத்தகம் இருந்த இடத்திற்கு நாங்கள் கடந்து சென்றோம். அது முந்தின புத்தகத்தைப் பார்க்கிலும் பெரியதாயிருந்தது! அப்புத்தகம் மூடப்பட்டதாயிருந்தது. நாங்கள் அதை நெருங்கிச் சென்றோம். நாங்கள் ஏழு பேரும் சேர்ந்து அது வைக்கப்பட்டிருந்த உயரமான தளத்தினின்று அதை இறக்கி, கர்த்தருடைய கட்டளைப்படியே அதை ஒரு தூணின் மேல் வைத்தோம்.

பரலோகத்தில் தூண்களும் பத்திகளும் (Columns) மிக ஆச்சரியமானவை! அவை பூமியிலுள்ளவைகளைப் போல செய்யப்பட்டவை அல்ல. அவை பின்னல் வேலைப்பாடு போல இருந்தன. பல்வேறான விலையுயர்ந்த கற்களால் அவை செய்யப்பட்டிருந்தன. சில, இரத்தினக் கற்களாலும், வேறு சில, சுத்தமான மரகதத்தினாலும், மற்றும் சில, பசும்பொன்னினாலும். இன்னும் சில, பல்வேறு கற்களை ஒன்று சேர்த்தும் செய்யப்பட்டிருந்தன. அப்போது நான், " வெள்ளியும் என்னுடையது, பொன்னும் என்னுடையது என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்" (ஆகாய் 2 : 8) என எழுதப்பட்டுள்ளபடி, தேவனே எல்லாப் பொருட்களுக்கும் உடைமையாளர் என்பதை விளங்கிக்கொண்டேன். தேவன் மெய்யாகவே ஐசுவரிய சம்பன்னர் என்றும், உலகத்திலுள்ள ஐசுவரியங்கள் யாவும் அவருடையவை என்றும் நான் விளங்கிக்கொண்டேன். பூமியும் அதின் நிறைவும் கர்த்தருக்கே சொந்தம் என்றும், விசுவாசத்தோடு கேட்கிறவர்களுக்கு அவர் அவற்றைக் கொடுக்கிறார் என்றும் நான் விளங்கிக் கொண்டேன்.

"என்னைக் கேளும், அப்பொழுது ஜாதிகளை உமக்குச் சுதந்தரமாகவும், பூமியின் எல்லைகளை உமக்குச் சொந்தமாகவும் கொடுப்பேன்" (சங் 2 : 8) என்று கர்த்தர் கூறினார். நாங்கள் தூணின் மேல் வைத்த புத்தகம் எவ்வளவு பெரிதாயிருந்தது என்றால், நாங்கள் அதின் ஒரு பக்கத்தைத் திருப்ப வேண்டுமானால், நாங்கள் அந்தப் பக்கம் இருக்கிற நீளத்திற்கு புத்தகத்தின் மறுமுனை வரை நடக்க வேண்டும் - அந்த அளவுக்கு அது பெரிதாயிருந்தது. கர்த்தர் எங்களுக்குச் சொன்னபடியே நாங்கள் அதில் என்ன எழுதியிருக்கிறது என்று வாசிக்க முயற்சித்தோம். ஆரம்பத்தில் அதை வாசிப்பது கடினமாயிருந்தது. ஏனெனில் நாங்கள் விளங்கிக்கொள்ள முடியாத நூதனமான எழுத்துக்களில் அது எழுதப்பட்டிருந்தது. பூமியிலுள்ள எந்த மொழியினின்றும் அது வித்தியாசமானதாயிருந்தது. அது முற்றிலும் பரலோகத்திற்குரியதாயிருந்தது. ஆனால் பரிசுத்த ஆவியானவரின் உதவியினால் அதை விளங்கிக்கொள்ளும்படி எங்களுக்குக் கிருபை அளிக்கப்பட்டது. எங்கள் கண்களிலிருந்து ஒரு கட்டு அவிழ்க்கப்பட்டது போல இருந்தது. அப்போது அதை நாங்கள்

எங்கள் சொந்த பாஷையில் உள்ளதைப் போலவே விளங்கிக் கொள்ளக் கூடியதாயிருந்தது.

நாங்கள் எங்கள் ஏழு பேருடைய பெயர்களும் அப்புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கக் கண்டோம். அதுதான் ஜீவபுஸ்தகம் என்று கர்த்தர் எங்களிடம் கூறினார் (வெளி. 3 : 5). பூமியில் நாங்கள் எந்தெந்தப் பெயர்களால் அழைக்கப்பட்டோமோ, அந்தப் பெயர்கள் அப்புத்தகத்தில் இருக்கவில்லை என்பதை நாங்கள் கவனித்தோம். "ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்; ஜெயங்கொள்ளுகிறவனுக்கு நான் மறைவான மன்னாவைப் புசிக்கக் கொடுத்து, அவனுக்கு வெண்மையான குறிக்கல்லையும், அந்தக் கல்லின்மேல் எழுதப்பட்டதும், அதைப் பெறுகிறவனேயன்றி வேறொருவனும் அறியக்கூடாததுமாகிய புதிய நாமத்தையும் கொடுப்பேன் என்றெழுது" (வெளி. 2:17) என்று சொல்லப்பட்டிருக்கிற வேதவசனம் நிறைவேறத்தக்கதாக, இப்பெயர்கள் புதிய பெயர்களாய் இருந்தன.

பரலோகத்தில் எங்களால் எங்கள் புதிய பெயர்களை உச்சரிக்க முடிந்தது. ஆனால் கர்த்தர் எங்களை மீண்டும் பூமிக்குக் கொண்டுவந்த பின்னர், அப்பெயர்கள் எங்கள் ஞாபகத்திலிருந்தும் இருதயத்திலிருந்தும் எடுக்கப்பட்டுவிட்டன. தேவனுடைய வசனம் நித்தியமானது. அது நிறைவேறத்தான் வேண்டும். "இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக்கொள்ளாதபடிக்கு உனக்குள்ளதைப் பற்றிக்கொண்டிரு" (வெளி 3 : 11) என வேதாகமம் கூறுகிறது. உன் கிரீடத்தை வேறு யாரும் எடுத்துக்கொள்ள விட்டுவிடாதே. பிதாவானவர் உனக்கென்று ஆயத்தமாக்கி வைத்திருக்கும் இடத்தை வேறு யாரும் பறித்துக்கொள்ளவோ, உன்னை விட்டு நீக்கிப்போடவோ நீ இடங்கொடாதே. பரலோகத்தில் மிகவும் ஆச்சரியமான கோடிக்கணக்கான காரியங்கள் உள்ளன. அவற்றை எங்கள் வாயினால் சொல்லி விவரிக்க முடியாது. ஆனால் நான் உனக்கு ஒரு காரியம் சொல்ல விரும்புகிறேன் - 'தேவன் உனக்காகக் காத்துக்கொண்டிருக்கிறார்!'. ஆனாலும் முடிவு பரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான் (மாற்கு 13 : 13).

சாட்சி – 2

நாங்கள் பரலோக ராஜ்யத்துக்குப் போகும்படி மேல்நோக்கிச் சென்றபோது, விலையேறப்பெற்ற கதவுகள் உள்ள ஓர் அழகிய இடத்தை அடைந்தோம். அக்கதவுகளின் முன்பாக இரண்டு தேவதூதர்கள் இருந்தனர். அவர்கள் எங்களோடு பேச ஆரம்பித்தனர்; ஆனால் அவர்கள் பேசிய பாஷை தூதர்களின் பாஷையாயிருந்தபடியால் (I கொரி. 13 : 1), அவர்கள் சொன்னதை எங்களால் விளங்கிக் கொள்ளக்கூடாதிருந்தது. ஆனால் பரிசுத்த ஆவியானவர் அதை விளங்கிக்கொள்ள எங்களுக்குக் கிருபை செய்தார் - அவர்கள் எங்களை வரவேற்றுக் கொண்டிருந்தனர். கர்த்தராகிய இயேசு அக்கதவுகளின் மேல் தமது கரங்களை வைத்தார்; உடனே அவை திறவுண்டன. இயேசு எங்களோடு இல்லாதிருந்தால், நாங்கள் ஒருபோதும் பரலோகத்திற்குள் வந்திருக்கவே முடியாது.

பரலோகத்திலிருக்கும் எல்லாவற்றையுமே நாங்கள் மெச்சிக்கொள்ள ஆரம்பித்தோம். நாங்கள் ஒரு மாபெரும் விருட்சத்தைக் கண்டோம். வேதாகமம் அதனை 'ஜீவ விருட்சம்' என அழைக்கிறது (வெளி 2 : 7). நாங்கள் ஒரு நதிக்குச் சென்று, அங்கே ஏராளமான மீன்களைக் கண்டோம். அந்நதியிலிருந்த எல்லாமே ஆச்சரியமானவையாயிருந்ததால், நானும் என் சிநேகிதிகளும் அத்தண்ணீருக்குள் செல்லத் தீர்மானித்தோம். அத்தண்ணீரினுள் நாங்கள் நீச்சலடித்தோம். அந்நதியில் நீந்திக் கொண்டிருந்த மீன்கள் எங்களைக் கனிவுடன் முத்தமிட்டன. பூமியில் மீன்கள் நீச்சல் குளத்தில் நீந்தும் மனிதரை விட்டு விலகிச் சென்றுவிடுவதைப் போல இவை எங்களை விட்டு விலகிச் செல்லவில்லை. கர்த்தருடைய பிரசன்னம் அந்த மீன்களையும் சாந்தப்படுத்திற்று. நாங்கள் அவைகளுக்குத் தீங்கிழைக்கப் போவதில்லை என்பதை அந்த மீன்கள் அறிந்திருந்ததால், அவற்றால் எங்களை நம்ப முடிந்தது. நான் அம்மீன்களைப் பற்றி அதிகமாக வியப்பும் சந்தோஷமும் அடைந்ததால், அவற்றில் ஒன்றை என் கையில் எடுத்து தண்ணீருக்கு வெளியே கொண்டுவந்தேன். வியக்கத்தக்க விஷயம் என்னவென்றால், என் கைகளில் இருந்துகொண்டும் அந்த மீன் கர்த்தருடைய சமுகத்தை வெகு இன்பமாய் அனுபவித்துக்கொண்டு, மிகவும் அமைதியாய் இருந்தது. நான் மீண்டும் அதனைத் தண்ணீருக்குள் போட்டுவிட்டேன்.

"பின்பு, பரலோகம் திறந்திருக்கக் கண்டேன்; இதோ, ஒரு வெள்ளைக்குதிரை காணப்பட்டது, அதின்மேல் ஏறியிருந்தவர் உண்மையும் சத்தியமுமுள்ளவரென்னப்பட்டவர்; அவர் நீதியாய் நியாயந்தீர்த்து யுத்தம்பண்ணுகிறார்" (வெளி. 19 : 11) என்று தேவனுடைய வசனத்தில் எழுதப்பட்டுள்ளபடி, நான் பரலோகத்தில்

வெள்ளைக் குதிரைகள் இருப்பதைத் தூரத்தில் கண்டேன். நான் அவைகளின் அருகே நடந்து சென்று அவற்றைத் தட்டிக்கொடுத்தேன். கர்த்தர் என்னைப் பின்தொடர்ந்து வந்து, அவற்றில் ஒன்றின்மேல் சவாரிசெய்யவும் எனக்கு அனுமதியளித்தார். நான் அதின் மேல் ஏறி சவாரி செய்தபோது, அதற்கு முன் பூமியில் நான் உணர்ந்திராத ஒருவித புதிய உணர்வு எனக்கு உண்டாயிற்று. அந்த அழகிய இடத்தில் ஒரு நபரில் இருக்கக்கூடிய சமாதானம், சுயாதீனம், அன்பு, பரிசுத்தம் ஆகியவற்றை நான் அப்போது அனுபவித்தேன். என் கண்கள் கண்ட எல்லாவற்றிலும் நான் இன்பங்கண்டேன். நமக்காகக் கர்த்தர் ஆயத்தமாக்கியிருக்கிற பரலோகத்தில் உள்ள எல்லாவற்றையும் அனுபவித்துக்கொண்டே இருக்க வேண்டுமென நான் விரும்பினேன்.

கலியாண விருந்திற்கான மேசையையும் நான் அங்கே கண்டேன். சகலமும் முன்னேற்பாடாகப் பரிமாறப்பட்டு அதில் வைக்கப்பட்டிருந்தது. அந்த மேசைக்கு ஆரம்பமும் இல்லை, முடிவும் இல்லை. அவ்விருந்தின் மேசையில் எங்களுக்காக நாற்காலிகளும் ஆயத்தமாக வைக்கப்பட்டிருந்ததை நான் கண்டேன். நாங்கள் அணிந்துகொள்ளும்படி நித்திய ஜீவ கிரீடங்களும் ஆயத்தமாக வைக்கப்பட்டிருந்தன. ஆட்டுக்குட்டியானவரின் கலியாண விருந்திற்கு அழைக்கப்பட்டவர்களுக்கென அருஞ்சுவையுள்ள பதார்த்தங்கள் ஏற்கனவே ஆயத்தமாக வைக்கப்பட்டிருந்ததை நான் கண்டேன்.

கர்த்தர் நமக்காக ஆயத்தமாக்கிக்கொண்டிருக்கும் அங்கிகளுக்கான வெண்ணிறத் துணிகளுடன் தேவதூதர்கள் அங்கு நின்றுகொண்டிருந்தனர். இவை எல்லாவற்றையும் கண்டு நான் மிகவும் ஆச்சரியமடைந்தேன். நாம் சிறுபிள்ளைகளைப் போல இந்தத் தேவனுடைய ராஜ்யத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று தேவனுடைய வசனம் கூறுகிறது (மத். 18 : 3). நாங்கள் பரலோகத்தில் இருந்தபோது சிறுபிள்ளைகளைப் போலதான் இருந்தோம். அங்கிருந்த மலர்கள், தங்குமிடங்கள் போன்ற எல்லாவற்றையும் நாங்கள் இன்பமாக அனுபவித்தோம். பரிசுத்தவான்கள் தங்குமிடங்களுக்குள் சென்று பார்க்கவும் கர்த்தர் எங்களை அனுமதித்தார்.

பிற்பாடு கர்த்தர் எங்களை அநேகம் சிறுபிள்ளைகள் இருந்த ஓரிடத்திற்குக் கொண்டு சென்றார். கர்த்தர் அவர்கள் மத்தியில் இருந்து அவர்களோடு இன்பமாக நேரம் செலவழித்துக் கொண்டிருந்தார். அவர்களில் ஒவ்வொருவரோடும் போதிய நேரம் செலவழிக்க வேண்டுமென்ற உறுதியான தீர்மானத்துடன் அவர்களோடு அவர் சந்தோஷமாக அளவளாவிக்கொண்டிருந்தார். நாங்கள் கர்த்தரிடத்தில் நெருங்கிச் சென்று அவரிடம், 'கர்த்தாவே, இவர்கள் பூமியில் பிறக்கப்போகிற பிள்ளைகளா?' என்று கேட்டோம். அவர் மறுமொழியாக, 'இல்லை. இச்சிறுபிள்ளைகள் பூமியில் கருச்சிதைவுற்ற

சிசுக்கள்' என்றுரைத்தார். அவர்கள் கர்த்தரோடு சந்தோஷமாகப் பரலோகத்தில் இருப்பதைக் கண்டு நான் வியப்படைந்தேன். கர்த்தர் எங்களுக்குத் தந்த வெளிப்படுத்தல்கள் உங்களுக்கு ஆசீர்வாதமாயிருக்கும்படி அவற்றை உங்களுடன் பகிர்ந்துகொள்கிறேன். தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக.

சாட்சி – 3

"அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை; முந்தினவைகள் ஒழிந்துபோயின என்று விளம்பினது" (வெளி. 21 : 4).

நாங்கள் மோட்ச வாசலை அடைந்தபோது, அதன் பெரிய கதவுகள் எங்களுக்குத் திறக்கப்பட்டன. பூக்கள் நிறைந்த ஒரு பள்ளத்தாக்கை நான் அங்கு கண்டேன். அம்மலர்கள் மிகவும் அழகானவையாயும், அவற்றின் வாசனை மிகவும் நேர்த்தியாயும் இருந்தன. அங்கே நாங்கள் நடந்தபோது, பூமியில் நாங்கள் அனுபவித்திராத ஒரு சுயாதீன உணர்வு எங்களுக்கு உண்டாயிற்று. சமாதானம் எங்கள் உள்ளத்தை நிறைத்தது. அங்குள்ள மலர்கள் தனித்தன்மை வாய்ந்தவையாய் இருந்தன. ஒரு மலரின் ஒவ்வொரு இதழும் ஒன்றுக்கொன்று வித்தியாசமானதாயும், வெவ்வேறு நிறங்களை உடையதாயும், மெய்யானதாயும், தூய்மையானதாயும் இருந்தது.

'கர்த்தாவே, இம்மலர்களில் ஒன்று எனக்கு வேண்டும்' என என் உள்ளத்தில் நான் வாஞ்சித்தேன். கர்த்தரும் அதற்கு இசைந்தார். எனவே நான் ஒரு மலரின் அருகில் சென்று அதைப் பறிக்க முயற்சித்தேன். ஆனால் அது என் கையில் வரவில்லை. ஒரு மலரையோ, அதின் ஒரு இதழையோ, அல்லது அச்செடியின் ஒரு இலையையோகூட என்னால் பறிக்க முடியவில்லை. அப்போது கர்த்தர் அங்கு நிலவிய அமைதியின் மத்தியில் என்னை நோக்கி, **'இங்கு சகலமும் அன்பினால் செய்யப்பட வேண்டும்'** என்றார். அவர் அம்மலரைத் தொட்டார். உடன்தானே அது தன்னைக் கர்த்தரின் கரத்தில் அர்ப்பணித்துவிட்டது. அப்போது அவர் அம்மலரை என்னிடத்தில் கொடுத்தார். நாங்கள் தொடர்ந்து நடக்கலானோம். ஆயினும் அம்மலர்களின் வாசனை எங்களோடு கூடவே வந்து கொண்டிருந்தது.

மிக அழகிய இரட்டைக் கதவுகளுள்ள ஓரிடத்தை நாங்கள் அடைந்தோம். அக்கதவுகள் சாதாரணமானவை அல்ல, அவை சிறந்த வேலைப்பாடுகள் உள்ளவையாயும், விலையுயர்ந்த கற்கள் பதிக்கப்பட்டவையாயும் இருந்தன. கதவுகள் திறவுண்டன; அநேகர் இருந்த ஒரு அறைக்குள் நாங்கள் பிரவேசித்தோம். அங்கிருந்த யாவரும் ஏதோ ஆயத்தங்களைச் செய்துகொண்டு, தங்கள் வேலையில் மும்முரமாக இருந்தனர். சிலர் பிரகாசமுள்ள வெண்ணிறத் துணிகளைத் தங்கள் தோள்களின்மேல் சுமந்துகொண்டும், வேறுசிலர் பொற்சரிகையை நூற்கும் கதிர்களைச் சுமந்துகொண்டும், மற்றும் சிலர்

கேடகங்களைப் போன்ற வஸ்துக்களை உடைய தகடுகளை எடுத்துக்கொண்டும் - ஒவ்வொருவரும் விறுவிறுப்புடன் தங்கள் அலுவல்களில் அங்குமிங்கும் ஓடிப் பிரயாசப்பட்டுக்கொண்டிருந்தனர்.

இவ்வளவு பிரயாசங்களும் அவசரமான வேலைகளும் எதற்காக என நாங்கள் கர்த்தரிடத்தில் கேட்டோம். கர்த்தர் அவர்களில் ஒரு வாலிபனை அழைத்தார். தன் தோள்களில் ஒரு வெண்ணிறத் துணிக்கட்டுச் சுருளைச் சுமந்துகொண்டிருந்த அவன் கர்த்தரிடத்தில் வந்து, அவரைப் பக்திவிநயத்துடன் நோக்கிப் பார்த்தான். அவன் ஏன் அச்சுருளைச் சுமந்துகொண்டிருக்கிறான் என அவர் அவனைக் கேட்டார். அவன் கர்த்தரை நோக்கிப் பார்த்து, 'கர்த்தாவே, இந்தத் துணிக்கட்டுச்சுருள் எதற்காக என்பதைத் தேவரீர் அறிவீர்! மீட்கப்பட்டவர்களுக்கான வஸ்திரங்களைச் செய்யும்படியாக - மகா கனத்திற்குரிய மணவாட்டிக்கான வஸ்திரங்களை உண்டாக்கும்படியாக - இது உபயோகப்படுத்தப்படுகிறது' என்றான். இதைக் கேட்டபோது நாங்கள் மிகுந்த சந்தோஷமும் சமாதானமும் அடைந்தோம். "சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம் தரித்துக்கொள்ளும்படி அவளுக்கு அளிக்கப்பட்டது. அந்த மெல்லிய வஸ்திரம் பரிசுத்தவான்களுடைய நீதிகளே" (வெளி. 19 : 8) என்று திருவசனம் கூறுகிறது. கர்த்தர் தாமே நமக்காக ஏதோ அருமையான ஒன்றை ஆயத்தமாக்கிக்கொண்டிருக்கிறார் என்பதைக் கண்டபோது நாங்கள் அதிகமாகச் சந்தோஷமும், சமாதானமும் அடைந்தோம். **நீ அவருக்கு மூக்கியமான ஒரு நபராய் இருப்பதால் அவர் உனக்காக ஒரு இடத்தையும் அதை அனுபவிக்கும் காலத்தையும் ஆயத்தமாக வைத்திருக்கிறார்.** நாங்கள் அவ்விடத்தைவிட்டு வந்த பின்னரும், பரலோகத்தின் ஒவ்வொரு அம்சத்திலும் எங்கள் கண்கள் மூழ்கிப்போயிருந்தன. அங்கிருந்த ஒவ்வொரு பொருளிலும் ஜீவன் இருந்தது; ஒவ்வொன்றும் தேவனுக்கு மகிமை செலுத்திக் கொண்டிருந்தது.

பின்பு நாங்கள் வேறொரு இடத்திற்கு வந்தோம். அங்கு சில குன்றுகள் இருந்தன. கர்த்தர் நடனத்துடன் அங்கு வந்தார். அவருக்கு முன்பாக வெண்வஸ்திரம் தரித்த ஒரு கூட்டம் பேர் தங்கள் கைகளில் பசுமையான ஒலிவக் கிளைகளை உயர்த்திக்கொண்டு நின்றனர். அவர்கள் அவற்றை அசைத்தபோது அக்கிளைகள் ஒலிவ எண்ணெயைத் தந்தன. நண்பனே, தேவன் உனக்காக மேன்மையானவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார்! உன் இருதயத்தை அவர் முன்பாக நீ சமர்ப்பிக்க வேண்டிய வேளை இதுவே!

சாட்சி – 4

"தேவன் தம்மில் அன்புகூருகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளைக் கண் காணவுமில்லை, காது கேட்கவுமில்லை, அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை" (I கொரி. 2 : 9) என்று எழுதப்பட்டுள்ளபடி, பரலோக ராஜ்யத்தில் நாங்கள் ஆச்சரியமான காரியங்களைக் கண்டோம்.

நாங்கள் பரலோக ராஜ்யத்தை அடைந்தபோது அங்கிருந்த பல காட்சிகள் எங்களுக்கு மிகவும் ஆச்சரியமாகவும், கண்களைக் கவருபவையாகவும் இருந்தன. தேவனுடைய மகிமையை நாங்கள் உணரத்தக்கதாகப் பல மேன்மையானவைகளைக் கண்டோம். கோடிக்கணக்கான சிறுபிள்ளைகள் அங்கே இருந்தனர்.

கர்த்தராகிய இயேசுவின் தாயாராகிய மரியாளையும் நாங்கள் அங்கு கண்டோம். வெண்வஸ்திரம் தரித்திருந்த அவர்கள் அழகு வாய்ந்தவர்களாயிருந்தார்கள். அவர்களை நாங்கள் ஒரு சிங்காசனத்தில் வீற்றிருப்பவராகக் காணவில்லை; யாரும் அவர்களை நமஸ்கரிக்கவும் இல்லை. பரலோகத்திற்குச் சென்றிருக்கும் மற்ற பெண்களைப் போலவே, அவர்களில் ஒருவராகவே அவர்கள் அங்கிருக்கிறார்கள். பூமியிலுள்ள மற்ற ஜனங்களைப் போலவே அவர்களும் தன் ஜீவிய காலத்தில் தன் இரட்சிப்பை அடைந்துகொள்ள வேண்டியதாயிருந்தது. பூமியில் பலரும், மரியாள் இயேசுவின் தாயாராயிருப்பதால் மரியாளை வணங்குகின்றனர். ஆனால், "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்" (யோவான் 14 : 6) என்று கர்த்தராகிய இயேசு கூறியிருக்கிறார்.

மேலும் மோட்சத்தில் சூரியனோ, சந்திரனோ இல்லை என்பதை நாங்கள் கவனித்தோம். "அங்கே இராக்காலமிராது; விளக்கும் சூரியனுடைய வெளிச்சமும் அவர்களுக்கு வேண்டுவதில்லை; தேவனாகிய கர்த்தரே அவர்கள்மேல் பிரகாசிப்பார். அவர்கள் சதாகாலங்களிலும் அரசாளுவார்கள்" (வெளி. 22 : 5) என நாம் வாசிக்கிறோம்.

நாங்கள் தேவனுடைய மகிமையைக் கண்டோம். நரகத்தின் பயங்கரத்தை விவரிப்பது எங்களுக்குக் கடினமானதாயிருந்தது. ஆனால் பரலோகத்தின் மாட்சிமையையும் நம் சிருஷ்டிகரின் பூரணமான கிரியையையும் விவரிப்பது எங்களுக்கு அதைப் பார்க்கிலும் மிகவும் கடினமாயிருக்கிறது. நாங்கள் அங்கிருந்தபோது அங்குள்ள எல்லாவற்றையும் ஓடி ஓடிப் பார்க்க விரும்பினோம்.

நடுவானில் பசும்பொன்னாலான ஒரு பெரிய சிலுவையை நாங்கள் கண்டோம். நாம் அதை வழிபடுவதற்காக அல்ல. இயேசுவின் சிலுவை மரணத்தின் மூலமாக மட்டுமே நாம் பரலோக ராஜ்யத்திற்குள் பிரவேசிக்க முடியும் என்பதை வெளிப்படுத்துவ தற்காகவே அது எங்களுக்குக் காண்பிக்கப்பட்டது.

பரலோகத்தில் நாங்கள் நடந்து சென்றுகொண்டே இருந்தோம். இயேசுவோடு நடப்பது என்பது உள்ளத்தைக் கவர்ந்து கொள்ளும் ஒரு அனுபவமாயிருந்தது. நாம் சேவிக்கிற நம் தேவன் - நசரேயனாகிய இயேசு - எப்படிப்பட்டவர் என்பதை அங்கே தான் நாங்கள் நிச்சயமாக அறிந்துகொண்டோம். தேவன், மேலே இருந்துகொண்டு, 'இவன் ஒரு பாவம் செய்யட்டும், உடனே இவனைத் தண்டித்து நரகத்திற்கு அனுப்பிவிடலாம்' என்று காத்துக்கொண்டிருப்பதாகவே பூமியிலுள்ள நம்மில் பலரும் எண்ணுகிறோம். ஆனால் அது உண்மையல்ல. இயேசு உற்ற நண்பராக, நாம் அழும்போது நம்மோடு சேர்ந்து அழுபவராக, அன்பும் மனதுருக்கமும் இரக்கமும் உள்ள தேவனாக, இரட்சிப்பின் பாதையில் தொடர்ந்து செல்ல நமக்கு உதவி செய்யும்படி நம்மைத் தம் கரத்தில் ஏந்தியிருப்பவராக இருக்கிறார்.

வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள தாவீது ராஜாவையும் நாங்கள் அங்கே கண்டோம். அவர் சௌந்தரியமுள்ளவராகவும், உயரமானவராகவும் இருந்தார். தேவனுடைய மகிமை அவருடைய முகத்தில் பிரதிபலித்தது. நாங்கள் பரலோகத்தில் இருந்த முழுநேரமும் தாவீது ராஜா செய்து கொண்டிருந்த ஒரே காரியம், நடனம், நடனம். நடனம் பண்ணிக்கொண்டேயிருந்து, சகல மகிமையையும் கனத்தையும் தேவனுக்குச் செலுத்திக் கொண்டேயிருந்ததுதான்!

இந்தச் சாட்சியை வாசிப்பவர்களே, "தீட்டுள்ளதும், அருவருப்பையும் பொய்யையும் நடப்பிக்கிறதுமாகிய ஒன்றும் அதில் பிரவேசிப்பதில்லை; ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டவர்கள் மாத்திரம் அதில் பிரவேசிப்பார்கள்" (வெளி. 21 : 27). மேலும், கோழைகள் அல்ல, தைரியமாய்ப் போராடுகிறவர்களே பரலோக ராஜ்யத்தைச் சுதந்தரித்துக் கொள்வார்கள்.

சாட்சி — 5

"ஏனென்றால், சரீரத்தில் அவனவன் செய்த நன்மைக்காவது தீமைக்காவது தக்க பலனை அடையும்படிக்கு, நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்படவேண்டும்" (II கொரி. 5 : 10).

"என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு; அப்படியில்லாதிருந்தால் நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்; ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம்பண்ணப்போகிறேன்" (யோவான் 14 : 2) என்று வேதாகமத்தில் கூறப்பட்டுள்ள **புதிய எருசலேமை** நாங்கள் பரலோகத்தில் கண்டோம். அந்நகரத்திற்குள் நாங்கள் பிரவேசித்தோம்; அது மெய்யாகவே அற்புதமான ஒரு நகரம்! இயேசு அந்த வாசஸ்தலத்தை நமக்காக ஆயத்தம்பண்ணும்படியாகவே சென்றிருக்கிறார். **அந்நகரத்தினுள் நாங்கள் கண்டவை நாங்கள் பூமிக்கு வந்த பின் எங்கள் ஞாபகத்திலிருந்து எடுக்கப்பட்டுவிட்டது.** அந்நகரம் முழுவதும் விலையுயர்ந்த கற்களாலும் பசும்பொன்னாலும் செய்யப்பட்டது என்பதும், அது ஆயத்தமாயிருக்கிறது என்பதும், இன்னும் அதில் ஒருவரும் குடியேற்றப்படவில்லை என்பதும் மட்டுமே எங்கள் நினைவில் இருக்கிறது.

இப்பட்டணத்தின் பொன், வேதாகமத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது போலவே, ஒளி ஊடுருவிப் பாயக்கூடியதாக, துலாம்பரமானதாக, மிகவும் பிரகாசமானதாக இருந்தது. பரலோகத்திலுள்ள பொன்னின் அழகோடும் மகிமையோடும் பூமியிலுள்ள பொன்னைச் சற்றும் ஒப்பிடவே முடியாது.

இதற்குப் பின்பு நாங்கள் ஓரிடத்திற்குக் கொண்டு செல்லப்பட்டோம். அங்கு ஏராளமான புட்டிகள் வைக்கப்பட்டிருந்தன. அப்புட்டிகளுக்குள் கண்ணீர்த் துளிகள் உறைந்து, பளிங்கு போல படிகங்களாக வைக்கப்பட்டிருந்தன. அக்கண்ணீர்த் துளிகள் தேவபுத்திரரால் பூமியில் சிந்தப்பட்டவையாகும். அவை முறையிடுதலின் கண்ணீர் அல்ல; மாறாக, அவை அவர்கள் தேவசமுகத்தில் வார்த்த **மனந்திரும்புதலின் கண்ணீர், நன்றி உணர்வின் கண்ணீர்.** "என் அலைச்சல்களைத் தேவரீர் எண்ணியிருக்கிறீர்; என் கண்ணீரை உம்முடைய துருத்தியில் வையும்; அவைகள் உம்முடைய கணக்கில் அல்லவோ இருக்கிறது?" (சங். 56 : 8) என்று கூறப்பட்டிருப்பதைப் போல, தேவன் இக்கண்ணீரை விலையேறப்பெற்ற பொக்கிஷமாகப் பரலோகத்தில் வைத்திருக்கிறார்.

மேலும் நாங்கள் ஏராளமான தேவதூதர்கள் இருந்த ஓரிடத்திற்கு வந்தோம். பரலோகத்தில் பலதரப்பட்ட தேவதூதர்கள் இருப்பினும், இந்த இடத்தில் ஒரு குறிப்பிட்ட விசேஷித்த விதமான தூதர்கள் மட்டும் இருந்தனர். ஒவ்வொரு தனிமனிதனுக்கென்றும் கர்த்தர் ஒரு பிரத்தியேகமான தூதனை நியமித்திருப்பதை நாங்கள் கண்டோம். நம் ஜீவிய காலம் முழுவதும் இந்தத் தூதன் நமக்கு அருகிலேயே இருப்பான் என்பதையும் அவர் எங்களுக்குக் காண்பித்தார். எங்களுக்கென்று நியமிக்கப்பட்டிருந்த தூதர்களை அவர் எங்களுக்கு அறிமுகப்படுத்தினார். அவர்களுடைய குணாதிசயங்கள் எங்களுக்குக் காண்பிக்கப்பட்டது; ஆனால் அதை நாங்கள் மற்றவர்களுக்கு வெளிப்படுத்த எங்களுக்கு அனுமதி இல்லை என தேவன் எங்களிடம் கூறினார். "உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி, உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார்" (சங். 91 : 11).

அநேக பாதுகாப்புப் பெட்டகங்கள் இருந்த ஒரு இடத்திற்கு நாங்கள் வந்தோம். அப்பெட்டகங்களுக்குள் பல்வேறு வகையான மலர்கள் இருந்தன. சில மலர்கள் விரிந்திருந்தன. அவை அழகானவையும் பிரகாசமானவையுமாய் இருந்தன. வேறு சில மலர்கள் கீழ்நோக்கிச் சாய்ந்திருந்தன. மற்றும் சில மலர்கள் வாடிவதங்கிப்போன நிலையில் இருந்தன. இம்மலர்களின் அர்த்தம் என்ன என்று நாங்கள் இயேசுவிடம் கேட்டோம். அவர், **'உங்கள் ஒவ்வொருவரின் வாழ்க்கையும் இம்மலர்களில் ஏதேனும் ஒன்றைப் போல இருக்கிறது'** என்றார். பிரகாசமான மலர் ஒன்றை அவர் எடுத்து, 'இம்மலர் என்னோடு உங்களுக்கு உள்ள ஐக்கியத்தின் நிலையைக் குறிக்கிறது' என்றார். அவர் அம்மலரை வைத்துவிட்டு, கீழ்நோக்கிச் சாய்ந்திருந்த ஒரு மலரைத் தம் கரத்தில் எடுத்து, 'பாருங்கள், இந்நபர் ஒரு சோதனை அல்லது கஷ்டம் தனக்கு உண்டானதினிமித்தம் கீழ்நோக்கிச் சாய்ந்துபோய் இருக்கிறான்; அவனுக்கும் எனக்குமிடையே உள்ள ஐக்கியத்தில் அவனது வாழ்க்கையில் ஏதோ ஒன்று குறுக்கிடுகிறது; ஆவிக்குரிய பிரகாரமாகத் தாழ்ந்துபோன நிலையிலிருக்கும் இப்படிப்பட்ட மலர்களை (நபர்களை) மீண்டும் தழைத்தோங்கச் செய்து, பிரகாசிக்கச் செய்யுமபடி அவற்றுக்கு நான் என்ன செய்கிறேன் தெரியுமா? என் கண்ணீரை அவற்றின் மேல் தெளித்து, அவற்றை மீண்டும் எழுப்புகிறேன்' என்றார். அவர் அம்மலருக்கு அப்படிச் செய்தபோது, அது எவ்வளவு வல்லமையுடன் உயிரடைந்து, எழுந்து நின்றது என்பதையும், அதில் அதன் நிறங்கள் மீண்டும் எப்படி தோன்றின என்பதையும் நாங்கள் கண்டோம்.

பின்பு வாடி வதங்கிப்போன நிலையிலிருந்த மலர்களுள் ஒன்றை அவர் எடுத்து, அதை அக்கினிக்குள் வீசியெறிந்து விட்டு, 'பாருங்கள், இந்த நபர் எவ்வளவு அறிந்திருந்தும் எவ்வளவு விட்டு

அகன்றுபோய்விட்டான்; இப்போது நான் இல்லாமல் அவன் மரணமடைகிறான்; ஆகவே அவன் அக்கினியில் எறியப்படுகிறான்' (யோவான் 15 : 5, 6) என்றார்.

நாங்கள் அந்த இடத்தை விட்டுப் புறப்பட்டபோது வெகு தூரத்தில் ஓர் அழகிய மாளிகையைக் கண்டோம். **அந்த மாளிகையை நெருங்கிச் செல்ல எங்களில் யாருக்கும் துணிவு வரவில்லை.** "பின்பு, பளிங்கைப்போல் தெளிவான ஜீவத்தண்ணீருள்ள சுத்தமான நதி தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனத்திலிருந்து புறப்பட்டுவருகிறதை எனக்குக் காண்பித்தான்" (வெளி. 22 : 1) என குறிப்பிடப்பட்டுள்ளவாறு, அந்த மாளிகை தேவனுடைய சமுகத்திற்கும், அவருடைய சிங்காசனத்திற்கும் மிகவும் அருகாமையில் இருந்திருக்க வேண்டும் என நான் நம்புகிறேன்.

பரலோக ராஜ்யத்தின் முடிவில்லா இன்பங்களை அனுபவித்துக் கொண்டிருந்தபோது, எல்லாப் புத்திக்கும் மேலான சமாதானமும் மகிழ்ச்சியும் எங்கள் உள்ளத்தில் நிறைந்திருந்தது (பிலி. 4 : 7); "இயேசுகிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே, அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்தரத்திற்கேதுவாக, ஜீவனுள்ள நம்பிக்கை உண்டாகும்படி, தமது மிகுந்த இரக்கத்தின்படியே நம்மை மறுபடியும் ஜெநிப்பித்தார்" (I பேதுரு 1 : 4) என எழுதப்பட்டிருப்பதை நாங்கள் கண்டு விளங்கிக் கொண்டோம்.

சாட்சி – 6

"நீங்கள் என் ராஜ்யத்திலே என் பந்தியில் போஜனபானம்பண்ணி, இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களையும் நியாயந்தீர்க்கிறவர்களாய்ச் சிங்காசனங்களின் மேல் உட்காருவீர்கள்" (லூக்கா 22 : 30).

அந்த ஆச்சரியமான இடத்தில் – அகிலாண்டத்திலும் வேறெங்கும் பார்க்க முடியாத அளவுக்கு அவ்வளவு மிகவும் அழகானதொரு வரவேற்பறையை நாங்கள் காணும்படி தேவன் அனுமதித்தார். மாபெரும் பிரமாண்டமான சிங்காசனம் ஒன்றை நாங்கள் அங்கு கண்டோம். அது இவ்வுலகில் எங்கும் இல்லாத விலையேறப்பெற்ற கற்களினாலும் பசும்பொன்னினாலும் செய்யப்பட்டிருந்தது. அந்தச் சிங்காசனத்திற்கு முன்பாக, முடிவைக் காண முடியாத அளவுக்குப் பெரியதொரு மேசை வைக்கப்பட்டிருந்தது. அதன் மேல் வெண் நிறமான ஒரு விரிப்பு விரிக்கப்பட்டிருந்தது. அந்த மேசை விரிப்பு பூமியில் உள்ள யாதொன்றோடும் ஒப்பிடக்கூடாத அளவுக்குத் தூய வெண்மை நிறமாயிருந்தது.

பல விதமான ருசிகரமான தூய ஆகார வகைகள் அந்த மேசையில் வைக்கப்பட்டிருந்தன. அதில் வைக்கப்பட்டிருந்த திராட்சப்பழங்கள், அளவில் ஆரஞ்சு போல இருந்தன. அவற்றுள் சிலவற்றைச் சுவைக்க கர்த்தர் எங்களுக்கு அனுமதியளித்தார். அதன் சுவை இப்போதும் எங்கள் நினைவில் இருக்கிறது – அது அவ்வளவு அற்புதமான ருசியுள்ளதாயிருந்தது! நண்பனே, தேவன் உனக்காகத் தமது ராஜ்யத்தில் ஏற்கனவே ஆயத்தமாக்கி வைத்திருக்கும் சகலவற்றையும் உன்னால் கற்பனை செய்து பார்க்கவே முடியாது (I கொரி. 2 : 9). மேசையின் மேல் அப்பமாகிய 'மன்னா' வைக்கப் பட்டிருந்தது. வேதவாக்கியம் சொல்லுகிற தேவனுடைய அப்பம் இதுவே. அந்த அப்பத்தையும், இப்பூமியில் இல்லாத வேறு பலவற்றையும் ருசிபார்க்கவும் அனுபவிக்கவும் தேவன் எங்களுக்கு அனுமதி அளித்தார்.

இவை யாவும் நம்முடைய அழியாத சுதந்தரமாகப் பரலோக ராஜ்யத்தில் நமக்காகக் காத்துக்கொண்டிருக்கின்றன. நாம் பரலோக ராஜ்யத்தைச் சுதந்தரித்துக்கொள்ளும்போது, மிக நேர்த்தியான அருஞ்சுவையுள்ள பரலோக ஆகாரத்தை அனுபவிப்போம். மேசையின் இருபுறமும் ஆசனங்கள் போடப்பட்டு, அவை ஒவ்வொன்றின்மேலும், அவற்றில் அமர வேண்டிய நபர்களின் பெயர்களும் எழுதப்பட்டிருந்தன. எங்கள் பெயர்களும் அவற்றின் மேல் எழுதப்பட்டிருந்ததை நாங்கள் தெளிவாகக் கண்டோம். ஆனால் அவை

பூமியில் எங்களுக்கு வழங்கப்படுகிற பெயர்கள் அல்ல; மாறாக, அவை வேறொருவரும் அறியக்கூடாததும், அவரவர் மட்டுமே அறியக்கூடியதுமான புதிய பெயர்கள் ஆகும் (வெளி. 2 : 17).

"ஆவிகள் உங்களுக்குக் கீழ்ப்படிகிறதற்காக நீங்கள் சந்தோஷப்படாமல், உங்கள் நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருக்கிறதற்காகச் சந்தோஷப்படுங்கள்" (லூக்கா 10 : 20) என வேதவசனத்தில் எழுதப்பட்டிருப்பது எங்களை ஆச்சரியத்திற்குள்ளாக்கிற்று. ஏராளமான ஆசனங்கள் அங்கிருந்தன! பரலோக ராஜ்யத்திற்கு வர விரும்புகிற அனைவருக்கும் அந்த தாராளம் இடமுண்டு. அந்த மேசையினின்று அகற்றப்பட்ட சில ஆசனங்களும் இருந்தன – கர்த்தரைச் சேவிப்பதில் களைத்துப்போன சில ஆண்களும் பெண்களும் இருக்கின்றனர்; அவர்களுடைய பெயர்கள் ஜீவபுஸ்தகத்திலிருந்து கிறுக்கிப்போடப்பட்டுவிட்டன; ஆட்டுக்குட்டி யானவரின் கலியாண விருந்தில் அவர்களுக்குப் பங்கில்லை என்பதையே இது குறிக்கிறது.

வேதாகமத்தில் நாம் வாசித்தறிந்திருக்கிற அருமையான சில பரிசுத்தவான்களையும் அங்கு நாங்கள் காணும்படி தேவன் அனுமதித்தார். அங்கு ஆபிரகாமைக் கண்டு நாங்கள் பரவசமடைந்தோம். ஆபிரகாம் முதிர்ந்தவராயிருந்தார். ஆனால் தன் சரீரத்திலோ, தோற்றத்திலோ அல்ல, அவருக்கிருந்த ஞானத்தினால் அவர் முதிர்ந்தவராய்க் காணப்பட்டார். அவருடைய தலைமயிர் முழுவதும் வெண்மையாயிருந்தது. ஆனால் ஒவ்வொரு முடியும் கண்ணாடி இழை அல்லது வைர இழை போல இருந்தது. எங்களை மிகவும் அதிகமாய் வியப்பில் ஆழ்த்திய ஒரு விஷயம் என்னவென்றால், அவர் எங்களை விட இளைஞனாய் இருந்தார். பரலோகத்தில் நாம் யாவரும் மீண்டும் இளமைக்குத் திரும்பி, என்றென்றும் வாலிபராகவே இருப்போம். மேலும் அவருடைய வார்த்தைகளினாலும் நாங்கள் மிகவும் பரவசமடைந்தோம். நாங்கள் ஒருபோதும் மறக்க முடியாத ஒன்றை அவர் எங்களிடம் சொன்னார். அவர் எங்களைப் பரலோக ராஜ்யத்திற்கு வரவேற்று, **'வெகுவிரைவில் நீங்கள் இந்த இடத்தில் இருப்பீர்கள்; ஏனெனில் கர்த்தராகிய இயேசுவின் வருகை மிகவும் நெருங்கியிருக்கிறது'** என்றுரைத்தார்.

**இந்த ஏழு பேரும் கண்ட தரிசனங்களிலிருந்து பரலோகத்தைப் பற்றி நமக்கு 'ஒரு துளியளவு' தகவல்கள் மட்டுமே கிடைத்துள்ளன. சேபாவின் ராஜஸ்திரீ சாலொமோனின் ஞானத்தையும் அவனுடைய ராஜ்யத்தின் மேன்மையையும் குறித்துக் கேள்விப்பட்டு, தென்தேசத்திலிருந்து புறப்பட்டு வந்தாள். அவள் இஸ்ரவேல் தேசத்துக்கு வந்து அவனுடைய பொன்மைகளையெல்லாம்

நேராகக் கண்டபோது, ஆச்சரியத்தால் பிரமைகொண்டு, "ராஜாவை நோக்கி: உம்முடைய வர்த்தமானங்களையும் உம்முடைய ஞானத்தையும் குறித்து நான் என் தேசத்தில் கேட்ட செய்தி மெய்யாயிற்று. நான் வந்து அதை என் கண்களால் காணுமட்டும் அந்த வார்த்தைகளை நான் நம்பவில்லை; இவைகளில் பாதியாகிலும் எனக்கு அறிவிக்கப்படவில்லை என்று காண்கிறேன்; நான் கேள்விப்பட்ட பிரஸ்தாபத்தைப்பார்க்கிலும், உம்முடைய ஞானமும் செல்வமும் அதிகமாயிருக்கிறது. உம்முடைய ஜனங்கள் பாக்கியவான்கள்; எப்போதும் உமக்கு முன்பாக நின்று, உம்முடைய ஞானத்தைக் கேட்கிற உம்முடைய ஊழியக்காரரும் பாக்கியவான்கள்" (1 இராஜா. 10 : 6 - 8) என்றாள். அவ்வாறே நாம் இப்பூலோக வாழ்க்கையை முடித்துப் பரலோகத்திற்குச் செல்லும் நன்னாளில், 'இவைகளில் சிறிதளவாகிலும் எனக்கு அறிவிக்கப்பட வில்லை; உம்முடைய ஞானமும் உம்முடைய ராஜ்யத்தின் மகத்துவமும் எவ்வளவு பெரிதாயிருக்கிறது!' என்று வியந்து கூறுவோம்.

- Taken from www.spiritlessons.com

மன்னிக்கத் தாமதியாதே!

நைஜீரியாவில் சுவிசேஷகராக ஊழியம் செய்துவந்த பாஸ்டர் டேனியல் எக்கிச்சுக்கு (Pas. Daniel Ekechukwu) என்பவர், 2001, நவம்பர் 30-ஆம் தேதி வெள்ளிக்கிழமை மாலை ஒரு விபத்திற்குள்ளாகி மரணமடைந்தார். குறைந்தபட்சம் 42 மணிநேரம் உயிரற்றவராயிருந்த அவர் அந்நேரத்தில் பரலோகத்தையும், நரகத்தையும் விஜயம் செய்து, 2001, டிசம்பர் 2-ஆம் தேதி ஞாயிறு மாலை 3. 50 மணிக்கும் 5. 15 மணிக்குமிடையே உயிர்ப்பிக்கப்பட்டார். இது நைஜீரியாவிலுள்ள ஒனிட்ஷா (Onitsha) என்னுமிடத்தைச் சேர்ந்த Grace of God Mission என்றழைக்கப்படும் சபையின் ஆராதனைக்கூடத்தின் அடித்தளத்தில் நடைபெற்ற ஒரு சம்பவமாகும்.

பாஸ்டர் டேனியல் அவர்களும், அவரது மரணத்தை உறுதிப்படுத்திய மருத்துவரும், டேனியலின் மனைவியும், தகப்பனாரும், அவரது சடலத்தைக் கெடாதவாறு பேணிப் பாதுகாக்கும்படி அதில் மருந்தேற்றிய (embalm) பிணப் பொறுப்பாளரும், அவர் உயிரடைந்த அந்நேரத்தில் அங்கிருந்த ஏராளமான பாஸ்டர்மாரும் கூறிய சாட்சிகள் அடங்கிய வீடியோக்கள் (Christ for all nations என்ற நிறுவனத்தாரால் வெளியிடப்பட்டவை) உட்பட வேறு பல ஏதுக்களினின்று கிடைக்கப் பெற்ற விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

2001, நவம்பர் 29-ஆம் தேதி வியாழக்கிழமையன்று, பாஸ்டர் டேனியல் அவர்களுக்கும் அவரது மனைவி நெக்கா (Nneka) என்பவருக்குமிடையே ஒரு கருத்து வேறுபாடு உண்டாகி, அது ஒரு தர்க்கமாக மாறி, முடிவில் அவள் அவரைக் கன்னத்தில் அறைந்து விட்டாள். மறுநாள் காலையில் அவள் அவருடன் ஒப்புரவாக விரும்பி, அவரை வாழ்த்தியபோது, அவர் அதை ஏற்றுக்கொள்ளாமற்போகு மளவிற்கு இச்சம்பவத்தினால் அவர் மிகவும் அதிகமாக மனதில் புண்படுத்தப்பட்டிருந்தார். நவம்பர் 30-ஆம் தேதியாகிய அன்று முழுவதும், தான் வீடு திரும்பும்போது தன் மனைவியை அவள் இருக்க வேண்டிய இடத்தில் வைப்பது எப்படி என்பது பற்றியே அவர் கோபத்துடன் சிந்தனை பண்ணிக் கொண்டிருந்தாராம்.

அன்று மாலை அவர் தன் வாகனத்தை ஓட்டிக்கொண்டு வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது, ஒரு செங்குத்தான குன்றிலிருந்து இறங்குகையில், அவருடைய 20 வருடப் பழக்கமுள்ள Mercedes 230 E வாகனத்தின் நிறுத்தற்பணியைச் செய்யும் பாகம் (brake) செயலற்றுப் போகவே, அங்கிருந்த ஒரு செங்குத்தான மண்மேட்டின் மேல் வாகனங்கள் ஏறிவிடாதவாறு பாதுகாக்கும்படி அங்கு கட்டப்பட்டிருந்த ஒரு தூணின் மீது அவரது வாகனம் மோதிற்று. அவருடைய மார்பில்

வண்டியை இயக்கும் சக்கரம் (Steering Wheel) பலமாக மோதவே, அவரது உள்ளான அவயவங்கள் பாதிக்கப்பட்டு, அவர் இரத்த வாந்திபண்ணி, சுவாசிக்க முடியாத நிலையிலானார். உடனடியாக அவர் நகரின் எல்லைக்குச் சமீபமாக உள்ள St. Charles Borromeo மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

அவர்கள் மருத்துவமனையை அடைந்த சில நிமிடங்களுக்குள் ஒரு மருத்துவர் அவருக்கு அவசர சிகிச்சை அளித்தார். ஆயினும், தன் சரீரம் அவற்றுள் எதனையும் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை டேனியல் உணர்ந்தார். தான் மரிக்கப்போவதை அறிந்திருக்கும் ஒரு நபர் என்ன ஜெபம் செய்வானோ, அந்த ஜெபத்தை டேனியல் செய்ய ஆரம்பித்தார். தான் கர்த்தருக்கு முன்பாக நிற்கப் பாத்திரனாயிருக்கத் தக்கதாக, தன் பாவங்கள் அனைத்தையும் மன்னித்தருளும்படி அவர் தேவனிடம் மன்றாடி ஜெபித்தார். மேலும் முந்தின நாள் தான் பேச மறுத்துவிட்ட தன் மனைவியை அவர் அழைத்தனுப்பினார். தன் கணவருக்கு நேரிட்ட விபத்தையும் அவரது நிலையையும் குறித்த செய்தியைக் கேட்டவுடன் அவள் மூர்ச்சையடைந்தாள். அவளது மயக்கம் தெளிந்த பின், அவள் கிறிஸ்தவரான ஒரு அயலகத்தார் மூலமாக அம்மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார்.

உலகிலுள்ள மிகச் சிறந்த மருத்துவமனைகளில் மூன்றாவது இடத்தை வகிக்கும் அம்மருத்துவமனையில் அவருக்குச் சிகிச்சை அளித்த மருத்துவர், டேனியலின் உயிரைப் பாதுகாக்கும்படி அதற்கு மேல் தான் செய்யக்கூடியது எதுவும் இல்லை என்று கூறிவிட்டார். அப்போது டேனியல், அங்கிருந்து 80 கிலோமீட்டர் தொலைவிலுள்ளதும் தன் குடும்ப மருத்துவர் பணியாற்றி வந்ததுமான மருத்துவமனைக்குத் (Umezuruike Hospital) தன்னைக் கொண்டு செல்லும்படி கேட்டுக்கொண்டார். அவருடைய மனைவி மருத்துவ ஊர்தி (ambulance) ஒன்றினை ஒழுங்குபடுத்தி, அவரை அம்மருத்துவ மனைக்குக் கொண்டு சென்றாள்.

மருத்துவ ஊர்தியின் பின்புறத்தில் டேனியல் கிடத்தப் பட்டிருந்தார்; அவ்வாகனத்தின் முன்பகுதியிலிருந்த இருக்கையில் அவருடைய மனைவி அமர்ந்திருந்தாள். அவர், தான் பிழைக்கப் போவதில்லை என்றுணர்ந்து, தன் மனைவியைத் தனதருகில் வரும்படி அழைத்தார். தன் தனிப்பட்ட விவரங்களையும் சபை விவரங்களையும் பற்றிய சில கட்டளைகளை அவளுக்குக் கொடுத்து, தங்கள் மகனையும் தன் சபையையும் கண்காணித்துக்கொள்ளும்படி அவளுக்கு அறிவுரை கூறி, அவளுக்குப் பிரியாவிடை கூற ஆரம்பித்தார். அவள் மிகவும் அதிகமாக அழுதுகொண்டே, அவர் விசுவாசத்திற்கு எதிரான அப்படிப்பட்ட வார்த்தைகளைப் பேசக்கூடாது என்றும், அவர் ஒரு தேவனுடைய மனுஷனாதலால் அவர் விசுவாசம் உள்ளவராயிருக்க

வேண்டுமென்றும், தான் மரிக்கப்போவதாகக் கூறலாகாது என்றும் கூறி, அவரை வன்மையாகக் கடிந்துகொண்டாள்.

அவள் இவ்வாறு பேசிக்கொண்டிருந்தபோதே, மருத்துவ மனைக்குச் செல்லும் வழியில் தானே அவ்வாகனத்திலேயே டேனியல் மரணமடைந்தார். அப்போது டேனியல் இரண்டு பெரிய தேவதூதர்களைக் கண்டார். (ஒரு தேவதூதன் ஒரு மருத்துவ ஊர்தி அளவிற்குப் பெரிய உருவமுள்ளவனாயிருந்தான். எனவே டேனியல் பிற்பாடு இச்சம்பவங்களை விவரிக்கையில், அவர்கள் இருவரும் எவ்வாறு அந்த ஊர்திக்குள் அடங்கினார்கள் என்பதைப் பற்றி தான் வியப்படைவதாகக் கூறினார்.) அத்தூதர்கள் முற்றிலும் வெண்மையா யிருந்தனர். அவர்களுடைய கண்விழிகளும்கூட வெண்மையாயிருந்தன. டேனியல் அவர்களில் ஒருவனோடு பேச முனைந்தபோது, மற்ற தூதன் தன் உதடுகளில் தன் விரலை வைத்து, அமைதலாய் இருக்கும்படி அவருக்குச் சைகை காண்பித்தான். அவர்கள் அவரது இருபக்கத்திலும் நின்று அவரைத் தூக்கினார்கள். இப்போது டேனியல், தான் இரண்டு நபர்களாக இருப்பதாக உணர்ந்தார். அவருடைய 'ஆவிமனிதனின்' இரு கைகளுக்கும் கீழாகக் கரம் கொடுத்து, தேவதூதர்கள் அவரைப் பிடித்திருந்தனர். அந்த மனிதன் பூரண ஆரோக்கியமுள்ளதாயிருந்தது. ஆனால், அவருடைய நொறுக்கப்பட்ட நிலையிலிருந்த மாம்ச சரீரமோ கீழே அவ்வூர்தியில் படுத்திருந்தது. அவர்கள் அந்த ஊர்தியை விட்டு மேலே சென்றது முதல் இயற்கை உலகத்தைப் பற்றிய எண்ணம் அவரில் அற்றுப்போயிற்று.

டேனியலின் சடலத்தைச் சுமந்துவந்த ஊர்தி Umezurike மருத்துவமனைக்கு வந்துசேர்ந்தபோது, அது நவம்பர் 30-ஆம் தேதி வெள்ளிக்கிழமை நள்ளிரவு நேரமாயிருந்தது. டேனியலின் குடும்ப மருத்துவர் அங்கு இல்லை. அங்கிருந்த மருத்துவர் ஒருவர் அவரது உடலைப் பரிசோதனை செய்துவிட்டு, அவருடைய மனைவியிடம் அவர் மரித்துவிட்டார் என்றும், இனி ஒன்றும் செய்ய முடியாது என்றும் துக்கத்துடன் கூறிவிட்டார்.

அதனால் அவர்கள் Owerri-யிலுள்ள Federal மருத்துவ மையத்திற்கு அவரை அவ்வாகனத்தில் கொண்டு சென்றனர். அங்கும் ஒரு மருத்துவரும் இருக்கவில்லை. பிற்பாடு முடிவாக அவர்கள் Eunice Clinic என்ற மருத்துவமனைக்குச் சென்றனர். அங்கு Dr. Jonse Annebunwa என்பவரால் டேனியல் மரித்திருக்கிறார் என்பது உறுதிப்படுத்தப்பட்டது. அவரில் சுவாசம் இல்லை, இதயத் துடிப்பு இல்லை, நாடித் துடிப்பு இல்லை, அவரது கண் விழிகளும் நிலையாய் நின்றிருந்தன. எனவே தன்னால் ஒன்றும் செய்ய முடியாது என்று அம்மருத்துவர் கூறிவிட்டார். 2001, நவம்பர் 30-ஆம் தேதியன்று இரவு 11.30 மணிக்கு ஒரு மரணச் சான்றிதழ் அவருக்குக் கொடுக்கப்பட்டது.

பின்பு அவர்கள் டேனியலின் சடலத்தை அருகாமையிலிருந்த கிராமத்திலுள்ள அவரது தகப்பனாருடைய இல்லத்திற்குக் கொண்டு சென்றனர். பிற்பாடு அவரது சடலம் பதனமிட்டுப் பாதுகாக்கப்படும்படியாக Ikeduru General Hospital Mortuary-க்கு கொண்டு செல்லப்பட்டது. அங்கு அது பிணங்களின் பொறுப்பாளரான Mr. Barlington Manu என்பவரிடம் ஒப்படைக்கப்பட்டது. அந்த நாகரீகமற்ற பழங்கால மார்ச்செரியில் குளிர்சாதன வைப்பு வசதிகள் இல்லாமையால், டேனியலின் விரல்களுக்கிடையேயும் பாதங்களுக்குள்ளும் அந்நபர் பிணப்பாதுகாப்பு இரசாயனப் பொருட்களை (embalming chemicals) ஊசி மூலம் உட்புகுத்தினார். மார்ச்செரியின் அலமாரி ஒன்றில் இரு சடலங்களுக்கிடையே இச்சடலம் கிடத்தப்பட்டது. (பிணப்பொறுப்பாளர் ஒரு கிறிஸ்தவரல்ல; ஆனால் டேனியல் உயிரோடெழுந்த பின்னர் அவர் கிறிஸ்தவரானார்). அவர் உயிரோடெழுந்த பின்னர் இரண்டு வாரங்களுக்கு அந்தப் பிணப்பதன இரசாயனப் பொருட்களின் மணம் அவரது உடலில் இருந்தமையால், அவரைக் காணும்படி வந்த ஜனங்கள் அவரை அணைத்துக்கொண்டபோது தங்கள் மூக்கைப் பொத்திக் கொள்ள வேண்டியிருந்ததாம்!

இந்நிலையில் அவருடைய மனைவி தன் சொப்பனத்தில் தன் கணவருடைய முகத்தைக் கண்டாள். அவர் அவளிடம், 'என்னை ஏன் பிணப் பாதுகாப்பு அறையில் வைத்திருக்கிறீர்கள்? நான் மரிக்க வில்லை; என்னை நீ ஒனிட்ஷாவிலுள்ள ஆலயத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும்; ஜெர்மானிய சுவிசேஷகரான ரெய்னார்டு போங்க்கே (Reinhard Bonnke) அங்கு இப்போது கூட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்' என்று கூறினார். அவள் அவ்வண்ணமே செய்யத் தீர்மானித்தாள். அவளுடைய குடும்பத்தாரோ அவளுடைய மனநிலை பாதிக்கப்பட்டுவிட்டதாக எண்ணினர். இப்போது சனிக்கிழமை மாலை நேரம். டேனியல் இறந்து 24 மணி நேரமாகிவிட்டது. குடும்பத்தார் முடிவாக அவளுக்கு இசைந்தனர். ஆயினும், அவர்கள் ஒரு சவப் பெட்டியை வாங்கினர்; பிணப்பொறுப்பாளர் அவரது சடலத்தை உடுத்துவிப்பதற்கான அடக்க ஆராதனையின் வஸ்திரங்களையும் அவர்கள் கொண்டுவந்தனர். அவரது சடலம் ஒரு மரக்கட்டை போல விறைத்துப்போயிருந்ததால், அவர் அந்த வஸ்திரத்தைக் கிழித்து அவரது சடலத்தை உடுத்துவிக்க வேண்டியதாயிருந்தது. டிசம்பர் 2, ஞாயிறு காலை ஒரு மருத்துவ ஊர்தி வாடகைக்கு எடுக்கப்பட்டது. அங்கிருந்து அரை மணி நேரப் பிரயாண தூரத்திலுள்ள ஒனிட்ஷாவிலுள்ள Grace of God Mission என்ற ஒரு பெரிய ஆலயத்திற்கு டேனியலின் சடலத்தைக் கொண்ட சவப்பெட்டி கொண்டுசெல்லப்பட்டது. அவ்வேளையில் அந்த ஆலயத்தின் மேற்தளத்தில் நடைபெற்ற ஆலயப் பிரதிஷ்டை ஆராதனை ஒன்றில்

சுவிசேஷகரான ரெய்னார்டு போங்க்கே பிரசங்கித்துக் கொண்டிருந்தார். பிற்பகல் ஒரு மணியளவில் அவர்கள் அங்கு போய்ச் சேர்ந்தனர்.

போங்க்கே ஆப்பிரிக்காவிலுள்ள முகமதியர் அனைவராலும் வெறுக்கப்பட்டிருந்தார்; அவருக்கு ஏராளமான கொலை மிரட்டல்களும் கிடைத்திருந்தன. (சில வாரங்களுக்கு முன்பு தான் உலக வர்த்தக மையம் முகமதியத் தீவிரவாதிகளால் அழிக்கப்பட்டிருந்தது என்ற உண்மை இங்கு குறிப்பிடாமலே யாவருக்கும் தெரியும்). இக்காரணங்களினிமித்தம், அந்த ஆலயத்தின் வளாகமெங்கும் கூட்டரசின் படைவீரர்களும், மாநிலப் பாதுகாப்புத் துறையின் காவலர்களும் கூட்டங்கூட்டமாகக் குழுமியிருந்தனர். அச்சவப்பெட்டி ஆலய வளாகத்திற்குள் கொண்டுசெல்லப்பட அவர்கள் அனுமதிக்கவில்லை. ஏனெனில், அதினுள் நிச்சயமாகவே வெடிகுண்டுகள் வைக்கப்பட்டிருக்கும் என அவர்கள் எண்ணினர். டேனியலின் மனைவியோ உரத்த குரலில் அவர்களிடம் கதறிக் கெஞ்சினாள். அவள் சவப்பெட்டியைத் திறந்து, தன்னுடைய கணவரின் சடலமே உள்ளே இருக்கிறது என்பதை அவர்களுக்குக் காண்பித்தாள். அவர்கள் அதைக் கண்டு அவளைப் பரிகசித்து, அவளது பிடிவாதத்தினிமித்தம் அவளைத் தள்ளவும், சாட்டையால் அடிக்கவும் முற்பட்டனர். அங்கு அவள் வெகு அதிகமான இடையூறு விளைவித்ததினிமித்தம் அவ்விஷயம் அங்கிருந்த மூத்த பாஸ்டருக்குத் தெரிவிக்கப்பட்டது. பாஸ்டருடைய மகன், சவப்பெட்டி இன்றி டேனியலின் சடலத்தை அவருடைய மனைவி ஆலய வளாகத்திற்குள் கொண்டுவருவதற்கு அனுமதியளித்தார்; அத்துடன் அச்சடலம் ஆலயத்தின் அடித்தளத்தில் வைக்கப்பட வேண்டுமென்றும் அவர் கட்டளையிட்டார். ஞாயிறு பள்ளி அறை ஒன்றில் இரு மேஜைகள் ஒன்றாக இழுத்துப் போடப்பட்டு, அதன் மேல் டேனியலின் சடலம் வைக்கப்பட்டது.

சில விசுவாசிகள் சடலத்தைச் சூழ்ந்து நின்று ஜெபித்துக் கொண்டிருக்க, போங்க்கே ஆலயக் கட்டிடத்தின் அடித்தளத்தில் வைக்கப்பட்டிருந்த சடலத்தைப் பற்றி ஒன்றும் அறியாதவராய், அதின் மேற்தளத்தில் கூட்டம் நடத்தி, பிரசங்கித்து, ஜெபித்தார். அந்நேரத்தில்தானே டேனியலின் சடலம் திடீரென தானாகக் குலுங்கி வெட்டியிழுத்தது; அத்துடன் ஒழுங்கற்ற சுவாசமும் (irregular breathing) ஆரம்பித்தது. இதெல்லாம் சம்பவிப்பதற்குள்ளாக போங்க்கே ஏற்கனவே அந்த ஆலயத்தை விட்டே கடந்து போய்விட்டார். சூழ்ந்து நின்ற விசுவாசிகள் அதிக உற்சாகத்துடன் ஜெபிக்கலாயினர்; அவருடைய சரீரம் மிகவும் குளிர்ந்து போனதாயும், தொய்வற்று, விறைப்பானதாயும் இருந்ததால், அவர்கள் அவருடைய கழுத்தையும் கைகளையும் கால்களையும் தேய்த்தனர். அடித்தளத்தில் ஒரு பரிதத மனிதனுக்குள்

உயிர் திரும்ப வந்துகொண்டிருக்கிறது என்ற செய்தி மேற்தளத்தில் ஆலயத்திலிருந்தவர்களை எட்டியபோது, உடன்தானே அடித்தளம் ஜனத்திரளினால் நெரிசலாயிற்று. திடீரென டேனியல் தும்மிக்கொண்டே குதித்தெழுந்தார். இதெல்லாம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3. 50-க்கும், 5. 15-க்குமிடையே நடந்தது. வெள்ளிக்கிழமை இரவு 10 மணியளவில் மரித்திருந்த அவர், இதற்குப் பின் சில மணிநேரத்திற்குள் படிப்படியாக முழுமையான சுகம்பெற்றார்.

இந்தச் சம்பவத்தை நீ சந்தேகிக்கிறாயா? Christ for all Nations என்ற Web site அளிக்கும் அறிக்கை இவ்வாறு பிரகடனம் செய்கிறது:

'நம் நினைவை விட்டு நீங்காத, நம்புவதற்குக் கடினமான சில உண்மைகள் இங்கே அளிக்கப்படுகின்றன. இரண்டு நாட்கள் டேனியல் சுவாசிக்கவில்லை, அவருடைய இருதயத் துடிப்பு நின்றுபோயிருந்தது. வெப்பமான சீதோஷ்ண நிலை நிலவிய காலகட்டம் அது. அது ஒரு குளிர்சாதன அறையில் சாவில்லாமலே உணர்ச்சியற்றுக் கிடக்கும் நிலை அல்ல. பிணத்தைப் பதனப்படுத்தி வைக்கும் கடுமையான இரசாயனங்கள் அவரது உடலுக்குள் செலுத்தப்பட்டிருந்தது. ஒரு பிணமாக அவர் பல மணிநேரமாக அங்குமிங்கும் வண்டியில் எடுத்துச் செல்லப்பட்டார்; இழுத்துச் செல்லப்பட்டார்; காற்றில்லாத இடுக்கமான ஒரு சவப்பெட்டியில் அவர் மணிக்கணக்காகக் கிடத்தப்பட்டிருந்தார். இவையெல்லாவற்றினிமித்தமும், அவர் உயிர் பெற்ற பின்னர் அவரது மூளை அதிகமாகப் பாதிக்கப்பட்டிருந்திருக்க வேண்டும். ஆனால், அவர் யாதொரு பாதிப்புமின்றி உயிரோடிருக்கிறார்!

மரித்துப்போன ஒருவனைத் தனியாக ஒரு அறைவீட்டில் இரகசியத்தில் உயிரடையச் செய்ததாகக் கூறும் ஆதாரமற்ற ஒரு உரிமைகோருதல் அல்ல இது! மரித்திருந்து உயிர்ப்பிக்கப்பட்ட இச்சம்பவம் பொதுவான ஓர் இடத்தில், யாவரும் காணத்தக்கதாக வெளியரங்கமாகக் காண்பிக்கப்பட்ட ஒன்று! யாருடைய பெயராவது இதில் குறிப்பிடப்பட வேண்டுமாயின், அது நெக்கா என்பவளே. அவளுடைய அசைக்க முடியாத விசுவாசமே எந்த இடத்தில் வைத்து தேவன் டேனியலை உயிர்ப்பிக்கச் சித்தமாயிருந்தாரோ, அந்த இடத்திற்கு அவரது சடலம் எடுத்துச் செல்லப்படும்படியாக, அது அடக்கம்பண்ணப்படுவதைத் தவிர்த்தது. போங்க்கே ஒரு தேவமனிதன் என்றும், அவரது ஊழிய ஸ்தலத்தில், எங்கும் விசுவாசம் நிலவும் அச்சூழ்நிலையிலேயே இந்த அற்புதம் சாத்தியமாகும் என்றும் அவள் நம்பினாள். நெக்காவின் விசுவாசமே இந்தச் சம்பவம் முழுவதும் நடைபெறக் காரணமாயிற்று. அவளது விசுவாசம் கனப்படுத்தப்பட்டது. யாரால்? அவளது விசுவாசத்தைக் கனப்படுத்தியது யார்? அது தேவனேயன்றி வேறு யாராயிருக்கக் கூடும்?'

இந்த உண்மைச் சம்பவம் ஒரு நகைப்புக்குரிய கட்டுக்கதையாய் இருக்குமாயின், பாஸ்டர் டேனியல் தான் நரகத்திற்கு அழைத்துச் செல்லப்பட்டபோது தனக்குச் சம்பவித்தவைகளாகக் கூறுபவை யாவும் அவருடைய கற்பனைக் கதையாக இருக்க வேண்டும்! இப்போது, மனந்திரும்ப வேண்டும் என்பதும், இயேசுவுக்கு முன்பாக நிற்கப் பாத்திரவான்களாகும்படி தங்களை ஆயத்தப்படுத்திக்கொள்ள வேண்டும் என்பதுமே அவர் சபைக்கு அளிக்கும் தூதாயிருக்கிறது. அவரது சாட்சியைக் கேட்டு அநேகர் மனந்திரும்பியுள்ளனர். அவருடைய இந்தச் சரித்திரமெல்லாம் வெறும் கூத்தாடியின் கட்டுக் கதையாய் இருக்குமாயின், அந்தக் கட்டுக்கதையின் விளைவு மெய்யான பரிசுத்தமாகுதலாய் இருக்கிறதே!

ரெய்னார்டு போங்க்கேயின் ஊழியத்தை முன்னேற்றமடையச் செய்வதற்கு யாதொரு கட்டுக்கதையும் தேவையில்லை. ஏனெனில், நைஜீரியாவில் அவர் நடத்தும் ஆவிக்குரிய கூட்டங்களில் ஏற்கனவே பல இலட்சக்கணக்கானோர் பங்கு பெறுகின்றனர். உண்மையில் அவர் சொல்லுகிறதாவது: இக்குறிப்பிட்ட அற்புதத்தோடு எனக்கு யாதொரு சம்பந்தமும் இல்லை; நான் அன்று பிரசங்கம்பண்ணிக் கொண்டிருந்த ஆலயத்தின் அடித்தளத்தில் ஒரு மரித்த மனிதனின் சடலம் வைக்கப்பட்டிருந்ததே எனக்குத் தெரியாது!

பாஸ்டர் டேனியலின் மரணமும் அதற்குப் பின் அவர் உயிர்ப்பிக்கப்பட்டதுமாகிய இச்சம்பவம் நம்மை வியப்படையச் செய்வதைப் பார்க்கிலும், **அவர் தன் மரணத்திற்குப் பின் அனுபவித்தவை நம்மை அதிக வியப்பில் ஆழ்த்துகிறது. அவரைப் பொறுத்த வரையில், அவர் மரணமடைந்ததற்கும் மீண்டும் உயிர்ப்பிக்கப்பட்டதற்கும் இடையே அவர் அனுபவித்தவை எல்லாம் வெறும் பதினைந்து நிமிட நேர நிகழ்ச்சிகள் போலவே அவருக்குத் தென்பட்டன. ஆனால், உண்மையில் அவர் பெரும்பாலும் இரண்டு நாட்கள் சரீரப்பிரகாரமாக மரணமடைந்திருந்தார்.

மருத்துவ ஊர்தியில் அவர் தன் சரீரத்திலிருந்து இரண்டு தேவதூதர்களால் உயர எடுக்கப்பட்ட பின், ஒரு நொடி நேரம் அவர் தனிமையாய் இருப்பதாக உணர்ந்தார். அதிவிரைவிலேயே வேறொரு தேவதூதன் அவரோடு சேர்ந்துகொண்டான். அவர் அங்கு பார்த்த அல்லது அனுபவித்த எதைப் பற்றியாகிலும் அவருக்குள் ஒரு குழப்பமோ, கேள்வியோ உண்டாகும்போதுதானே, உடனடியாக அத்தேவதூதன் அவருக்கு அவற்றுக்கான பதிலளித்து வந்தான். **'முதலாவதாக நாம் பரதீசுக்குப் போகிறோம்'** என்று அத்தேவதூதன் அவரிடம் கூறினான். அவன் அவரை எடுத்துச்சென்ற அந்த இடத்திற்குச் செல்வதற்கு அவர்களுக்கு நேரம் எடுக்கவே இல்லை. நாம்

பரதீசுக்குப் போகிறோம் என்று தேவதூதன் அவரிடம் சொன்ன மாத்திரத்தில் அவர்கள் பரதீசில் இருந்தனர்.

டேனியல் தூதனோடு நின்று, பளிச்சிடும் வெண் வஸ்திரங்களைத் தரித்த திரள்கூட்டம்பேர் ஆராதித்துக் கொண்டிருப்பதைக் கண்டார். அவர்கள் தேவதூதர்கள் என அவர் எண்ணினார். ஆனால், அவருக்கு வழிகாட்டியாக வந்த தூதனோ, அவர்கள் மனுஷர்கள் என்றும், அவர்கள், பூமியில் வாழ்ந்த காலத்தில் தேவனைச் சேவித்து, தங்கள் விசுவாசத்தைக் கிறிஸ்து இயேசுவின் மேல் மாத்திரம் வைத்தவர்களாக நீதியுள்ள ஜீவியம் செய்தவர்கள் என்றும் அவரிடம் கூறினான். இந்த ஜனங்கள் வயது, இனம், ஜாதி போன்ற பாகுபாடு அற்றவர்களாயிருந்தனர். அதாவது, அவர்களில் யாரும் இளைஞராகவோ, நடுத்தர வயதுள்ளவர்களாகவோ, முதிய வர்களாகவோ தோற்றமளிக்கவில்லை; தங்கள் இனஞ்சார்ந்த எந்தத் தனித்தன்மையும் அவர்களில் காணப்படவில்லை. அவர்கள் யாவரும் மாபெரும் பிரகாசமுள்ள ஒரு ஒளியையே நோக்கியிருந்தனர்; அவர்கள் பூரண ஒருமைப்பாடுள்ளவர்களாயிருந்தனர். ஒரு மின்னியல் பொறியினால் இயக்கப்படுவது போல அவர்கள் யாவரும் ஒரே நேரத்தில் ஒன்றாகக் கரங்களை உயர்த்தினர்; ஒன்றாகத் தலைகுனிந்து பணிந்து கொண்டனர். (வேறொரு சந்தர்ப்பத்தில், சிறிது நேரம் மரித்தவராயிருந்து, பின்பு, தன் வேலையை முடித்துத் திரும்பும்படி மீண்டும் பூமிக்கு அனுப்பப்பட்ட முதியவரான வேறொரு பாஸ்டரும் இதே காட்சியைப் பரதீசில் தான் கண்டதாக விளக்கியிருக்கிறார்).

அந்தத் திரள்கூட்டத்தின் மத்தியில் மூத்தவராகக் காட்சியளித்த ஒரு மனிதனை டேனியல் கவனித்தார். அவர் தான் தேவனாக இருக்கக் கூடுமோ என்ற எண்ணம் டேனியலின் மனதில் உதித்தது. அப்போது அவருக்கு வழிகாட்டியாக வந்த தேவதூதன் அவரைத் திருத்தி, அது தகப்பனாகிய ஆபிரகாம் என்றுரைத்தான்.

டேனியல் அங்கு ஆராதனை செய்துகொண்டிருந்தவர்களுடன் சேர்ந்துகொள்ளும்படி ஏங்கினார். ஆனால், அவர் அங்கு பார்க்க வேண்டிய வேறு சில காரியங்கள் உள்ளன என தூதன் அவரிடம் கூறினான். **'நாம் அடுத்தபடியாக, இயேசு தம்மைப் பின்பற்றுகிறவர்களுக்கு வாக்குப்பண்ணியிருப்பதை கடைசி நாளில் நீதிமான்களாகத் தாம் காண்போருக்காக அவர் ஆயத்தமாக்கியிருக்கிற மாளிகையைக் காணலாம்'** என தூதன் அவரிடம் கூறினான். அவன் அப்படிச் சொன்னவுடன்தானே அவர்கள் அந்த இடத்தில் இருந்தனர்.

தான் அங்கு பார்த்தவைகளை விவரிக்க பூமிக்குரிய வார்த்தைகளே இல்லை என டேனியல் கூறுகிறார். அந்த மாளிகையின் அகலத்திற்கோ, உயரத்திற்கோ முடிவே இல்லை. அது அசைந்து

கொண்டேயிருந்தது. அதன் ஒவ்வொரு அறைகளும் ஏதோ ஒரு விதத்தில் கழன்று கொண்டேயிருந்தன. கண்ணாடி போன்ற, ஒளி ஊடுருவிச் செல்லக்கூடிய ஒரு துலாம்பரமான வஸ்துவினால் அது உண்டாக்கப்பட்டிருந்தது. அதன் தரையெல்லாம் ஒளியினால் உண்டாக்கப்பட்டிருந்தது போல காட்சியளித்தது. அப்பெரிய மாளிகையில் யாரும் இருந்ததாக டேனியல் காணவில்லை. ஆனால், இனிமையான பாடல் ஒசையை அவர் அங்கு கேட்டார். அந்த இசை எங்கிருந்து வருகிறது என அவர் வியந்தபோது, அத்தூதன் அம்மாளிகையைச் சுற்றிலுமுள்ள ஏராளமான மலர்களை அவருக்குச் சுட்டிக்காண்பித்தான். அவர் அம்மலர்களை நெருங்கிச் சென்று உற்று கவனித்தபோது, அவை அசைந்ததாடிக்கொண்டு, தேவனுக்குத் துதிபாடல் பாடிக் கொண்டிருந்தன!

தூதன் டேனியலை நோக்கி, **'மாளிகை ஆயத்தமாகிவிட்டது; ஆனால் தேவனுடைய பரிசுத்தவான்களோ இன்னும் ஆயத்தமாக வில்லை; சபையிலுள்ள கிறிஸ்தவர்கள் ஆயத்தமில்லாதிருப்பதால் இயேசு வரத் தாமதிக்கிறார்'** என்று கூறினான். (இது முற்றிலும் வேத சத்தியத்தின்படியானது – II பேதுரு 3 : 9).

இதற்கு அடுத்தபடியாக தேவதூதன் டேனியலைப் **பாதாளத்திற்குக்** கொண்டு சென்றான். அவர்கள் பாதாள வாசலில் நின்றனர். தூதன் தன் கரத்தை மேலே உயர்த்தி, கீழே போட்டபோது, அதின் கதவு திறவுண்டது; உடன்தானே ஜனங்கள் அலறுகிறதும் அழுகிறதும் கூக்குரலிடுகிறதுமான பயங்கரமான சத்தத்தை டேனியலால் கேட்க முடிந்தது. ஆனால், பாதாளத்தில் இருந்த அனைத்தும் முழு காரிருளும் கறுப்புமாயிருந்தன. அப்போது தேவதூதனிலிருந்து ஒரு பிரகாசமான ஒளி வீசவே, பலதரப்பட்ட ஜனங்கள் வேதனையில் தவிப்பதை டேனியல் கண்டார்.

குறிப்பாக மூன்று கூட்டத்தார் பூமியில் தாங்கள் விதைத்தவைகளை நரகத்தில் சதாகாலமும் அறுக்கிறவர்களாக, முடிவில்லா உபத்திரவங்களினூடாகத் திரும்பத் திரும்ப கடந்துசென்று கொண்டிருப்பார்கள். ஒரு கூட்டத்தார் தங்கள் சொந்த மாம்சத்தையே தின்று, பின்பு அதை வாந்திபண்ணுவர். அது உடன்தானே மாம்சமாக மாறி, பறந்து போய் அவர்களுடைய சரீரத்தில் ஒட்டிக்கொள்ளும். மீண்டும் அதை அவர்கள் தின்பார்கள். இக்கூட்டத்தார் பூமியிலிருந்தபோது **இரகசிய மந்திரக் கூட்டத்தின் வழக்கப்படி, மனித மாம்சம் புசித்தவர்கள்** என்று தூதன் டேனியலிடம் கூறினான். மற்றொரு கூட்டத்தார் பூமியிலிருந்தபோது **பிறருடைய நிலங்களைத் திருடியவர்கள்.** இவர்கள் கற்பாறைபோல் கடினமான நிலத்தைச் சதாகாலமும் தங்கள் பற்களினால் தோண்டிக்கொண்டே இருந்தனர். வேறொரு கூட்டத்தார்

பூமியிலிருந்தபோது **விபசாரக்காரராகவும் வேசிகளாகவும்** இருந்தவர்களாவர். அவர்களுக்குக் கிடைத்த தண்டனை அவர்களுடைய பாவத்தின் அடிப்படையிலானதாகவே, அகோரமானதாய் இருந்தது.

ஒவ்வொருவருக்கும் அவனவனுடைய / அவளவளுடைய கிரியைகளின்படியே கர்த்தர் பலனளிப்பார் என்றும், மனுஷன் எதை விதைக்கிறானோ, அதையே சரியாக அறுப்பான் என்றும் வேதாகமம் திரும்பத் திரும்ப எவ்வளவு தெளிவாகக் கூறுகிறது! ஐசுவரியவானும் லாசருவும் பற்றி இயேசு கூறியுள்ள வேதபகுதியில், அவர்கள் இருவரின் மறுமையின் வாழ்க்கையில் அவர்களுடைய பகுதிகள் (role) சரியாக நேர்மாறானவையாகிவிட்டன! முந்தின வாழ்க்கையில் லாசரு, ஐசுவரியவானின் மேஜையிலிருந்து விழும் ஒரு துணிக்கைக்காக எப்படி ஏங்கிக் கொண்டிருந்தானோ, அப்படியே இப்பிந்தின வாழ்க்கையில் ஐசுவரியவான், லாசருவின் விரல் நுனியிலிருந்து விழும் ஒரு துளி தண்ணீருக்காக ஏங்கிக் கொண்டிருந்தான்!

மேலும் நைஜீரியாவின் முன்னாள் இராணுவ அதிகாரியைப் பாஸ்டர் டேனியல் அங்கு கண்டார். இரகசிய மந்திரக் குழுக்களின் பழக்கங்களில் விளையாடி, கர்த்தரை விட்டு விழுந்துபோன ஒரு கிறிஸ்தவனையும் அவர் அங்கே கண்டார். தன்னுடைய பொறுப்பிலிருந்த சபையின் பணத்தை மோசடி செய்து, அதைத் தனக்கென்று உபயோகித்து, அதைப் பற்றி பொய்யும் உரைத்திருந்த ஒரு **பாஸ்டரையும்** அவர் அங்கே கண்டார். முன்பு உலகிலிருந்தபோது பாஸ்டராயிருந்த அந்த நபர், தான நரகத்தைவிட்டு தப்பிக்கொள்ள டேனியலால் உதவி செய்யக்கூடுமானால், தான் அப்பணம் முழுவதையும் திரும்பக் கொடுத்துவிட ஆயத்தமாயிருப்பதாகக் கூறி, தனக்கு உதவி செய்யும்படி அவரிடம் கெஞ்சினார். உபாதைகள் வெவ்வேறு நிலைகளில் இருந்தபோதிலும், பாதாளத்திலிருந்த ஜனங்கள் யாவரும் தங்களை மீண்டும் மீண்டும் வலித்திழுத்துத் திருகுகிற அதரிசனமான ஒரு சக்தியின் கீழ் தவித்து, வேதனையினால் சுருண்டு நெளிந்து கொண்டிருந்தனர். அவர்கள் அனைவருமே அலறிக்கொண்டும், புலம்பிக்கொண்டும், தங்கள் பற்களைக் கடித்துக்கொண்டும் இருந்தனர். **'நான் பார்த்தவைகளை ஒவ்வொரு கிறிஸ்தவனும் பார்த்திருந்தால், சுவிசேஷம் பிரசங்கிக்க வேண்டிய அவசியமே இராது; ஏனெனில், ஒவ்வொரு கிறிஸ்தவனுமே சுவிசேஷமாக மாறியிருப்பான்'** என்று பாஸ்டர் டேனியல் கூறுகிறார்.

இதற்கு அடுத்தபடியாகச் சம்பவித்ததே மிகவும் வியப்பூட்டும் ஒரு சம்பவமாயிருகிறது! பாஸ்டர் டேனியலுக்கு வழிகாட்டியாக வந்திருந்த தேவதூதன் அவரை நோக்கி, **'இப்போது உன்னுடைய பெயர் அழைக்கப்பட்டு, உன்னுடைய செயற்குறிப்புகள் அடங்கிய பதிவேடு**

வாசிக்கப்படுமாயின், யாதொரு சந்தேகத்திற்கும் இடமின்றி நீ நரகத்திற்குள் தான் வீசியெறியப்படுவாய்' என்றுரைத்தான். பாஸ்டர் உடனடியாக அவனுடைய கூற்றினை எதிர்த்து, தனக்காக நியாயம் பேசி, 'நான் ஒரு தேவமனிதன்! நான் என் முழு இருதயத்தோடும் கர்த்தரைச் சேவிக்கிறேன்!' என்று கூறினார். அப்போது உடனடியாக தூதனின் கையில் ஒரு வேதாகமம் தோன்றி, அதின் மத்தேயு 5-ஆம் அதிகாரத்தில், தன் சகோதரனை மூடனே என்று சொல்லுகிறவன் எரிநரகத்திற்குப் பாத்திரவானாயிருப்பான் என்று இயேசு எச்சரித்திருக்கிற அந்த வேதபகுதிக்கு நேராகத் திறவுண்டது. (மத். 5 : 21, 22 காண்க). தன் மனைவியினிடத்தில் தான் பேசிய கோபமுள்ள வார்த்தைகளினிமித்தம் தான் குற்றவாளி என்பதைப் பாஸ்டர் டேனியல் அறிந்திருந்தார். நாம் நமக்கு விரோதமாக மற்றவர்கள் செய்யும் தப்பிதங்களை மனப்பூர்வமாய் மன்னியாமற்போனால், நம் பரமபிதாவும் நம் பாவங்களை நமக்கு மன்னியாதிருப்பார் என்று இயேசு உரைத்திருப்பதையும் தூதன் அவருக்கு நினைவூட்டினான். (மத். 6 : 14, 15 காண்க). ஏனெனில், நாம் எதை விதைக்கிறோமோ அதையே அறுப்போம். இரக்கமுள்ளவர்களே இரக்கம் பெறுவார்கள் (மத். 5 : 7). மரணத்துக்கேதுவான விபத்து அவருக்கு நேரிட்ட அந்த நாள் காலையில் அவருடைய மனைவி அவரோடு ஒப்புரவாகும்படி முயற்சித்தபோதிலும், அவர் அவளை மன்னிக்க மறுத்ததினிமித்தம், மருத்துவமனையில் மரித்துக் கொண்டிருக்கிற நேரத்தில் அவர் தேவனை நோக்கிச் செய்த ஜெபங்கள் பலனற்றவையாயின என்று தூதன் அவரிடம் சொன்னான்.

இந்த வெளிப்படுத்தலினிமித்தம் பாஸ்டர் டேனியல் அழுதார். ஆனால், தூதனோ அவரிடம், 'நீ அழவேண்டாம்; வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஐசுவரியவானின் வேண்டுதலுக்குப் பதிலளிக்கும் வகையில் (லூக்கா 16 : 27-30), தேவன் உன்னை மீண்டும் பூமிக்கு அனுப்பப்போகிறார் - மரித்தோரிலிருந்து ஒரு மனிதன் எழுந்து வந்து நரகத்தைப் பற்றி ஜனங்களை எச்சரிப்பான்; **உன்னுடைய உயிர்ப்பிக்கப்படுதல் இந்தச் சந்ததிக்கு ஒரு அடையாளமாகவும், கடைசியான எச்சரிப்பாகவும் விளங்கும்!'** என்றான்.

கடைசியாக பாஸ்டர் டேனியல் ஒரு மலையுச்சிக்கு நடத்தப்பட்டார். அதில் முழுவதும் இருள் நிறைந்த ஒரு மிகப்பெரிய துவாரம் இருந்தது. வழிக்காட்டியாக வந்த தூதன் டேனியலை அங்கு நின்று கொண்டிருந்த ஒரு மனிதனிடம் ஒப்படைத்தான். அவர் யார் என்று ஆரம்பத்தில் அவருக்குப் புலப்படவில்லை. ஆனால், வெகுவிரைவிலேயே அவர் சுவிசேஷகரான ரெய்னார்டு போங்க்கே என்பதை அவர் உணர்ந்து கொண்டார். 'நீ இரட்சிப்பின் சுவிசேஷத்தை அறிவிக்க அம்மனிதன் உனக்கு உதவி செய்வான்' என

தூதன் அவரிடம் கூறினான். டேனியலும், Rev. போங்கேயும் சேர்ந்து அக்குழியில் இறங்கினர். அப்போதுதான் பாஸ்டர் டேனியல், Grace of God Mission ஆலயத்தின் அடித்தளத்தில் தான் கிடத்தப்பட்டிருந்த மேசையிலிருந்து குதித்தெழுந்தார். குறைந்தபட்சம் 42 மணிநேரம் (பெரும்பாலும் இரண்டு முழு நாட்கள்) மரித்திருந்த அவர் தன் சரீரத்திற்குள் மீண்டும் பிரவேசித்தார்.

இப்போது அவர் தன்னுடைய தூதுகளில், தான் கிட்டத்தட்ட அனுபவித்த ஆக்கினைத்தீர்ப்பை வேறு யாரும் அடையாதிருக்கும் படியாக, 'நாம் நமக்கு விரோதமாகத் தப்பிதம் செய்தவர்களை மன்னிக்க வேண்டும்' என்று போதித்து வருகிறார். மன்னித்தலைப் பற்றியும், ஒருவரிலொருவர் அன்பாயிருத்தலைப் பற்றியும் இயேசு கற்பித்திருக்கும் கற்பனைகளுக்கும், மற்ற எல்லாக் கட்டளைகளுக்கும் நாம் கீழ்ப்படிய வேண்டியது எவ்வளவு முக்கியமானதாயிருக்கிறது! சபையானது மனந்திரும்பி, யாவரோடும் சமாதானமாயிருத்தலையும், பரிசுத்தத்தையும் நாடித்தேட வேண்டிய வேளை இதுவே. பரிசுத்த மில்லாமல் ஒருவனும் கர்த்தரைத் தரிசிப்பதில்லை (எபி. 12 : 14). தேவனுடைய சித்தம் செய்கிறவர்கள் மட்டுமே பரலோகத்தில் பிரவேசிப்பார்கள் என்று இயேசு எச்சரித்திருக்கிறார் (மத். 7 : 21). 'நீ ஒருமுறை இரட்சிக்கப்பட்டிருந்தால், அதற்குப் பின் நீ எப்படி ஜீவித்தாலும் என்றென்றைக்குமாக அந்த இரட்சிப்பு உனக்கு வாக்குறுதிபண்ணப்பட்டுள்ளது' என்ற தவறான போதனைக்குச் செவி கொடாதீர்கள். இயேசு தமக்கு மிகவும் நெருங்கியிருந்த சீஷர்களுக்கே, தாம் வரும்போது அவர்கள் ஆயத்தமில்லாதிருப்பதற்கும், அதினால் அவர்கள் நரகத்தில் தள்ளப்படுவதற்கும் சாத்தியக்கூறுகள் உண்டு என்று கூறி அவர்களை எச்சரித்திருக்கிறாரே! (மத். 24 : 42 ; 25 : 46).

பாஸ்டர் டேனியல் தன் மனைவியை மன்னியாதிருந்த அந்த ஒரே ஒரு பாவத்திற்காக மட்டும் ஆக்கினைத்தீர்ப்புக்குப் பாத்திரராக நின்று கொண்டிருந்தார் என எண்ண வேண்டாம். அவர் மரித்துக் கொண்டிருந்தபோது அவர் தேவனிடத்தில் அறிக்கை செய்து கொண்டிருந்த வேறு பாவங்களும் இருந்தன. ஆனால், அவர் தன் மனைவியை மன்னியாதிருந்த பாவம், மற்ற பாவங்களுக்கு அவர் கோரிய மன்னிப்புகளை ரத்து செய்துவிட்டது. தேவன் நம்மை மன்னிக்க வேண்டுமென்று நாம் எதிர்பார்த்தால், நாம் நமக்குத் தவறிழைத்தவர்களை மன்னிக்க வேண்டும். இயேசு கூறியிருப்பது இதுவே. நண்பனே, இயேசுவின் முன்பாக உண்மையுள்ளவனாகவும் குற்றமற்றவனாகவும் நிற்க நீ ஆயத்தமா?

பிறருக்கு இடறலாயிராதே!

அநேக வருடங்களாகக் கர்த்தருக்கு ஊழியஞ்செய்துவந்த ஒரு சகோதரி வியாதிப்பட்டு மரித்தார்கள். அவர்களுக்கு அருமையான வர்கள் சூழ்ந்து நிற்க, அவர்களது சடலத்தை அடக்கம் செய்வதற்கான ஆயத்தங்கள் செய்யப்பட்டுக்கொண்டிருக்கையில், திடீரென அச்சகோதரி தன் கண்களைத் திறந்தார்கள். யாவரும் அதிர்ச்சியடைந்தனர்.

அந்தச் சகோதரி அழுதுகொண்டே இவ்வாறு கூறினார்கள்: "என் ஆத்துமா மேலே பறந்துயர்ந்து சென்று, சீயோனின் வாசலை அடைந்தது. ஆனால் ஒரு தேவதூதன் எனக்கு உள்ளே செல்வதற்கு அனுமதியில்லை என்று கூறிவிட்டான்; அதற்கான காரணம் யாது என நான் வினவியபோது, நான் வியாதிப்பட்டிருந்தபோது எனக்கு உதவிசெய்த **ஒரு சகோதரியின் மனது என் வார்த்தைகளின் மூலம் புண்படுத்தப்பட்டிருக்கிறது** என்று அவன் கூறினான். அப்போது நான் அழுதுகொண்டே அந்தத் தூதனிடம், 'அந்த ஒரே ஒரு தவறுதானே, தயவாய் என்னை உள்ளே அனுமதித்துவிடும்' என்று கெஞ்சினேன்; ஆனால் என்னை உள்ளே அனுமதிக்கக் கூடாது என்று கர்த்தர் கண்டிப்பான உத்தரவிட்டிருப்பதாக அத்தூதன் மறுமொழி கூறினான். அப்போது நான் ஆண்டவராகிய இயேசுவைப் பார்க்க வேண்டுமென கேட்டுக்கொண்டேன்; அவர் என் முன் வெளிப்படவே, நான் அவருக்கு முன்பாக மனங்கசந்து அழுது, 'எனது முதுகெலும்பு முற்றிலும் நொறுங்கிப்போயிருக்கிறது; இந்நிலையில் நான் பூமிக்குச் சென்று படுக்கையிலிருப்பதால் என்ன பிரயோஜனம்?' என்று கேட்டேன். அவர் என்னை நோக்கி, 'நீ பூமிக்குத் திரும்பிச் சென்று, நீ துக்கப் படுத்தியிருக்கும் அந்தச் சகோதரியிடம் மன்னிப்பு கேள்; அப்போது நீ பூரண சுகமடைவாய்' என்றார்". அவ்வண்ணமே செய்து பூரண சுகம் பெற்ற அந்தச் சகோதரி இன்றும் உயிரோடிருந்து, கர்த்தர் தனக்கருளிய புதிய ஜீவனைக் குறித்து எங்கும் சாட்சி பகர்ந்துவருகிறார்கள்.

"என்னிடத்தில் விசுவாசமாயிருக்கிற இந்தச் சிறியரில் ஒருவனுக்கு இடறல் உண்டாக்குகிறவன் எவனோ, அவனுடைய கழுத்தில் ஏந்திரக்கல்லைக் கட்டி, சமுத்திரத்தின் ஆழத்திலே அவனை அமிழ்த்துகிறது அவனுக்கு நலமாயிருக்கும்" (மத். 18 : 6) என நமதாண்டவர் உரைத்திருக்கிறார். எனவே அன்பான தேவபிள்ளையே, பிறரைப் புண்படுத்துதல் அல்லது பிறருக்கு இடறல் உண்டாக்குதல் நாம் பரலோகத் திறகுச் செல்வதைத் தடைசெய்யக்கூடிய ஒரு பெரிய பாவமாகும் என்பதை உணர்ந்து, இன்றே நீ மனந்திரும்புவாயாக.

தற்புகழை நாடாதே!

தேவமனிதர் ஒருவர், தன் சொப்பனத்தில் உலகப்பிரசித்தி பெற்ற சுவிசேஷகர் ஒருவர் துக்கம் நிறைந்த முகத்துடன் தன் முன் வந்து நிற்பதைக் கண்டார். அப்போது அவர், 'நீர் இன்னார்தானே; நீர் ஏன் இவ்வளவு துக்கம் நிறைந்தவராய் நிற்கிறீர்?' என வினவினார். அப்போது அந்தச் சுவிசேஷகர், 'நான் அந்த நபர் தான்; ஒரு மணி நேரத்திற்கு முன்பு தான் நான் ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்டிருக்கிறேன்!' என மிகுந்த துக்கத்துடன் விடைபகர்ந்தார். இதைக் கேட்டு அதிர்ச்சியுற்ற அத்தேவமனிதன், 'நீர் மிகுந்த வல்லமையான பிரசங்கியாயிற்றே! ஏராளம் பேர் உம்முடைய ஊழியத்தினால் இரட்சிக்கப்பட்டிருக்கிறார்களே!' என்றுரைத்தார். அவர், 'ஆம்! நான் கர்த்தருக்காக வல்லமையான ஊழியம் செய்தேன் என்பது உண்மைதான்; என் ஊழியத்திற்கு முத்திரையாக ஆயிரக் கணக்கான ஆத்துமாக்கள் பரலோகத்தில் இருக்கிறார்கள் என்பதும் உண்மைதான். நான் ஊழியம் செய்யவில்லை என்பதற்காக நான் இன்று ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்படவில்லை; நான் என்னுடைய பேர் பிரஸ்தாபத்திற்காக, என் சுய மகிமையைத் தேடி ஊழியம் செய்ததினிமித்தமே ஆக்கினைக்குள்ளாக்கப்பட்டிருக்கிறேன்' என்று விடைபகர்ந்தார். இச்சொப்பனத்தைக் கண்டு அத்தேவமனிதன் திடுக்கிட்டு நித்திரையினின்று விழித்துக்கொண்டார். உடனடியாக அவரது வீட்டின் தொலைபேசி மணி அடித்தது. அவர் தொலைபேசியை எடுத்தபோது மறுமுனையிலிருந்து பேசிய நபர், 'ஐயா! ஒரு மணி நேரத்திற்கு முன்பாக இக்குறிப்பிட்ட பிரபலமான சுவிசேஷகர் மரித்துவிட்டாராம்; இதை நீர் கேள்விப்பட்டீரா?' என பதட்டத்துடன் வினவினார். அத்தேவமனிதர் தான் கண்ட சொப்பனத்தை எண்ணி ஆறாத்துயரத்தில் ஆழ்ந்தார்.

பகையின் விளைவு!

ஒரு காலத்தில் இந்துமதத்தைச் சேர்ந்தவர்களாக இருந்த ஒரு சகோதரி கர்த்தரை ஏற்றுக்கொண்டு, ஞானஸ்நான சத்தியத்திற்குக் கீழ்ப்படிந்து, பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொண்டார்கள். அவர்கள் தசமபாகமும் காணிக்கையும் கொடுப்பதில் உண்மையுள்ளவர்களாய் இருந்தார்கள். கர்த்தருக்கு ஊழியஞ் செய்வதிலும் அவர்கள் வைராக்கியமுள்ளவர்களாய் இருந்தார்கள்; அநேக ஆத்துமாக்களை அவர்கள் கிறிஸ்துவிடம் வழிநடத்தினார்கள். அவர்கள் தன்னுடைய மகனையுங்கூட கர்த்தரின் ஊழியத்துக்காக அர்ப்பணித்தார்கள்.

ஒரு நாள் அச்சகோதரி அதிகமாக வியாதிப்பட்டு மரணத் தருவாயிலானார்கள். அப்பொழுது அவர்கள், மகிமையுடன் பிரகாசித்துக் கொண்டிருந்த புதிய எருசலேம் நகரத்தை ஒரு தரிசனத்தில் கண்டார்கள். அவர்கள் மிகவும் சந்தோஷப்பட்டு, கர்த்தரிடம், 'கர்த்தாவே, நான் இப்பொழுதே அங்கு வர வாஞ்சிக்கிறேன். என்னுடைய பிள்ளைகளையெல்லாம் உம்முடைய பொறுப்பில் விட்டுவிடுகிறேன்' என்று கூறினார்கள். கர்த்தர் மறுமொழியாக, 'நீ பரலோகத்துக்கு வருவதில்லை; நீ நரகத்துக்குத்தான் போய்க்கொண்டிருக்கிறாய். நான் உனக்குக் காண்பித்த புதிய எருசலேம் பட்டணமே நான் உனக்காக ஆயத்தம் பண்ணின ஸ்தலமாகும். ஆனால் நீயோ அதற்குத் தகுதியற்றவளாகி, இப்பொழுது நரகத்துக்கு நேராகச் சென்றுகொண்டிருக்கிறாய்' என்று கூறினார். இதைக் கேட்ட அச்சகோதரி அதிர்ச்சியுற்று, 'என்ன ஆண்டவரே! நான் உம்முடைய பிள்ளை தானே! நான் எப்படி நரகத்துக்குச் செல்ல முடியும்?' என்று கேட்டார்கள். கர்த்தர் அவர்களிடம், 'இல்லை, நீ நரகத்தின் பிள்ளைதான். நீ உன்னுடைய மூத்த சகோதரியை வெறுத்து, அவளோடு நீண்ட நாட்களாகப் பேசாமலிருக்கிறாய். ஆகவே, நீ நரகத்தையே நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறாய்' என்று பதிலளித்தார். மனந்திரும்பாமல் இன்னும் இந்துவாகவே இருந்த தன்னுடைய சகோதரியிடம் தான் கொண்டிருந்த வெறுப்புணர்வைக் குறித்து அவர்கள் உணர்த்தப்பட்டார்கள். அவர்கள் கர்த்தரிடம், 'கர்த்தாவே, தயவுசெய்து என்னை இப்பொழுது எடுத்துக் கொள்ளாதேயும்; நான் என்னுடைய பாவத்தை உணருகிறேன்; நான் என்னுடைய சகோதரியை மன்னித்து, அவர்களோடு ஒப்புரவாகிக் கொள்ளுகிறேன். தயவுசெய்து எனக்கு மற்றுமொரு தருணத்தைத் தாரும்' என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டார்கள்.

தேவனுக்கு ஸ்தோத்திரம். அந்தச் சகோதரி அப்பொழுது மரிக்கவில்லை. அவர்கள் தன்னுடைய சகோதரியை அழைத்தனுப்பி, அவர்களை அரவணைத்து, அழுது மன்னிப்பு கேட்டார்கள். கர்த்தர் அச்சகோதரியைப் பூரணமாகச் சுகமாக்கினார். அவர்களுடைய அன்பும், தன்னைத் தாழ்த்தி மன்னிப்பு கேட்ட செயலும் அந்த மூத்த சகோதரியைத் தொட்டதினிமித்தம் அவர்களும் கர்த்தரைத் தன்னுடைய சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டார்கள்.

உன் மனதைத் தூய்மையாகக் காத்துக்கொள்!

லண்டன் மாநகரத்தில் வசித்துவரும் இளவயதுள்ள ஒரு தாய் ஒரு சொப்பனங்கண்டாள். அச்சொப்பனத்தில் அவள் தன் கணவருடனும், ஏழு வயது நிரம்பிய தன் மகளுடனும் பரலோக வாசலை அடைந்தாள். அவளும் அவளுடைய கணவரும் பரலோகத்தில் பிரவேசிப்பதற்குக் கர்த்தர் அனுமதியளித்தார். சிறு பெண்ணுக்கோ பரலோகத்திற்குள் பிரவேசிக்க அனுமதியளிக்கப்பட வில்லை. இதைக்குறித்து அதிர்ச்சியடைந்த அத்தாயார், 'கர்த்தாவே, அவள் என்னுடைய மகள்!' என்று பதட்டத்துடன் கூறினாள். கர்த்தரோ, 'அது உண்மைதான்; ஆனாலும் அவள் TV-யினால் தன் மனதைக் கறைப்படுத்தியிருக்கிறாள்; ஆகவே அவள் பரலோகத்திற்குள் பிரவேசிக்க முடியாது' என்று கூறிவிட்டார். மறுநாள் காலையில் அத்தாயார் தன் மகளிடம் இதனைக் கூறவே, அச்சிறுமி, தான் மனதில் கறைப்படுவதற்குக் காரணமாயிருந்த TV-யினின்று விடுதலை பெற்றாள். தொலைக்காட்சி, ஆபாசக் கதை புத்தகங்கள், ஆபாசப் படங்கள், இன்டர்நெட் போன்ற யாதொன்றினாலும் நம் மனது கறைப்படுத்தப்படாதபடிக்கு நாம் எச்சரிக்கையாய் இருப்போமாக. "எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள், அதினிடத்தினின்று ஜீவஊற்று புறப்படும்" (நீதி. 4 : 23) — நீ அநேகருக்கு ஆசீர்வாதத்தின் ஊற்றாய்த் திகழ்வாய். "மற்றவர்கள் செய்யும் பாவங்களுக்கு உடன்படாதே; உன்னைச் சுத்தவானாகக் காத்துக்கொள்" (1 தீமோ. 5 : 22). "இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்" (மத். 5 : 8).

சுகபோகத்தின் அபாயம்

லூக்கா 16-ஆம் அதிகாரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஐசுவரிய வானையும் லாசருவையும் பற்றிய சம்பவத்தில், ஐசுவரியவான் பாதாளத்திற்குச் சென்றதாக நாம் பார்க்கிறோம். அவன் ஒரு விபசாரக்காரனாகவோ, கொலைபாதகனாகவோ, திருடனாகவோ, தேவனைத் தூஷிக்கிறவனாகவோ இருந்ததாக நாம் வாசிக்கிறதில்லை. அப்படியானால், அவன் பாதாளத்திற்குச் சென்றது ஏன்? அவன் இரத்தாம்பரமும் மெல்லிய வஸ்திரமும் தரித்தவனாய் அனுதினமும் சம்பிரமமாய் வாழ்ந்துகொண்டிருந்ததே அவன் பாதாளத்திற்குச் சென்றதின் ஒரு காரணமாய் இருக்கக் கூடும். வேதாகமக் காலங்களில் இரத்தாம்பரமும் மெல்லிய வஸ்திரமும், ராஜரீக வஸ்திரங்களாக, அதிக விலைமதிப்புள்ளவையாயிருந்தன. நீ ஒருவேளை ஓர் ஐசுவரியவானாயிருக்கலாம். 'நான் என் சொந்தப் பணத்தை உபயோகித்து தானே விலையுயர்ந்த உடைகளை, மிகவும் விலையுயர்ந்த ஒரு வாகனத்தை, இதர சுகபோகத்திற்குரிய பொருட்களை வைத்திருக்கிறேன்' என்று நீ கூறக்கூடும். ஆனால் நீ உன் பணத்தை அவ்விதம் உபயோகிக்கும்போது வேதாகமம் உன்னைக் கொலைபாதகன் என்று அழைக்கிறது. 'நான் யாரைக் கொலை செய்கிறேன்?' என்று நீ ஒருவேளை கேட்கக் கூடும். "பூமியிலே நீங்கள் சம்பிரமமாய் வாழ்ந்து, சுகபோகத்தில் உழன்றீர்கள்; கொழுத்தவைகளை அடிக்கும் நாளில் நடக்கிறதுபோல உங்கள் இருதயங்களைப் போஷித்தீர்கள். நீதிமானை நீங்கள் ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்துக் கொலை செய்தீர்கள்" (யாக். 5 : 5, 6). நீ சம்பிரமமாய்ச் சிற்றின்பத்தில் வாழும்போது, அநேக ஏழைகளையும் சிறுமைப்பட்டவர்களையும் சுபாவத்தின் அடிப்படையில் கொலை செய்கிறாய். அவர்கள் பட்டினியினாலும் ஊட்டச்சத்து குறைவினாலும் சாகக் கூடும். உன்னுடைய தசமபாகம் மாத்திரமல்ல, உன்னுடைய ஒவ்வொரு நயாபைசாவும் தேவனுக்குச் சொந்தமானது என்பதை நீ நினைவிற்கொள்வாயாக. ஒரு நாள் நீ அவற்றிற்காக தேவனுக்குக் கணக்கொப்புவிக்க வேண்டும்.

சிற்றின்பப் பிரியராய் வாழ்ந்து, சுகபோக வாழ்க்கைக்காகப் பணத்தைச் செலவழிக்கிறவர்களுக்கு வேதனையுள்ள ஒரு முடிவு உண்டாகும். அவர்களது வாழ்க்கையே வேதனையுள்ளதாயிருக்கும். "அவள் தன்னை மகிமைப்படுத்தி, செல்வச்செருக்காய் வாழ்ந்ததெவ் வளவோ அவ்வளவாய் வாதையையும் துக்கத்தையும் அவளுக்குக் கொடுங்கள்" (வெளி. 18 : 7) என நாம் வாசிக்கிறோம். உன் சுகபோக மான வாழ்க்கை மறுமையில் உனக்குத் தாங்கொணா வேதனையை அளிக்காதபடிக்கு இன்றே நீ எச்சரிப்படைவாயாக.

காலங்கடந்து போயிற்றே!

தேவனுடைய மனிதர் ஒருவர் ஒரு சுவிசேஷக் கூட்டம் நடத்திக் கொண்டிருக்கையில், கூடியிருந்த யாவரையும் தங்கள் வாழ்க்கையைக் கிறிஸ்துவுக்கு அர்ப்பணிக்கும்படி அறிவுறுத்திக்கொண்டிருந்தார். அக் கூட்டத்திலிருந்த ஒரு நபர் தன் இருதயத்தில் உணர்த்தப்பட்ட போதிலும், அப்பிரசங்கியார் இன்னும் சில நாட்கள் அந்த இடத்தில் கூட்டங்கள் நடத்தப்போவதால், தன் ஜீவியத்தை மறுநாள் கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுக்கலாமென்று நினைத்திருந்தான். ஆனால் அந்த 'மறுநாள்' அவனுக்கு வரவே இல்லை, ஏனெனில் அந்த இரவே அவன் வீடு திரும்பும் வழியில் அவனை ஒரு பாம்பு தீண்டியதால் அவன் மரித்துப்போனான்.

தங்கள் ஜீவியத்தைக் கிறிஸ்துவுக்கு அர்ப்பணித்தல், தண்ணீர் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுதல், தேவனுக்கு ஊழியஞ்செய்தல் போன்ற பல நல்ல நோக்கங்கள் உடையவர்களாய் அநேகர் இருக்கின்றனர். இருப்பினும் இவ்வெல்லா நல்லெண்ணங்களையும் 'தாமதித்தலின் ஆவி' அழித்துப்போடுகிறது. 'நாங்கள் எங்களுக்கு வசதியான வேளை வரும்போது அதைச் செய்வோம்' என்று அவர்கள் கூறுகிறார்கள். தேசாதிபதியாகிய பேலிக்ஸ் அப். பவுலின் பிரசங்கத்தைக் கேட்டபோது அவனுக்கு நடுக்கமுண்டாகி, அவன் தன் பாவங்களைக் குறித்து உணர்த்தப்பட்ட போதிலும், 'எனக்கு வசதியான சமயம் கிடைக்கும்போது உன்னை அழைப்பிப்பேன்' என்று அவரிடம் கூறினான் (அப். 24 : 25-Eng.). அந்த 'வசதியான சமயம்' ஒருபோதும் வரவே இல்லை. தன்னுடைய நித்தியத்தைப் பாழாக்கின அந்தத் தாமதத்தின் ஆவிக்காக பேலிக்ஸ் மறுமையில் நரகத்திலே சதாகாலமும் மனஸ்தாபப்பட்டுக்கொண்டே இருப்பான்!

'நான் மனந்திரும்புவதற்குக் காலங்கடந்துபோயிற்றே! நான் கிறிஸ்துவிடம் வருவதற்குக் காலங்கடந்துபோயிற்றே!' - இவை போன்ற மன வியாகுலங்களால் நிறைந்ததுதான் நரகம்! சிலர் தாங்கள் செய்த காலதாமதத்தினிமித்தம் தங்கள் நித்தியம் முழுவதையுமே அழுகையில் செலவழிக்கப்போகிறார்கள். அன்பார்ந்த வாசகரே! உமது நித்தியத்தை உமது 'சோம்பலின் ஆவி' பாழாக்கிவிடாதிருப்பதாக! நீர் இன்றைய தினம் ஏதாகிலும் செய்ய வேண்டும் என தேவன் விரும்புவாராயின், அதை நாளைக்கென்று தள்ளிப்போட வேண்டாம். தமக்கு ஊழியம் செய்யும்படி உம்மை அவர் அழைப்பாரானால், அவரது அழைப்புக்கு **இப்போதே** கீழ்ப்படிவீராக!

மீட்கத்தக்க காலம் இதுவே!

கொரியா தேசத்தைச் சேர்ந்த ஒரு கிறிஸ்தவப் பெண்மணி ஒருமுறை ஒரு தரிசனம் கண்டாள். அதில் அவள் நரகத்தைச் சுற்றிப் பார்க்கும்படி தான் அங்கு எடுத்துச்செல்லப்படுவதாகக் கண்டாள். அவள் நின்று நரகத்தினுள் உற்று நோக்கிப் பார்த்துக்கொண்டிருந்த போது, தன்னுடைய சொந்தத் தாயார் அங்கு அக்கினியில் எரிந்து கொண்டிருப்பதைக் கண்டு, பெரும் அதிர்ச்சிக்குள்ளானாள். தன்னுடைய மகள் தூரத்தில் நிற்பதைக் கண்ட தாயார், நரக அக்கினியை விட்டு தன்னை வெளியே கொண்டுவர அவள் ஏதாவது முயற்சி எடுக்க வேண்டும், அல்லது குறைந்தபட்சம், கொழுந்துவிட்டு எரிகிற அத்தீயினின்று சற்று நேரத்திற்காகிலும் அவள் தன்னை விடுவிக்க வேண்டும் என்று பரிதாபமான குரலில் கெஞ்ச ஆரம்பித்தார்கள். மகள் அழ ஆரம்பித்தாள்; ஏனெனில் எந்தக் காலத்திலும் யாதொரு காரணத்தை முன்னிட்டும் நரகத்திலுள்ள எந்தவொரு நபரையும் வெளியே கொண்டுவர இயலாது என்பதை அவள் மிகவும் நன்றாய் அறிந்திருந்தாள்.

அந்தக் கிறிஸ்தவப் பெண்மணி கண்ட தரிசனம் மெய்யாகவே அவளை அசைத்துவிட்டது. கிறிஸ்துவுக்கென்று ஆத்துமாக்களை ஆதாயப்படுத்தி, தன்னுடைய தாயார் கடந்து சென்றுகொண்டிருந்த பயங்கரமான வேதனைக்குள்ளாகாதவாறு அவர்களைப் பாதுகாக்க தன்னால் இயன்ற எல்லாவற்றையும் தேவகிருபையினால் செய்யும்படி அவள் தீர்மானித்தாள். முதலாவது தன்னுடைய புருஷனையும், பின்பு தன்னுடைய பிள்ளைகளையும், இன்னும் அநேகரையும் அவள் இரட்சிப்புக்கு நேராக வழிநடத்தினாள்.

அழிந்துபோகிற ஆத்துமாக்களைக் குறித்து உனக்கு மனதுருக்கம் உண்டா? ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப்பட்ட ஆத்துமாக்கள் நித்தியம் முழுவதும் விவரிக்க இயலாத நரக அக்கினியில் பாடுபடப்போகிறார்கள் என்பதை நீ உணருகிறாயா? அழிந்துகொண்டிருக்கும் இலட்சக்கணக்கான ஆத்துமாக்களை இரட்சிப்புக்கு நேராக வழிநடத்தும்படி மறுபடியும் பிறந்த ஒவ்வொரு கிறிஸ்தவனும் ஓர் அர்ப்பணிக்கப்பட்ட சுவிசேஷ ஊழியனாகத் திகழ்வானாக.

நற்கந்தமாய்த் திகழ்வீர்!

பதினேழு வயது நிரம்பிய ஒரு பெண்பிள்ளை மரித்து கர்த்தரோடு இருக்கும்படியாகச் சென்றாள். அவளுடைய ஜீவியம் சுகந்த வாசனை உள்ளதாகவும், கனிக்கொடுக்கக்கூடிய ஒன்றாகவும் இருந்தது; தன்னுடைய வாழ்க்கையின் வாலிபப் பருவத்தில் அவள் எடுத்துக் கொள்ளப்பட்டதைக் குறித்து அனைவரும் துக்கமடைந்தனர். கர்த்தர் ஏன் அவளை அவ்வளவு இளம் வயதிலேயே எடுத்துக்கொண்டார் என்று ஒரு விசுவாசி கர்த்தரிடம் கேட்டார். அப்பொழுது அவர் ஒரு சொப்பனம் கண்டார். அதில் அந்தப் பெண்பிள்ளை பரலோகத்திலிருந்தாள்; அவளை ஒரு தேவதூதன் மற்றொரு தேவதூதனுக்கு அறிமுகப்படுத்திக்கொண்டிருந்தான். 'இவளுக்கு எண்பத்தைந்து வயது' என்று அத்தூதன் சொல்லிக்கொண்டிருந்தான். அப்பொழுது அந்த விசுவாசி நித்திரையினின்று விழித்துக்கொண்டார்; கர்த்தர் அவரிடம், "அவள் சரீரப்பிரகாரமாகப் பதினேழு வயதுள்ளவளாக இருந்தாள்; ஆகிலும், ஆவிக்குரிய பிரகாரமாக அவள் 'பூரண வயதை' அடைந்து விட்டாள். நான் என்னுடைய வேலையை அவளில் செய்து முடித்து விட்டேன்; அவள் தன்னுடைய ஜீவியத்தின் வேலையை முடித்து விட்டாள்" என்று கூறினார்.

கர்வாலி மரம் ஆயிரம் வருடங்கள் உயிர் வாழ்ந்தாலும் அதற்கு அழகுமில்லை, சுகந்த வாசனையுமில்லை. ரோஜா மலர் குறைந்த நாட்களே வாழ்ந்தாலும் அது அழகுள்ளதாக இருப்பதோடு, அருமையான வாசனையும் வீசுகிறது. **நாம் இவ்வுலகில் எவ்வளவு நாட்கள் ஜீவிக்கிறோம் என்பது ஒரு பொருட்டல்ல. நம்முடைய ஜீவிய நாட்களெல்லாம் பரிசுத்தத்தின் அழகினாலும் தெய்வீக சுபாவத்தின் வாசனையினாலும் நிறைந்திருக்க வேண்டும். நம்முடைய ஜீவியமே நம் நித்தியத்தை நிர்ணயிக்கும்!**

ரோஜா மலரைச் சுற்றிலும் எப்பக்கத்திலும் முட்கள் இருக்கின்றன. காற்று வீசும்போது, அதன் மென்மையான இதழ்கள் முட்களால் குத்தப்படுகின்றன. அதற்குப் பதிலாக ரோஜா மலர் என்னத்தைக் கொடுக்கிறது? அது சுகந்த வாசனையையே அளிக்கிறது. கோணலும் மாறுபாடுமான ஜனங்கள் மத்தியில், நம்மைக் குத்திப் புண்படுத்தும் ஜனங்கள் மத்தியில், நேசிக்க முடியாத ஜனங்கள் மத்தியில்தான் நாம் ஜீவிக்கிறோம்; மன்னிக்கிற அன்பு, தயவு என்னும் நறுமணங்களினால் அவர்களுடைய ஜீவியங்களுக்கு நாம் நறுமண மூட்ட வேண்டும்.

கிறிஸ்தவ ஜீவியம் என்பது உலகிற்குக் கிறிஸ்துவையும் கிறிஸ்துவின் சாயலையும் வெளிப்படுத்தும் ஜீவியமாக இருப்பதால், அது மெய்யாகவே அழகு நிறைந்ததும், வாசனை வீசுவதுமான ஒரு ஜீவியமாகும். "எல்லா இடங்களிலேயும் எங்களைக்கொண்டு அவரை அறிகிற அறிவின் வாசனையை வெளிப்படுத்துகிற தேவனுக்கு ஸ்தோத்திரம்" (IIகொரி. 2 : 14). ஆகவே, தேவனுடைய பிள்ளையே, கிறிஸ்து உன்னுடைய ஜீவியத்தை நிரப்புவாராக. அவரின்றி உனக்கு யாதொரு பரிசுத்தமும் அழகும் இல்லை. அவர் உன்னிலிருந்து பிரகாசிப்பாராக.

ரோஜா மலரானது ஒரு மூலையில் இருந்தாலுங்கூட, வண்ணத்துப் பூச்சிகளும் தேனீக்களும் அதனைத் தேடி வருகின்றன. அது அவற்றை நாடிச் செல்ல வேண்டிய அவசியமே இல்லை. அது போன்றே நாம் கிறிஸ்துவின் சாயலை உடையவர்களாயிருப்போமாயின், தேவ அன்பை ருசிக்கும்படி ஆத்துமாக்கள் நம்மண்டை திரளாக வருவார்கள்.

அருமையான வாசகரே, தேவனுடைய தோட்டமாகிய சபையில் இன்று நீர் ஒரு முள்ளைப் போல் இருக்கக் கூடும். ஆயினும், நம்முடைய கிருபையுள்ள கர்த்தரால் உம்மை வாசனையும் தேனும் நிறைந்த ஒரு ரோஜா மலராக மாற்ற முடியும். அதற்கான ஒரே நிபந்தனை, நீர் மனஸ்தாபத்துடன் அவரிடம் திரும்புவது மட்டுமே!

மகிமையான முடிவு

பாஸ்டர் K.T.டேனியேல் என்ற ஒரு பரிசுத்தவான் கோயம்புத்தூரில் கர்த்தருக்கு ஊழியம் செய்துகொண்டிருந்தார். அவர் 1961-ஆம் ஆண்டு மரணத் தருவாயிலானார். தான் மரிக்க வேண்டிய வேளை வந்தபோது அவர் தனது படுக்கையிலிருந்து எழுந்து அமர்ந்து கொண்டு, விசுவாச வீட்டிலிருந்த அனைவரையும் தன்னிடத்தில் அழைத்து, 'இன்னும் சுமார் அரை மணி நேரத்தில் என்னுடைய இரதம் பரத்திலிருந்து இறங்கி வரும்' என்றார். அதைத் தொடர்ந்து அவர், "பரிசுத்தவான்களுக்கு ஒருவிசை ஒப்புக்கொடுக்கப்பட்ட விசுவாசத்திற்காகத் தைரியமாய்ப் போராடுங்கள்" (யூதா 3) என்ற வசனத்தின் அடிப்படையில், விசுவாசத்திற்காகப் போராடுவதைப் பற்றி அவர்களுக்கு மிக நேர்த்தியானதொரு சிறிய வேதபாடம் அளித்தார். அதில் விசுவாசத்தில் ஜீவித்தல், விசுவாசத்தில் மரித்தல், மகா பரிசுத்த விசுவாசம் போன்றவற்றைப் பற்றி அவர் போதித்தார். பின்பு அவர்கள் ஒவ்வொருவருக்காகவும் அவர் தனித்தனியே ஜெபித்தார். அவர்களுக்காக அவர் ஏறெடுத்த ஜெபத்தில் அவர்களைத் தைரியப்படுத்தும் வார்த்தைகளே வெளிப்பட்டன. அதற்குப் பின், 'இன்னும் பத்து நிமிடங்களில் என் இரதம் வந்துவிடும்' என்று கூறிக்கொண்டே தன் படுக்கையில் அவர் படுத்துக்கொண்டார். பின்பு அவர், 'இன்னும் ஐந்து நிமிடங்களே உள்ளன' என்றார். அவர் உரைத்தபடியே ஐந்து நிமிடங்கள் கடந்தவுடன் அவர் வெற்றிகரமாகக் கர்த்தரின் பாதம் அடைந்தார். அதே வேளையில் கேரளாவிலிருந்த ஒரு விசுவாசி சகோதரனுக்கு ஒரு தரிசனம் உண்டாயிற்று. அதில் வானம் திறக்கப்பட்டது. பரலோகத்தின் ராஜபாதையின் இரு ஓரங்களிலும் வெண்ணுடை தரித்த தேவதூதர்கள் திரளாகக் குழுமியிருந்தனர். 'நீங்கள் யாவரும் இவ்விதமாக இங்கு திரண்டு நிற்பதின் காரணம் என்ன?' என அவர் அத்தூதனிடம் வினவினார். 'ராஜாவானவர் இவ்வழியே வருகிறார். அதினிமித்தமாகவே நாங்கள் யாவரும் இங்கு குழுமி நிற்கிறோம்' என்று அவர்கள் பதிலளித்தனர். 'ராஜாவானவர் எதற்காக வருகிறார்?' என அவர் வினவியபோது, 'இன்று பரலோகத்திற்கு வரவிருக்கிற ஒரு பரிசுத்தவானை வரவேற்பதற்காகவே ராஜாவானவர் இங்கு வருகிறார்' என்று அவர்கள் விடை பகர்ந்தனர். அதிக தாமதமின்றியே, பரலோக இன்னிசைக் குழுவின் மங்கள கீதம் எத்திக்கும் முழங்க, மகாராஜாவாகிய இயேசு மகிமை பொருந்திய ஓர் இரதத்தில் வருவதையும், மறுபக்கத்திலிருந்து பொன்மயமான ஒரு இரதம் ஒரு பரிசுத்தவானைச் சுமந்துகொண்டு வருவதையும் அவர் கண்டார். அவர் யார் என்று அச்சகோதரன் உற்று நோக்கியபோது, அவர் பாஸ்டர் K.T. டேனியேல் என்பதைக் கண்டறிந்தார். மறுநாள் அவர் தன்னுடைய பகுதியிலிருந்த விசுவாசவீட்டிற்குச்

சென்றபோதுதான் கோயம்புத்தூரில் ஊழியம் செய்துகொண்டிருந்த பாஸ்டர் K.T. டேனியேல் அவர்கள் முந்தின இரவு மகிமைக்குள் பிரவேசித்து விட்டார் என்ற செய்தி அவருக்குக் கிடைத்தது. பாஸ்டர் அவர்கள், 'என்னுடைய இரதம் வருகிறது' என கூறிய வண்ணமாகவே, அச்சகோதரனும் அவர் ஒரு பொன்மயமான இரதத்தில் பரலோகத்தினுள் வரவேற்கப்பட்டதாகத் தன் தரிசனத்தில் தெளிவாகக் கண்டார். அப்பரிசுத்தவானின் ஜீவிய காலம் மாத்திரமல்ல, அவரது கடைசி நிமிடங்களும் மகிமையினாலும் விசுவாசத்தினாலும் நிறைந்தவையாக இருந்தன!

பூரணமாக்கப்படாத தேவபிள்ளைகள் மரிக்கும்போது அவர்களைப் பரலோகத்திற்குக் கொண்டு செல்லும்படி ஓரிரு தேவதூதர்கள் வரக் கூடும்; ஆனால் ஜெயங்கொண்ட ஒரு பரிசுத்தவான் மரிக்கும்போது ஆண்டவராகிய இயேசுதாமே தமது பரிசுத்த தூதரின் திரளோடு அந்நபரை விண்ணுலகிற்கு வரவேற்க வருகிறார்! உதாரணமாக, லூக்கா 16-ஆம் அதிகாரத்தில் கூறப்பட்டுள்ள ஐசுவரியவானின் வாசலருகே கிடந்து, தேவனுடைய பிள்ளையாக ஜீவித்துக்கொண்டிருந்த ஏழை லாசரு மரணமடைந்த போது, அவனைக் கொண்டுசெல்லும்படி தேவதூதர்கள் வந்ததாக நாம் வாசிக்கிறோம் (வச. 22). ஆனால் ஜெயங்கொண்ட பரிசுத்தவானாகிய ஸ்தேவான் மரித்தபோதோ, பரமபிதாவின் வலதுபாரிசத்தில் வீற்றிருந்த கர்த்தராகிய இயேசு அவனை வரவேற்க எழுந்து நிற்பதை அவன் கண்டான். தன்னை வரவேற்கும்படி வந்த தனதருமை ஆண்டவரின் கரங்களில் அவன் தன் ஆவியை ஒப்புவித்து, பரலோகத்திற்குள் பிரவேசித்தான் (அப். 7 : 55 — 60).

தருணத்தைத் தவறவிடாதே!

ஒரு தேவபிள்ளை சுவிசேஷக் கைப்பிரதிகளை விநியோகம் செய்துகொண்டு சாலைகளில் சென்றுகொண்டிருந்தபோது, ஒரு வீட்டின் கதவைத் தட்டினார். சிறிது நேரத்திற்குப் பின்னர் ஒரு மனிதன் கதவைத் திறந்தான். அந்தக் கிறிஸ்தவர் அம்மனிதனிடம் ஒரு கைப்பிரதியைக் கொடுத்தார். அம்மனிதனோ மிகுந்த கோபத்துடன் அவர் கையினின்று அப்பிரதியைப் பறித்துக்கொண்டு, அவருடைய முகத்துக்கு நேராகக் கதவை ஆத்திரமாக அடைத்துவிட்டான். அம்மனிதன் ஏன் அவ்வாறு கோபத்துடனும் சலிப்புடனும் நடந்து கொண்டானென அறிய ஆவல்கொண்ட அக்கிறிஸ்தவர் சில நாட்களுக்குப் பின்னர் அவனுடைய வீட்டிற்குச் சென்றார். ஆனால் இம்முறை அம்மனிதன் கதவைத் திறந்தபோது அவனது முகத்தில் புன்முறுவல் காணப்பட்டது. அவன் மலர்ந்த முகத்துடன் அந்தக் கிறிஸ்தவரைத் தன் வீட்டிற்குள் வரவேற்று, சில நாட்களுக்கு முன்னர் தான் நான்றுகொண்டு மரிக்கும்படி ஒரு கயிற்றைக் கட்டியிருந்த மின் விசிறியைச் சுட்டிக்காண்பித்து, பின்வருமாறு கூறினான்: "அந்த நாளில் வாசல் மணி ஒலித்த அந்நேரத்தில், நான் அக்கயிற்றிலிருந்த சுருக்கில் என் தலையை நுழைத்துக்கொண்டிருந்தேன்; 'எப்படியும் நான் சாகத் தானே போகிறேன்! அதற்கு முன் வெளியே நிற்பது யாரென்று பார்த்துவிட்டு, பின்னர் என் தற்கொலை திட்டத்தைத் தொடரலாம்' என எண்ணி, நான் வாசற் கதவைத் திறந்தேன்; வெளியே கைப்பிரதியுடன் நிற்கும் ஒரு மனிதனைக் கண்டபோது எனக்குக் கோபம் மூண்டது. நான் மிகுந்த ஆத்திரத்துடன் அந்தப் பிரதியைக் கசக்கிக் குப்பைக்கூடைக்குள் போடவிருந்தபோது, அதிலிருந்த **'நீ விசேஷமான ஒரு நபர்'** என்ற வார்த்தைகள் என் கண்களில் பட்டன. அந்தப் பிரதியில் என்னதான் இருக்கிறது என்று நான் அதை மேலோட்டமாகப் பார்த்தேன். பின்னர் அதை நான் நிதானமாக வாசித்தபோது ஒரு ஒளி என் உள்ளத்தில் உதித்தது. என் வாழ்க்கையை நான் கர்த்தருக்கு ஒப்புக்கொடுத்து, என் மதியீனமான திட்டங்கள் அனைத்தையும் விட்டுவிட்டேன்".

அருமையானவர்களே, நரக அக்கினியிலிருந்து ஒரு ஆத்துமாவையாகிலும் மீட்க நாம் செய்யும் எப்படிப்பட்ட தியாகமும் தகுதியானதே. ஆகவே, கர்த்தர் தரும் ஒவ்வொரு தருணத்தையும் பயன்படுத்தி, நரகத்தை நோக்கி விரைந்து சென்றுகொண்டிருக்கும் ஆத்துமாக்களை நரக அக்கினிக்குத் தப்புவியுங்கள்!

அனுமதிச் சீட்டு எங்கே?

ஒரு தேவபிள்ளை தன் தரிசனத்தில் ஏராளம் பேர் பரலோகத்தை நோக்கி ஓடிக்கொண்டிருப்பதைக் கண்டார்கள். அவர்கள் யாவரும் நீண்ட தூரம் ஓடி ஓடி, முடிவாகப் பரலோகத்தின் வாசலை அடைந்தனர். தங்கள் நீண்ட காலப் பயணத்தின் முடிவில், தாங்கள் நாடிவந்த இலக்கை வந்தெட்டிவிட்டதைக் கண்டு, அவர்கள் மிகவும் அகமகிழ்ந்தனர். ஆவலுடன் அவர்கள் உட்பிரவேசிக்கப் போகையில் அதன் நுழைவாயிலில் நின்று கொண்டிருந்த தேவதூதர்கள், 'நீங்கள் இவ்வளவு தூரம் ஓடி வந்தது நல்லதுதான்; ஆயினும் நீங்கள் உட்பிரவேசிப்பதற்கான அனுமதிச் சீட்டு எங்கே?' என்று கேட்டனர். தாங்கள் சற்றும் எதிர்பார்த்திராத இக்கேள்வியைக் கேட்டு, அவர்களில் பெரும்பாலானோரும் அதிர்ச்சியுற்று, திகைத்துப் போயினர். வெகு சிலரிடம் மாத்திரமே அவர்களிடம் எதிர்பார்க்கப் பட்ட அனுமதிச் சீட்டு இருந்தது. அவர்களுக்கு மாத்திரம் பரலோகத்தினுள் பிரவேசம் அளிக்கப்பட்டது. ராஜமரியாதையுடன் அவர்கள் பிதாவின் ராஜ்யத்திற்குள் வரவேற்கப்பட்டனர். மற்றவர்களோ வெட்கத்துடனும் துக்கத்துடனும் மனவேதனையுடனும் முகம் கறுத்துப்போனவர்களாய்ப் பின்னிட்டுத் திரும்பினர்! வெகு சிலரின் கரங்களில் இருந்த அனுமதிச் சீட்டில் இரு வார்த்தைகள் மாத்திரமே பொறிக்கப்பட்டிருந்தன. அவை **'தாழ்மை, தூய்மை'** (humility, purity) என்பவையே. ஆம்! "ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது" (மத். 5 : 3). "இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள்" (வச. 8). மற்ற அனைத்துத் திவ்ய சுபாவங்களும் இவ்விரு நற்பண்புகளுக்குள் அடங்கும். 'கிறிஸ்தவ ஜீவியத்தின் நீண்ட கால அனுபவமோ, இளைப்படையாத பிரயாசமோ, கிறிஸ்துவுக்காகச் செய்யப்படும் அரும்பெரும் சாதனைகளோ அல்ல, **சுபாவம் மறுரூபமாகுதலே** பரலோகத்திற்கு உன்னைத் தகுதியுள்ளவனாக்கும்' என்ற உண்மையைத் தேவன் அத்தேவபிள்ளைக்கு இத்தரிசனத்தின் வாயிலாக உணர்த்த விரும்பினார். ஆதலால் பிரியமானவர்களே, "அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள்" (பிலி. 2 : 12).

தேவவைராக்கியம் உண்டோ?

முன்னொரு காலத்தில் இங்கிலாந்து தேசத்தில் சார்லி பீஸ் (Charlie Peace) என்ற பேர்போன ஒரு குற்றவாளி இருந்தான். தேவனுடைய பிரமாணங்களோ, மனிதனுடைய சட்டதிட்டங்களோ அவனை அடக்கி வைக்க முடியவில்லை. முடிவாக ஒரு நாள் சட்டம் அவனைக் கையும்மெய்யுமாகப் பிடித்துச் சிறையிலடைத்தது; அவனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. மரண தண்டனை நிறைவேற்றப்பட வேண்டிய நாளன்று காலையில் லீட்ஸ் என்ற இடத்திலிருந்த ஆர்ம்லே சிறைச்சாலையிலிருந்து (Armely Jail, Leeds) அவன் கொலைக்களத்திற்கு நடத்திச் செல்லப்பட்டான். அத்தேசத்தில், ஒரு கைதி தூக்கிலிடப்படுமுன்னதாக சிறைச்சாலைப் பாதிரியார் வரவழைக்கப்பட்டு, அவர் சில வேதவசனங்களை அவற்றின் சுருக்கமான விளக்கங்களுடன் வாசித்துக்கொண்டே கொலைக் களத்திற்குச் செல்லும் அக்கைதிக்கு முன்பாக நடந்துசெல்வது வழக்கம். சிறைச்சாலைப் பாதிரியார், தான் வழக்கமாக வாசிக்கும் வேதபகுதிகளை யாதொரு உணர்வுமின்றி, ஏதோ மந்திரங்களை ஓதுவது போல தூக்கமயக்கத்துடன் வாசித்துக்கொண்டே சார்லிக்கு முன்பாக நடந்தார். குற்றவாளி அவரைத் தொட்டு, 'நீர் என்ன வாசிக்கிறீர்?' என்று வினவினான். 'மதம் தரும் ஆறுதல்கள்' என்று விடைபகர்ந்தார், அப்பாதிரியார். நரகத்தைக் குறித்து வாசிக்கையிலும் யாதொரு உணர்ச்சியும் அற்றவராக, தன் கடமையை நிறைவேற்று வதற்கென்று, ஒரு வாய்ப்பாட்டை ஒப்புவிப்பது போல அவர் வாசித்துக் கொண்டு செல்வதைக் கவனித்த சார்லி அதிர்ச்சியடைந்தான். தன்னோடுள்ள சக மனிதனைத் தூக்குமேடைக்கு வழிநடத்திச் சென்றுகொண்டிருக்கிற ஒரு மனிதன், அம்மேடையின் நிழல் தன் மேல் படுமளவிற்கு அக்குற்றவாளி அதை நெருங்கிக்கொண்டிருக்க, அவனுடைய ஆத்துமா சற்று நேரத்திற்குள் அடித்தளமே இல்லாத அகாதமான பாதாளக் குழியில் போய் விழ வேண்டியதாயிருக்கிறது என்ற செய்தியைக் கண்ணீரற்ற கண்களுடன் வாசிக்கக் கூடுமோ? அது பற்றி அவனுடைய இருதயத்தில் ஒரு சிறு சலனமும் உண்டாகாதோ? தனக்கு இரையாகிறவர்களை ஒருபோதும் எரித்துச் சாம்பலாக்கிவிடாமல், அவர்களை என்றென்றும் வேதனைக் குள்ளாகவே வைத்திருக்கும் ஒரு நித்திய அக்கினி உண்டு என்ற வார்த்தைகளை இந்தப் பிரசங்கியார் விசுவாசிக்கிறாரா? அப்படியானால் அந்த வார்த்தைகளை யாதொரு நடுக்கமுமின்றி இவ்வளவு தாராளமாக அவரால் எவ்விதம் வாசிக்க முடிகிறது? 'நீ நித்தியமாக வேதனை அனுபவித்துக்கொண்டே இருப்பாய், மரணத்தின் மூலம் ஒருவன் தான் அடைந்துகொள்ளப்போவதாக நினைக்கும் விடுதலையை நீ ஒருபோதும் அனுபவித்தறியமாட்டாய்' என்ற வார்த்தைகளை மரிக்கப்போகிற ஒருவனுக்கு யாதொரு கண்ணீரும்

இன்றி வாசித்துக் காட்டும் நபர் ஒரு மனிதனா? . . . . . இவையெல்லாம் சார்லிக்கு கிரகித்துக்கொள்ளவே முடியாதவையாகத் தென்பட்டன. ஆகவே அவன் இப்போது அப்பாதிரியாருக்குப் பிரசங்கம்பண்ணுகிறான். தான் நரக பாதாளத்தைச் சென்றடைவதற்குச் சற்று முன்னர் அவன் செய்த பிரசங்கத்தைக் கவனமாகக் கேளுங்கள்!

'ஐயா' என்று அவன் அந்தப் பாதிரியாரை அழைத்து, 'நீங்களும் தேவனுடைய சபையும் விசுவாசிப்பதாகக் கூறுபவைகளை (ஆத்துமா நித்தியமானது; ஒரு நித்திய நியாயத்தீர்ப்பும் நித்திய நரகமும் உண்டு போன்றவை) நான் விசுவாசித்திருந்தால், இங்கிலாந்து தேசத்தின் ஒரு கரை முதல் மறுகரை வரை அதன் வீதிகள் யாவும் முழுவதுமாகக் கண்ணாடித் துண்டுகளால் மூடப்பட்டதாயிருந்திருந்தாலுங்கூட, நான் அவற்றின் மேல் நடந்து சென்று, தேவைப்பட்டால் என் கைகளாலும் முழங்கால்களாலும் அவற்றின் மேல் தவழ்ந்தும் சென்று, அவற்றைக் குறித்து அறிவித்து, அவ்விதம் பிரயாசப்படுவதன் வாயிலாக அப்படிப்பட்ட நித்திய நரகத்தினின்று ஒரே ஒரு ஆத்துமாவையாகிலும் என்னால் இரட்சிக்கக் கூடுமானால், அதையே வாழத் தகுந்த ஒரு வாழ்க்கை என்று எண்ணியிருந்திருப்பேன்' என்று கூறினான். குற்றவாளி அளித்த இப்போதனை பாதிரியாரைத் தட்டியெழுப்பிற்று.

மேன்மையான இரட்சிப்பின் அனுபவத்தைப் பெற்றிருக்கும் அருமையான தேவபிள்ளையே, நீ என்ன செய்துகொண்டிருக்கிறாய்? கர்த்தரிடத்திலிருந்து இவ்வளவு பெரிய இரட்சிப்பை இலவசமாகப் பெற்றிருக்கிற நீ இப்பெரும் பாக்கியத்தைக் குறித்துப் பிறருக்கு அறிவிக்க அசதியாய் இருக்கிறாயோ? நித்திய அழிவை நோக்கி விரைந்து சென்றுகொண்டிருக்கும் ஆத்துமாக்களுக்கு நித்திய மீட்பைப் பற்றி அறிவித்து, அவர்களை நரகக் குழியினின்று தப்புவிக்க வேண்டிய மாபெரும் உத்தரவாதம் உன் மேல் இருக்கிறது என்பதை நீ மறவாதே. கடும் பஞ்சத்தில் வாடிக்கொண்டிருந்த தங்கள் தேசத்தாருக்குக் கிடைத்திருந்த பெரும் விடுதலையைப் பற்றி சொல்வதற்குத் தாமதம்பண்ணிக்கொண்டிருந்த குஷ்டரோகிகள் ஒருவரோடொருவர் சொல்லிக்கொண்டது என்ன? "நாம் செய்கிறது நியாயமல்ல. இந்நாள் நற்செய்தி அறிவிக்கும் நாள்; நாம் மவுனமாயிருந்து, பொழுது விடியுமட்டும் காத்திருந்தால் குற்றம் நம்மேல் சுமரும். இப்போதும் நாம் போய் ராஜாவின் அரமனையாருக்கு இதை அறிவிப்போம் வாருங்கள்" (II இராஜா. 7 : 9) என்பதே! ஆம்! குற்றம் நம் மேல் சுமராதபடி இன்றே நாம் நம்முடைய உத்தரவாதத்தைக் குறித்து விழிப்புணர்வடைவோமாக.

நீ என்ன செய்துகொண்டிருக்கிறாய்?

ஸ்காட்லாந்து தேசத்தைச் சேர்ந்த ஏமி கார்மைக்கேல் (Amy Carmichael) அம்மையார், தென்னிந்தியாவுக்கு ஒரு மிஷனரியாக வந்து, கர்த்தரின் சேவையில் தன் ஜீவனை ஊற்றி மரித்தார்கள். இப்படி அவர்கள் தன்னைப் பலியாக்கும்படி அவர்களைத் தூண்டியது, அவர்கள் கண்ட ஒரு தரிசனமாகும். அத்தரிசனமாவது: சுற்றுலாக்குழு ஒன்றுடன் சேர்ந்து அவர்கள் ஒரு பூங்காவில் உல்லாசமாக அமர்ந்திருந்தார்கள். அனைவரும் குதூகலமாகக் கிறிஸ்தவப் பாடல் களைப் பாடிக்கொண்டு, தங்கள் உணவுப்பொட்டலங்களைப் பிரித்து ஒருவருக்கொருவர் உணவுப்பொருட்களைப் பரிமாறிக்கொண்டு, இன்பமாகப் பொழுதுபோக்கிக்கொண்டிருந்தனர். அவர்களுக்குச் சற்று தொலைவில் ஒரு குன்று இருந்தது. அதன் மறுபகுதி ஒரு செங்குத்தான பாறையாயிருந்தது. ஒரு கூட்டம் குருடர்கள் ஒருவர் பின் ஒருவராக வரிசையாக அக்குன்றின் மேல் ஏறிச் சென்றுகொண்டிருந்தனர். முதல் நபர் அதன் முகப்பு மட்டும் ஏறிச் சென்று, அது செங்குத்தான பாறை என அறியாமல் அடுத்த அடியெடுத்து வைக்கவே, மிக உயரத்திலிருந்து தலைகீழாக விழுந்து, தலை உடைந்து, உடல் சின்னபின்னமாகச் சிதறி, பரிதாபமாக மாண்டான். அவனைத் தொடர்ந்து வந்தவனும், முந்தினவனுக்குச் சம்பவித்ததை அறியாமல் அவ்விதமாகவே விழுந்து மாண்டான். இவ்விதமாக அவர்கள் அனைவரும் ஒருவர் பின் ஒருவராக மடிந்துகொண்டிருந்தனர். தங்கள் கண்களுக்கு முன்பாக நடந்துகொண்டிருந்த இக்கோரக் காட்சியைக் கண்டும், இக்கிறிஸ்தவ உல்லாசப் பயணிகளில் ஒருவராவது அது சரியான வழி அல்ல என்று அவர்களைத் தடுக்கவோ, சரியான வழியை அவர்களுக்குக் காட்டவோ அக்கறை கொள்ளவில்லை. தங்கள் உல்லாசமான பொழுதுபோக்கிலேயே அவர்கள் இன்பமாக ஈடுபட்டிருந்தனர். 'எண்ணற்றவர்கள் நரக பாதாளத்தை நோக்கி விரைந்து சென்றுகொண்டிருக்கும்போது, நீயோ நிர்விசாரமாக, சுகபோகமாக உன் காலத்தைக் கழித்துக்கொண்டிருக்கிறாயே!' என்று இத்தரிசனத்தின் மூலமாகத் தேவன் அவ்வம்மையாருக்கு உணர்த்தினார். இதுவே அவர்களுடைய ஜீவியத்தின் திருப்புமுனையாய் அமைந்தது. அவர்களுடைய தியாகத்தின் பலனை இன்றும் நாம் காண்கிறோம். அருமையான தேவபிள்ளையே! இப்போது நீ என்ன செய்துகொண்டிருக்கிறாய்? உனக்கு ஒரே ஒரு வாழ்க்கை மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளது. அது வெகுவிரைவில் கடந்துபோய்விடும். ஆகவே இக்குறுகிய காலத்துக்குள் உன்னோடு தொடர்புகொள்ளும் எந்த நபரும் நித்திய நரகத்திற்குள்ளாகாதவாறு நீயும் இத்தகைய ஆத்தும பாரத்துடன் செயல்படுவாயாக.

நீ எங்கே போகிறாய்?

பண்டைக் காலத்தில் ராஜ அரண்மனைகளில் நகைச்சுவையுடன் பேசி, ராஜாவையும் மற்றவர்களையும் மகிழ்விக்கும் விகடர்கள் இருந்தனர் என நாம் கேள்வியுற்றிருக்கிறோம் அல்லவா? ஒரு ராஜ அரண்மனையில் இவ்விதமான ஒரு விகடன் இருந்தான். அவன் சில சமயங்களில் மிக மதியீனமாகவும், சில சமயங்களில் மிக புத்திசாலித்தனமாகவும் பேசுவான். ஒரு நாள் அவன் மிக புத்தியீனமாக ஏதோ ஒன்றைச் சொன்னான். அப்போது ராஜா அவனிடம் ஒரு கோலைக் கொடுத்து, 'உலகிலேயே முதல் தரமான முட்டாள் நீ தான்; உன்னைப் பார்க்கிலும் பெரிய முட்டாளை நீ கண்டுபிடித்தால் இக்கோலை அவனிடம் நீ கொடுத்துவிடலாம்' என்று கூறினான். கோலைப் பெற்றுக்கொண்ட விகடன், தன்னைப் பார்க்கிலும் பெரிய மதியீனனைத் தேடும்படி புறப்பட்டான்.

வருடங்கள் சில கடந்தன. ராஜா அதிக வியாதிப்பட்டு, மரணத் தருவாயிலானார். ராஜா மரணத் தருவாயிலிருப்பதைக் கேள்வியுற்ற விகடன், அவரைப் பார்க்கும்படி ஆவலுடன் அரண்மனைக்கு விரைந்து வந்தான். ராஜாவின் நிலைமை மிகவும் மோசமானபோது, ராஜ அணியிலிருந்தவர்களும், அவருடைய குடும்பத்தாரும், ராஜ அரண்மனையிலிருந்த வேலையாட்கள் உட்பட அனைவரும் ராஜாவின் அருகே வரவழைக்கப்பட்டனர். அப்போது ராஜா அவர்கள் அனைவரையும் பார்த்து, மிக மெல்லிய தழுதழுத்த குரலில், 'நான் உங்களெல்லாரையும் விட்டு ஒரு நீண்ட பிரயாணம் போகிறேன். நான் இனி இந்த இடத்திற்குத் திரும்பி வரமாட்டேன். உங்களிடமிருந்து விடைபெற்றுச் செல்லும்படியாகவே உங்களை அழைத்தேன்' என்று கூறினார். யாவரும் துக்கத்துடன் மௌனமாக நின்றனர். அப்போது இந்த விகடன் ராஜாவுக்கு முன் வந்து நின்று, படபடப்புடன், 'ராஜாவே! நீர் நீண்ட பயணம் செல்வதாகச் சொல்கிறீரே! நீர் நம்முடைய நாட்டிலிருந்து எங்கு சென்றாலும் நீர் போகும் இடத்தை எங்களுக்குச் சொல்லிவிட்டுச் செல்வது வழக்கமாயிற்றே! இப்போது எங்கே போகிறீர்?' என்று கேட்டான். ராஜா அவனுக்கு மறுமொழியாக, 'நான் எங்கே போகிறேனோ! எனக்குத் தெரியாது' என்றான். அப்போது அவன் தன்னிடத்தில் ராஜா கொடுத்திருந்த கோலை அவரிடத்திற்கு நீட்டி, 'இந்தக் கோலை நீரே வாங்கிக்கொள்ளும்; தான் எங்கே போகிறான் என்ற நிச்சயமில்லாமலே - தன் பயணத்திற்கு ஒரு இலக்கு இல்லாமலே - நீண்ட பயணத்தை மேற்கொள்ளும் ஒருவனைக் காட்டிலும் பெரிய மதியீனன் வேறு யாரும் இருக்க முடியாது' என்று கூறினான். அவ்விகடன் கூறியது நம்மை ஆழ்ந்து சிந்திக்கச் செய்கிறதன்றோ?

சகலமும் மாறி மறைந்துபோகும் மாயையான ஓர் உலகில் நாம் ஜீவித்துக்கொண்டிருக்கிறோம். இவ்வுலகில் பிறந்த எவரும் ஒரு நாள் மரிப்பது திண்ணம். மரணம் ஒரு மனிதனைச் சந்திக்கும் நேரம் அவனது வயதையோ, சரீர ஆரோக்கியத்தையோ, வசதியையோ சார்ந்தது அல்ல. இவ்வுலகில் நாம் என்னத்தை ஆதாயப்படுத்திக் கொண்டாலும், நம் ஆத்துமாவை நஷ்டப்படுத்திவிட்டால், அது நித்தியமான பேரிழப்பாகவும் வேதனையாகவுமே இருக்கும்! எனவே அற்ப காலம் மாத்திரமே நீடிக்கும் நம் பூவுலக வாழ்வினில் நாம் நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக்கொள்ள நாடுவோமாக. வாலிபனே, நீ எதை நோக்கி ஓடிக்கொண்டிருக்கிறாய், உன் இலக்கு என்ன என்பதைப் பற்றிய நிச்சயம் உனக்கு உண்டா? **இன்று நீ மரித்தால் நித்தியத்தை எங்கே செலவழிப்பாய்?** ஒரு ராஜ்யத்தின் மன்னனாக, இப்பூமியில் பல மேன்மைகளை உடையவனாயிருந்தும், தன் மரணத்திற்குப் பின் தான் எங்கே போகப்போகிறான் என்பதைக் குறித்த நிச்சயமற்றவனாய், மதியற்றவனாயிருந்த அம்மன்னனைப் போல் நீ இராதே. மறுமையில் மனிதனுக்கு உள்ள நித்தியமான வாழ்க்கையோடு ஒப்பிடுங்கால், அவனது இவ்வுலக வாழ்க்கையானது, நீண்ட நேரம் நிலைத்திருக்கக் கூடாமல் மாய்ந்துபோகும் ஒரு நீர்க்குமிழி போன்றதே. உனக்குக் கொடுக்கப்பட்டுள்ள இந்தச் சொற்ப காலத்தினுள் உன் நித்தியமான வருங்காலத்திற்காக உன்னை ஆயத்தப்படுத்திக் கொள்வாயாக. "நீதிமானோ தன் மரணத்திலே நம்பிக்கையுள்ளவன்" என திருவசனம் கூறுகிறது (நீதி. 14 : 32). உன்னுடைய மறுமையைக் குறித்த நம்பிக்கை உனக்கு உண்டா? நீ இவ்வுலகினின்று விடைபெற்றுச் செல்லும் நாளில், 'நான் பரலோக ராஜ்யத்திற்குப் போகிறேன்' என்று தைரியத்துடனும் சந்தோஷத்துடனும் உன்னால் கூறக் கூடுமோ? உன் தேவனைச் சந்திக்க நீ ஆயத்தமா? "நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார். ஆதலால், நீங்களும் ஆயத்தமாயிருங்கள்" என்று நமதாண்டவர் கூறிச் சென்றிருக்கிறாரே! (மத். 24 : 44). நீ எங்கே போகிறாய் என்ற நிச்சயத்துடன் உன் யாத்திரையைத் தொடருவாயாக.

"காலம் நிறைவேறிற்று, தேவனுடைய ராஜ்யம் சமீபமாயிற்று; மனந்திரும்பி, சுவிசேஷத்தை விசுவாசியுங்கள்" (மாற்கு 1 : 15).